
# பொன் விழா மலர்

## 50வது ஆண்டு நிறைவு
## 1958 - 2008



## கிறிஸ்த சேவ ஆச்சிரமம் - கிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா மலர்

## 50வது ஆண்டு நிறைவு

## 1958 - 2008

கிறிஸ்த சேவ ஆச்சிரமம்,
கிரான். இலங்கை
2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பொன் விழா மலர் |
| உப தலைப்பு | : | 50வது ஆண்டு நிறைவு |
| வெளியீடு | : | கிறிஸ்த சேவ ஆச்சிரமம், கிரான், இலங்கை. |
| வெளியீட்டுக்கான நிதி அனுசரணை : | | |
| | | உ வெஸ்லி அச்சகம், இலங்கை மெதடிஸ்த திருச்சபை |
| முதற்பதிப்பு | : | 2008 |
| வெளியீட்டு நாள் | : | 20 புரட்டாதி 2008 |
| பிரதிகள் | : | 1000 |
| அச்சகம் | : | ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு |

| | | |
|---|---|---|
| *Title* | : | **Golden Jubilee Issue** |
| | | **(PON VIZHA MALAR)** |
| *Sub Title* | : | **50th year completion** |
| *Publishers* | : | **Christa Seva Ashram, Kiran, Sri Lanka** |
| *Financial Assistance for Publication :* | | |
| | | **Wesley Press, Methodist Church of Sri Lanka.** |
| *First Edition* | : | **2008** |
| *Date of Publication* | : | **20 September 2008** |
| *Copies* | : | **1000** |
| *Press* | : | **Aathavan Press, Batticaloa** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

பற்றறுத்து, பாசமெனும் உறவு நீத்து
பரிவுடனே ஆச்சிரமம் தனையமைத்து
நற்றவம் சூழ் பெரியண்ணன், சின்னண்ணனாம்
நம்மரிய சாம் அண்ணல் அடியார்கட்கே
சிற்சபை சேர் இந்நூலைக் காணிக்கையாய்
சிரம் தாழ்த்தி அர்ப்பணித்தோம் புகழ் பூக்கவே
வற்றாத ஜீவநதி வனப்பில் பூத்த
வாகரிய ஆச்சிரமம் தனை நினைத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வண. சேவக். சுப்பிரமணியம் சாமுவேல் செல்வரத்தினம்

## ‘பெரியண்ணன்’

மூன்றாயிலங்கி முழுலோகம் தனைக்காக்கும்
ஆன்ற மெய்த் தேவன் தெரிந்த – சான்றோன்
மக்கள் வகுத்த இனவரம்பு பல கடந்து
மிக்க தவசான ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வண. சேவக். ஐசக் தம்பிஐயா இயேசுசகாயம்

# 'சின்னண்ணன்'

சிந்திக்கத் தூண்டும் சிரிப்பும் உவமைகளும்
சந்திக்கும் நல்ல தனி நடையில் – வந்திங்கு
புத்திக்கு எட்டாத கற்பனை பல தந்தோன்
எத்திக்கும் சாட்சி பகர்ந்தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வண. சேவக். சாமுவேல் தேவரத்தினம் அல்பிரட்

# ‘சாம் அண்ணன்’

அன்பால் அடியவர் பால் இன்பாகப் பேசி மனம்
தன்பால் கவரவைத்த ஞானி – இன்னமுதாய்
அரிய திருக்கொடையாம் ஆச்சிரமம் தந்தானை
இருகரமும் தூக்கித் தொழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | தலைப்புக்கள் | | பக்க இலக்கம |
|---|---|---|---|
| 1. | ஆச்சிரம பரிபாலன சபை 2008 | - | i |
| 2. | ஆசிச் செய்திகள் | - | ii - xiii |
| 3. | முன்னுரை | - | ix |
| 4. | ஆச்சிரமத்தாய் அன்புக் கலம்பகம் | - | 1 |
| 5. | கிறிஸ்த சேவ ஆச்சிரமம் - ஐம்பது ஆண்டுகள் | - | 7 |
| 6. | கிறிஸ்தவத் துறவறம் | - | 39 |
| 7. | கடவுள் உண்மையுள்ளவர் | - | 52 |
| 8. | கிறிஸ்தவ ஆச்சிரமத்தை நிறுவித் தொண்டுகள் ஆற்றிய அருட்துறவி | - | 57 |
| 9. | நீர் விட்ட வழி பின் தொடர்வோம் | - | 59 |
| 10. | அண்ணன்மார்களுடன் வாழ்ந்த சில காலம் | - | 61 |
| 11. | இயேசுவே அத்தனையும் நின்னருளே | - | 64 |
| 12. | ஆச்சிரமம் ஒரு உறவுப்பாலம் | - | 68 |
| 13. | கிரான் ஆச்சிரமத்தில் எமது வில்லுப்பாட்டு | - | 71 |
| 14. | இயேசு பெருமானின் அன்பை அவனியில் பரப்புவதில் தன் வாழ்வை அர்ப்பணித்த இயேசுசகாயம் அடிகள் | - | 74 |
| 15. | ஆச்சிரம உருவாக்கம் - அண்ணன்மாரின் சிந்தனை | - | 76 |
| 16. | இந்திய, கிறிஸ்தவ வருகையில் காலனித்துவ செல்வாக்கு | - | 78 |
| 17. | பந்தய ஓட்ட விசுவாச வீரன் | - | 85 |
| 18. | கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமம் நோக்கமும் தொண்டும் | - | 87 |
| 19. | பொன் விழா சிறப்புக் குழுக்கள் | - | 90 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்த சேவ ஆச்சிரமம், கிரான்

## பரிபாலன சபை

## செயற்குழு உறுப்பினர்கள்

## பொன் விழா ஆண்டு 2008

தலைவர் - அருட்பணி. சந்திரன் கிறிஸ்பஸ்
செயலாளர் - அருட்பணி. D.S.மதியாபரணம்
பொருளாளர் - அருட்பணி. G. அன்ரனி சதீஸ்

### நிர்வாகக்குழு

அருட்பணி. S.S. ஞானராஜா
அருட்பணி. E.P. சொலமன்ஸ்
திரு. T. கருணாகரன்
திரு. V. ஞானசூரியம்
திரு. றோய் மாணிக்கம்
திரு. A. ஜெயஜீவன்
திரு. C. அருமைநாயகம்
திரு. E. தேவமனோரஞ்சன்
திரு. S. சிறிகாந்த்
திரு. R.G. தயாளன்
திரு. S.J. தங்கராஜா
திரு. S.I. றெஜினோல்ட்
திரு. K. குழந்தைவேல்
திரு. நிமலசொர்ணன் சௌந்தரநாயகம்
திரு. T.D. நிதர்சன்
திரு. N. நிரோஷன் *(ஆச்சிரமப் பொறுப்பாளர்)*

சாம் அண்ணனின் நித்திய இளைப்பாற்றலின்பின்,
ஆச்சிரம பரிபாலனச் சபைத் தலைவர்கள் முறையே......

திரு. பாலன் பொணே
திரு. S. சுகுணதாஸ்
திரு. T.D நிதர்சன்
அருட்பணி. சந்திரன் கிறிஸ்பஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரம

## பரிபாலனக் குழுத் தலைவரின் ஆசிச்செய்தி.

கிரான் கிறிஸ்த சேவா ஆச்சிரமம், தனது பொன் விழாவினை நிறைவு செய்வதையிட்டு ஆச்சிரம பரிபாலனக் குழுத் தலைவராகவும், கொழும்பு, மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. டுலிப் தி. சிக்கேரா அவர்களின் சார்பிலும், எனது ஆசிச் செய்தியைத் தருவதில் பேருவகை கொள்கின்றேன்.


கிரான் ஆச்சிரமப் பணியினை நோக்கும்போது, அண்ணன்மாரின் அர்ப்பணிப்பும், திருப்பணியும், அவர்கள் இறைவன்பால் கொண்ட பேரன்பும், அதனால் தங்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தளராமல் செய்த தொண்டையும், எண்ணி வியக்கின்றேன். சிறிய ஒரு கிராமத்திலே ஆரம்பித்த இப்பணி, ஆலவிருட்சமாய், அனைவருக்கும் அடைக்கலம் கொடுக்கும் ஒரு இறை ஊழியமாய், இன்று இருப்பது இறைவனின் அருளேயாகும். பலராலும் ஒதுக்கப்பட்ட மனிதர்களை அண்ணன்மார்கள், தம் அன்பாலும், முன்மாதிரியான வாழ்வாலும் திருத்தி, அவர்களைப் பூரண மனிதர்களாய் மாற்றியதால், அவர்கள் இறைமகன் இயேசுவின் அன்பை மற்றவரோடு இன்றும் பகிர்வதைக் காண்கின்றோம்.

கிழக்கிலே அனைத்துத் திருச்சபைகளையும் ஒன்றிணைக்கும் ஒரே அமைப்பாக, கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமம் இருப்பது, எமக்குக் கிடைத்த அருங்கொடை எனலாம். இன்று அண்ணன்மார் இல்லாதபோதும், கிரான் ஆச்சிரமத்தை வழிநடத்திச் செல்லும் பாரிய பொறுப்பு, திருச்சபைகளின் கரங்களில் இருக்கின்றது. இவ் உன்னத திருப்பணியைப் பல்லாண்டுகள் எடுத்துச்செல்ல, அர்ப்பணிப்புடன் செயற்பட உறுதி பூணுவோம். இதற்குக் கடவுளின் வழிநடத்தலும், ஆசியும், அருளும் என்றும் நம்மோடிருக்கும் என்ற பூரண நம்பிக்கை எமக்குண்டு. கிறிஸ்த சேவ ஆச்சிரமத் திருப்பணிகள் தொடர என் நல்லாசிகள்.

**அருட்பணி. சந்திரன் கிறிஸ்பஸ்,**
தலைவர் – ஆச்சிரம பரிபாலன சபை
கிரான், கிறிஸ்த சேவ ஆச்சிரமம்,
*ஊவா – கிழக்கு பிரதேசமுதல்வர்,*
*இலங்கைத் திருச்சபை, கொழும்பு மறைமாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆச்சிரமப் பரிபாலன சபைச் செயலாளரின் பேனா முனையிலிருந்து...

என் அன்புக்கு இனியவர்களே! கிரான், கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் பொன் விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஆச்சிரமப்பணியினை, வடக்கு கிழக்கு மக்களுக்கு ஓர் உறவுப்பாலமாக உருவாக்கிய அண்ணன்மாரை நன்றியோடு எண்ணிப்பார்க்கிறேன். யாழ். மண்ணில் மருதனார்மடம் எனும் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிரமப்பணி, மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகர், கிரானில், தன் பணியைத் தொடர்ந்து 50 வருட காலமாக ஆற்றுவதை எண்ணி, என் இறைவனைப் போற்றுகின்றேன்.

ஆச்சிரமம் - ஓர் வழிபாட்டு மையம் மாத்திரமல்ல, சமய ஒருமைப்பாட்டின் மையமும் கூட. எல்லைகளற்ற பணி, இன, மத, மொழி என்ற பாகுபாடுகளுக்கப்பால், தனித்துநின்று பணியாற்றும் ஓர் இறைபணிக்கூடம்.

தமிழர்களின் கலை கலாச்சாரத்தைக் கட்டிக் காக்கும் காவலன். ஆறுதலற்றவர்களை அரவணைக்கும் அடைக்கலகிரி. திருச்சபைகளின் ஆன்மீக வழிகாட்டி. இளைத்தவர்களுக்கு இன்பம் தருகின்ற இன்பச்சோலை. இவ்வாறு பணியாற்றும் ஆச்சிரமம், பொன் விழாக் காண்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்று அண்ணன்மார் இல்லாதபோதும், இப்பணியினைச் செய்துவருகின்ற திருச்சபைகளின் தலைவர்களை, அருட்பணியாளர்களை வாழ்த்துகிறேன். இந்நூலானது, சிறப்பாக அமைவதற்குப் பாடுபட்ட, நூலாக்கக் குழுவினரைப் பாராட்டுகின்றேன். இந்நூலினை வெளியிடுவதற்கு நிதி அனுசரணை வழங்கிய இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உவெஸ்லி அச்சகத்திற்கும், குறிப்பாக, மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் பேரருட்திரு. டபிளியு. பீ. எபநேசர் ஜோசப் அவர்களுக்கும் எனது நன்றிகள். பொன் விழாவின் ஏனைய குழுக்கள், ஆச்சிரமப் பரிபாலன சபை அங்கத்தவர்கள், வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாழும் ஆச்சிரம அன்பர்கள், நண்பர்கள், எம் உறவுகள், ஆச்சிரம இறைமக்கள், பக்தர்கள், உதவிகள், ஒத்தாசைகள் ஆலோசனைகள் வழங்கிய எம் மக்கள், வாலிப உள்ளங்கள், பெண்கள் அமைப்புக்கள், வாழ்த்துச் செய்திகளைத் தந்த பெரியார்கள் அனைவருக்கும் என் நன்றிகள். எல்லாவற்றிக்கும் மேலாக என் இறைமகன் இயேசுவுக்கு முழு முதல் நன்றிகள்.

*கிறிஸ்துவின் பணியில்,*

**அருட்பணி. D.S. மதியாபரணம்**

செயலாளர் – ஆச்சிரம பரிபாலன சபை,

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம், கிரான்.

*அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை, தீத்துள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரம, பரிபாலன சபைப் பொருளாளரின் ஆசிச்செய்தி



பொன்விழாக் காணும் ஆச்சிரமத்திற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவது எனக்கு கிடைத்த பெரும் பேறாக எண்ணுகின்றேன்.

தனித்தவனாக என்னை நோக்கின், எனது இன்றைய இவ்வுன்னத நிலைக்குக் காரணமே, இவ் ஆச்சிரமமும், அதன் தொண்டுமே என்றால் மிகையாகாது. 1984ம் ஆண்டு, தமிழ், முஸ்லீம் கலவரத்தில் இடம்பெயர்ந்து, உடுத்த உடையுடன் நானும், எனது குடும்பமும் ஏகியது இவ்விடமே. இழப்புடனும், சோர்வுடனும், மன அழுத்தத்துடனும் வந்து சேர்ந்த எமக்கு, இவ்விடம் உடல் ரீதியாக மட்டுமன்றி, உளரீதியாகவும் அறுதலளித்து, இறைப் பராமரிப்பைக் காண்பித்து நின்றது. கிறிஸ்தவர்களாக இருந்தும், கிறிஸ்து இல்லாதவர்களாய் நின்றிருந்த எமக்கு, கிறிஸ்துவை வாழ்வினூடு காண்பித்துத் தந்தது இவ்விடமே. எனது குருத்துவத்திற்கான முதற்படி, இங்குதானே ஆரம்பித்தது என நினைக்கும்போது, இவ்விடமும், இவ்விடத்தின் தொண்டரும் ஆற்றிய அரும்பணி விசேடமானது. இது நடந்து, இன்றுடன் 24 வருடங்கள் கடந்த நிலையில், இவ் ஆச்சிரமத்துக்காயும், இதனோடு இணைந்திருக்கும் மெதடிஸ்த திருச்சபைக்கும், ஒரு பணியாளனாக இருப்பதை நினைந்து, இறைவனை ஸ்தோத்தரிக்கின்றேன். இறை சித்தம் நிறைவேறும். அதன் கருவிகளாக இருக்கிறோம், இருப்போம். ஆச்சிரமத்தின் எதிர்காலத்தைக் குறித்த இறைத்திட்டம் நிறைவேறப் பங்கெடுப்போம், பாடுபடுவோம். 50வது வருட நிறைவை நினைவுகூரும் அதேவேளை, நூறு ஆண்டுகளும் ஒருநாள் வரும். அந்நாளில் நாமிரோம். ஆனாலும் இறைச்சித்தம் நிறைவேறும். அதுவே கடந்த காலம், அதுவே நிகழ்காலம், அதுவே எதிர்காலமும் கூட...

**இறை ஆசிகள்**

**அருட்திரு. ஞா. அ. சதீஸ**

பொருளாளர், ஆச்சிரம பரிபாலன சபை,

கிறிஸ்த சேவ ஆச்சிரமம், கிரான்.

*முகாமைக்குரு, மெதடிஸ்த திருச்சபை,*

*வாழைச்சேனை சேகரம்.*

# சுன்னாகம், கிறிஸ்த சேவ ஆச்சிரம
# பரிபாலன சபைத் தலைவரின் ஆசியுரை

கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் பொன் விழாவையொட்டி, சுன்னாகம், கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் சார்பில் எனது வாழ்த்துக்களை அனுப்புவதில் மனம் பூரிப்படைகின்றேன்.

கிரான் ஆச்சிரமத்தின் வாழ்விலே, பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் ஆகியோர், இறுதி மூச்சுவரை வறுமை, கீழ்ப்படிவு, துறவறம் போன்ற மூன்று பொருத்தனைகளையும் தவறாது கடைப்பிடித்து, உன்னத சேவை செய்தார்கள். அதன் பலனாகவே, ஆச்சிரமமானது, திருச்சபைகளின் பக்தி விருத்திக்கும், கிறிஸ்தவ மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், அனேக பங்களிப்பைச் செய்தது.

எம் பெருமானின் விடுதலை நற்செய்தியைப் பொருத்தமான முறையில், தமிழ்ப் பண்பாட்டுப் பாணியில் திருப்பணி செய்தமையானது, என்றுமே போற்றுதற் குரியதாகும். அதுமட்டுமல்ல, வன்செயல்கள் பெருக்கெடுத்த காலங்களில், அநேக மக்களுக்கு அடைக்கலமும், ஆன்மீக ஆறுதல்களும் அருளும் பூமியாகக் காட்சி யளித்தது.

உலகத்தையும், சகல நிறுவனங்களையும், திருச்சபைகளையும் மதிப்புச் சார்ந்து திறனாய்வு செய்யவும், தரிசன நோக்கை வலியுறுத்தவும், கிரான் ஆச்சிரமம் மிளிர்ந்தது. இவை யாவற்றையும் நாம் நினைத்து இவ் 50வது வருட நிறைவு விழாவிலே பக்திவினயத்துடன் கடவுளைத் துதிக்கவேண்டும்.

கிரான் ஆச்சிரமமானது, வன்செயல்கள், பீரங்கித்தாக்குதல்கள், பயங்கரமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு, அற்புதமான முறையில் காப்பாற்றப்பட்டு, மக்களுக்குத் தொண்டு செய்வதையிட்டு ஆண்டவரைப் போற்றுகிறேன். இதன் தனித்துவமான பணி மென்மேலும் சிறக்கவேண்டுமென நினைத்து, கிரான் ஆச்சிரமத் தொண்டர் களையும், பரிபாலன சபையினரையும் பிரார்த்தனையுடன் வாழ்த்துகிறேன்.


இறைவன் ஆச்சிரம அடியார்களை ஆசீர்வதிப்பாராக.

**அருட்திரு. S.K. கதிர்காமர்**
தலைவர், ஆச்சரம பரிபாலன சபை
சுன்னாகம், கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம
*தலைவர், யாழ் கிறிஸ்தவ ஒன்றியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Methodist Church
Sri Lanka



## இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவரின் ஆசியுரை

திருச்சபை ஒருமைப்பாட்டின் பயணத்தில் மிக முக்கியமானதும் குறிப்பிடத் தக்கதுமான, கிரான், கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி இவ் ஆசிச்செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சியடைகின்றேன். பண்பாட்டுமயத்தின் பிரதிபலிப்பாக, இந்தியாவில் பரவியிருக்கும் ஆச்சிரமங்களின் ஈடுபாட்டினால் கவரப பட்ட பெரியண்ணனின் தரிசனமும், சின்னண்ணனின் அயராத முயற்சியும், சாம் அண்ணனின் வழிநடத்துதலும், கிரான் ஆச்சிரமத்தின் வாழ்வுக்கு வழிகோலின. இவ் ஆச்சிரமங்கள் கிறிஸ்துவைத் தமது தமிழ் பாரம்பரியத்திலும், பண்பாட்டிலும் பிறப்பித்து வழிநடத்துவதை, இதன் அமைதி, எளிமை, தன்னடக்கம், பக்திவாழ்வு, கலை, கீழைத்தேய இசை நாகரீகம், உடை, வழிபாட்டுமுறை என்பவற்றுக்கூடாக வெளிக்காட்டி நிற்கிறது. ஆச்சிரமங்கள் தமது எளிமை காரணமாக, சமுதாயத்தின் அடிமட்டத்தினருடன் தொடர்புபடுவதால், அது சமய, சமூக, கலாச்சார வேறுபாடு களைக் கடந்து நிற்பது மாத்திரமல்ல, அனைத்துக் கிறிஸ்தவரையும் ஒன்றிணைக்கும் ஓர் உறவுப்பாலமாகவும் காணப்படுகிறது என்பது வரலாற்று உண்மை. இப்பணியில் கிரான் ஆச்சிரமமும் 50 ஆண்டுகளைக் கடந்து நிற்கும்போது, ஒருமைப்பாட்டுப் பயணத்தில், அது சாதித்தவை குறிப்பிடத்தக்கவை. எதிர்வரும் காலங்களிலும் கிறிஸ்துவை வெட்டிக் கூறுபோடும் கிறிஸ்தவர்கள் மத்தியில், ஆச்சிரமம் ஒரு ஒன்றிப்பின் மையமாகத் திகழ வாழ்த்துகிறேன்.

*இவ்வண்ணம்*

**பேரருட்திரு. W.P. எபனேசர் ஜோசப்**

தலைவர்,

இலங்கை மெதடிஸ்த திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIOCESE OF TRINCOMALEE – BATTICALOA

RT. REV. DR. J. KINGSLEY SWAMPILLAI
T PHONE NO. : 065-2222723
FAX NO. : +94-65-2224667

BISHOP'S HOUSE
P.O. BOX – 43
BATTICALOA
(SRI LANKA)



## மட்டக்களப்பு – திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்டப் பேராயரின் ஆசியுரை

கிரான், "கிறிஸ்த சேவ ஆச்சிரமம்" நிறுவப்பட்டு ஐம்பது ஆண்டுகளை நிறைவுசெய்யும் வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசியுரை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

1958ம் ஆண்டில் அருட்திரு I. T. இயேசுசகாயம் அடிகளாரால் நிறுவப்பட்ட இவ்வாச்சிரமம் இன்று ஐம்பது ஆண்டுகாலச் சேவையினை நிறைவுசெய்து நிற்பது பெருமைக்குரியதொன்றாகும்.

கிறிஸ்தவ மக்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்தும் வகையில் நடாத்தப்படும் ஞானொடுக்கங்கள், தியான வழிபாடுகள் போன்றவற்றிற்கு இவ்வாச்சிரமம் சிறந்ததொரு களமாக விளங்குவது போற்றத்தக்கதாகும். இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ உள்ளங்களில் ஆன்மீக ஒளியேற்றி, இறைவன்பால் இட்டுச்சென்றமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த வேளையில் ஆச்சிரமப் பணியில் தம்மை சிறப்பாக அர்ப்பணித்து, அதன் வளர்ச்சியிலும் சேவையிலும் உறுதுணை புரிந்த அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றோம். சிறப்பாக, ஆச்சிரமப் பணியினைத் தோற்றுவித்தவர்களான அருட்திரு சு. செல்வரத்தினம், அருட்திரு I. T. இயேசுசகாயம், அருட்திரு சாம் டீன் அல்பிரட் ஆகிய மூவரையும் பெருமையுடன் நினைவு கூருகின்றோம். அவர்களின் நினைவு இன்றும் கிறிஸ்தவர்களின் மனதில் நிலைத்திருப்பது இவர்களது அளப்பரிய சேவைக்கு அத்தாட்சியாகத் திகழ்கின்றது.

ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் வேளையிலே, இவ்வாச்சிரமத்தின் பணியும் வேவையும் மென்மேலும் வளர்ச்சியடைய இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

எல்லாம் வல்ல இறைவன் உங்கள் அனைவரையும் என்றும் ஆசீர்வதிப்பாராக!

+ Kingsley Swampillai

அதிவண. ஜோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை,
ஆயர்,
திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்.

"......... SERVICE OF FAITH & FELLOWSHIP"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHURCH OF THE AMERICAN CEYLON MISSION

The Rev. Dr. S. Jeyanesan
Chairperson

Mrs. E. V. Rajaretnam
Vice Chairperson

Rev. Millton Solomon
Secretary

Mr. A. Jeyarajan
Treasurer

Tel: 065 22 22524
E mail: chairpersoncacm@gmail.com
jnesan@sltnet.lk
revdrjev@gmail.com

St. John's Church
Uranee
Batticaloa
Sri Lanka
27-08-2008

கிரான் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம், தனத ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடும் இந்நாளில் இவ் ஆசிச்செய்தியை வெளியிடுவதில் எல்லாம் வல்ல ஆண்டவருக்கு தோத்திரத்தை செலுத்துகிறேன்.

இலங்கையில் கிறிஸ்தவ ஆச்சிரம பணி, தென்னிந்திய கிறிஸ்தவ ஆச்சிரம பணியின் உந்துதலினால்தான் தொடங்கப்பட்டது. இப்பணியில் சேவையாற்றிய அருட் தொண்டர்களாகிய பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் ஆகியோரின் சேவையை நாம் அனைவரும் நன்கு அறிவோம், மதிக்கிறோம். இவர்களுடைய ஒப்படைப்பு, தாழ்மை, சேவை, இறைபக்தி ஆகியவற்றை எம் சமூகம் என்றும் மதிக்கிறது.

கடந்த ஐம்பது ஆண்டு காலமாக தொண்டர்கள் கிறிஸ்துவின் அன்பை பல தரப்பட்ட மக்களுக்கு பல வழிகளில் காட்டியுள்ளார்கள். ஆச்சிரமப்பணியின் சிறப்பு அம்சங்கள் பல. அவற்றில் மத, மொழி, வேறுபாடு அற்ற ஏகபோக தன்மை, கிறிஸ்தவ சபைகள் அனைத்துக்குமான பொதுஉடமை என்பன குறிப்பிடத்தக்கவையாகும். வருங்காலங்களிலும் இவ்விரண்டு சிறப்புத்தன்மைகளும் பேணப்படவேண்டுமென்பது என் விருப்பமும், வாஞ்சையும், ஜெபமும் ஆகும்.

கிரான் ஆச்சிரமம் ஐம்பது ஆண்டுகளைக் கொண்டாடும் போது இனிவரும் ஐம்பது ஆண்டுகளில் ஆச்சிரம ஊழியம் எப்படி நடக்கவேண்டும் எனத்திட்டம் போடுவது கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாய் அமைய வேண்டும்.

ஈற்றில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற பாடுபடும் அனைவரையும் பாராட்டுகிறேன். நம் அனைவரும் இப்பணிக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது தேவையான காரியம்.

ஆண்டவர் தொடங்கிய பணியை ஆண்டவர் தாமே ஆசிர்வதித்து வழி நடத்துவராக.




இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் அன்பான,
வண. கலாநிதி. செ. ஜெயநேசன்
தலைவர்,
அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
ASHRAMA & CHILDREN'S HOMES,
Ramakrishnapuram, Batticaloa, Sri Lanka.



## இராமகிருஷ்ண மிஷன் பிரதம அடிகளாரின் வாழ்த்துச்செய்தி

கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமம் தனது 50வது ஆண்டு நிறைவினை அடைந்தமையும், அதனையொட்டி மலர் ஒன்றினை வெளியிடுவதும் எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

பெறுமதி மிக்க இந்த 50வருடகாலத்தில் அனைத்து மக்களுக்கும் மகத்தான சேவையை இவ்வாச்சிரமம் செய்திருக்கும் என்பது எமது நம்பிக்கை.
"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கு அமைய அனைத்து மதங்களும் மக்கள்சேவையை முன் நிலைப்படுத்தி வருகின்றன.

நாம் எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் இறைவனின் குழந்தைகளே. இதுவே எமது ராமகிருஷ்ண மிஷனின் அடிப்படையாகும். இதற்கேற்ப கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமமும் இயங்கி வருகின்றது என்பதனை நாம் அறிவோம்.

இவர்களது சேவைகளை நாம் பாராட்டுவதோடு, இவர்களது பணி மேன்மேலும் சிறப்படைய இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியில்,
சுவாமி அஜராத்மானந்தா

12.08.2008

சுவாமி அஜராத்மானந்தா
SWAMI AJARATMANANDA
Swami-in-Charge
RAMAKRISHNA MISSION,
Ramakrishnapuram,
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Methodist Church
Sri Lanka

**வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத்**

**தலைவரின் ஆசிச் செய்தி**

## ஊழியத்தின் பாதையிலே........

பொன்விழாக் காணும் ஆச்சிரமத்திற்கு ஆசி உரை வழங்கும் இவ்வேளை, என் ஊழியப் பாதையை நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு மாத்திரமல்ல, என் போன்றோர் பலர், தமது இறை பணிக்குள் கால் பதிப்பதற்கு ஓர் ஆரம்பமாயும், ஆன்மீக அனுபவத்தையும் தந்தது ஆச்சிரமமே. ஆச்சிரம வாழ்வும், அண்ணன்மார் சேவையும் இப்பொன்விழாவில் சிறப்பாக நினைவு கூரப்படுவது மெச்சத்தக்கது. அதனிலும் மேலாகக் கடந்த 50 வருட கால நினைவுகளைப் பசுமையாய் சுமந்துவரும் இந் நினைவு மலருக்கும், நிகழ்வுகளுக்கும் என் ஆசியும், வாழ்த்தும் உரித்தாகட்டும். இவ் ஆச்சிரமம் இன்று மட்டுமல்ல, என்றென்றும் மக்களுக்கு ஆன்மீக வாழ்வுக்கு அத்திபாரமாகவும், உறவுகளைச் சீர்ப்படுத்தும் பாலமாகவும் செயற்பட்டு இன்னும் பற்பல ஆண்டுகளைக் காண என் வாழ்த்துக்கள்.

அருட்திரு. S.S. ஞானராஜா
தலைவர்
வடக்கு – கிழக்கு திருமாவட்ட அவை,
இலங்கை மெதடிஸ்த திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Church of South India

## JAFFNA DIOCESE
(inaugurated - 1947)

## AMERICAN CEYLON MISSION
(founded in 1816)

**Revd. A.S. Ruban B.Th, M.A,**
Presbyter Cum Area Minister

JDCSI Parsonage
53/7, Averiwatta Road, Wattala,
Tel: 0094-11-2940085
Mobile : 0094-776183634
E mail : asruban.lk@gmail.com

### தென்னிந்தியத் திருச்சபையின் கிழக்குப் பிராந்தியக் குருவின் வாழ்த்துச் செய்தி



கிறிஸ்தவ சேவ ஆசிரமம் கிழக்கு மண்ணில் கிரான் மத்தியில் கடந்த 50 ஆண்டுகளாக இறைபணி புரிய கிடைத்த மாபெரும் இறை அருளுக்காக நன்றி கூறி விழா எடுத்து வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை தென்னிந்தியத் திருச்சபை யாழ் ஆதினத்தின் பேராயர் அருள்மிகு அறிவர் டி.எஸ்.தியாகராஜா சார்பாகவும் மற்றும் கிழக்கு பிராந்திய தென்னிந்திய திருச்சபை குருமார், ஊழியர்கள், சபைமக்கள் சார்பாக கூறுவதிலும் வாழ்த்துவதிலும் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து புதிய உயிர் கொடுப்பது போல் கிறிஸ்தவ சேவ ஆசிரம இறைத் தொண்டர்கள் எம் மக்களின் இறை உயர் வாழ்வுக்காக பெரும் தியாகங்களை மேற்கொண்டு கடந்த இத்தனை ஆண்டுகள் இறைபணி புரிந்து வந்திருப்பதை நினைந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

குறிப்பாக அண்ணன்மார்களில் அருட் திரு சேலக் ஐ.ரி. இயேசு சகாயம் (சின்னண்ணன்) அவர்கள் பெரியண்ணனின் தீர்க்கதரிசன பார்வையுடன் அயராமல் செய்து வந்த அருட்பணியும், ஊக்கமுடன் முன்னெடுத்த உழைப்பும், தியாகமும், சிந்தனையும், செபங்களும், 50 ஆண்டுகளாக மங்காத ஒளிவீசி கலங்கரை விளக்காக திகழுவதை எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

ஆசிரமம் என்பது அரும் பெரும் முயற்சியின் அத்திபாரம், காலத்தின் தேவை கருதி கடவுளின் தொண்டர்களின் பணி மையம், கீழ்ப்படிவு, எளிமை, கற்பு, என்ற கோட்பாட்டின் சிகரம். கிழைத்தேய மரபுகளோடு கிறிஸ்துவின் பணியினை துறவரம் பூண்டு ஆடம்பரமற்ற ஆகாரம் உண்டு ஏழை மக்கள் மத்தியில் நற்செய்திப் பணி, வைத்தியப்பணி, சமூகப்பணி என்று சேவைபுரியும் மையம் இப்படியான மகிழ்மையுடைய ஆசிரமம் ஐம்பதாவது அகவையில்விழா எடுப்பது என்றால் வேதனையுடன் ஆரம்பித்த சாதனை என்றுதான் கூற வேண்டும்.

எனவே இவ்வாச்சிரமத்தில் இறைபணி புரிந்து இறைபாதம் சென்ற அண்ணன்மாரின் முன்மாதிரியைப் பின்பற்றி திருச்சபையாக அதன் தலைவர்கள், குருமார், ஆச்சிரம அன்பர்களாக மக்களின் வாழ்வோடும், வளத்தோடும் இணைந்து கரம் கோர்த்து, பலம் சேர்த்து ஆசிரமம் இன்னும் பல நூற்றாண்டுகளைக் கண்டு பணிபுரிய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அருட் திரு. ஏ.எஸ்.ரூபன்
கிழக்குப் பிராந்தியக் குரு
தென்னிந்தியத் திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கன் இலங்கை மிஷன்
## கிழக்குப் பிராந்தியக் குருவானவரின் ஆசிச்செய்தி

கிறிஸ்துவுக்குள் என் அன்பு நெஞ்சங்களே! இயேசுவின் இனிய நாமத்தில் என் அன்பு வாழ்த்துக்கள்.

கிரான், கிறிஸ்த சேவ ஆச்சிரமம், தன் பொன் விழாவினைக் காணும்போது பேருவகை கொள்கின்றேன். இவ்வேளையில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை, கிழக்குப் பிராந்தியத்தின் என் சபைகள், அருட்பணியாளர்கள், இறைமக்களின் சார்பில் வாழ்த்துகிறேன்.

கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார், கடவுளுக்காகப் பெரிய காரியங்களை எத்தனி என்ற தாரக மந்திரத்தைத் தன்னகத்தே கொண்டு, இறையரசின் பணியை அயராது செய்யும் ஆச்சிரமப் பணி போற்றுதற்குரியது. திருச்சபை ஒருமைப்பாடு, பெந்தேகொஸ்தே பண்டிகை எல்லாம் ஆச்சிரமத்தின் சிறப்பம்சங்களாகும்.

ஆச்சிரமம் 50 ஆண்டுகளைக் கடந்து வரும்போது, திருச்சபைகள் ஆச்சிரமத்தின் விழுமியங்களைத் தன்னகத்தே கொள்ளவேண்டும்.

கிழக்கின் எம் திருச்சபை காலூன்ற உறுதுணையாக, உந்து சக்தியாக ஆச்சிரமத்தின் ஜெப வாழ்வு அரும் சக்தியாக அமைந்தது.

இதன் பணி இன்னும் பல நூற்றாண்டுகள் தளைத்துப் பல விசுவாசிகளை, தலைவர்களை உருவாக்க வாழ்த்துகிறேன்.

*கிறிஸ்துவின் பணியில்*
**அருட்திரு. ஏ.பா. சொலமன்ஸ்**
கிழக்குப் பிராந்தியக் குரு
தூய யோவான் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிரான், இந்து ஆலய சிரேஷ்ட குருக்களின் ஆசிச்செய்தி

இரக்கம், நற்கருணை, அரவணைப்பு, மானுடசேவை இவற்றினை இயேசுபிரான் வழியில் முன்னெடுத்துச் செல்லும், கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் பொன் விழாச் செய்தி மன நிறைவைத் தருகின்றது. ஒரு சமய அமைப்பு எவ்வாறு திகழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரம் இருக்கின்றது என்றால் அது மிகையில்லை.

இயற்கை அனர்த்தமாக இருந்தாலும், இனக்கலவர இடம்பெயர்வாக அமைந்தாலும், வேறு எந்தச் சூழ்நிலையிலும் மக்கள் அனாதரவான சந்தர்ப்பங்களிலும் மேற்படி ஆச்சிரமம் பெரும்புகலிடமாக இருந்தது. இதனை 1978ம் ஆண்டு சூறாவளியின் பின்பும், 1983ம் ஆண்டு, யூலைக்கலவரத்தில் தலைநகரத் தமிழர்கள் அகதிகளாக வந்தபோதும், 1990ம் ஆண்டின் பின்னர், அடிக்கடி உள்ளூர் மக்கள் புகலிடம் தேடிய சந்தர்ப்பத்திலும் காணக்கூடியதாக இருந்தது.

ஆச்சிரமம் எனும் சொல்லுக்கிசைவாக, மாணாக்கர் இங்கு இருந்து பயின்று வருவது வரவேற்பிற்குரியது. இதன் ஸ்தாபகர்கள் கீழைத்தேய மதப் பாரம் பரியங்களுக்கு ஒத்ததான நடைமுறையை இங்கு புகுத்தியிருப்பது சிறப்பானதாகும். சமூகத்திற்கான பணியே இறை ஊழியம். இதில் எந்த மாற்றுக்கருத்திற்கும் இடமில்லை. இதனை யார் செய்தாலும் ஆசீர்வதிக்கப்படுவர்.

கிரான் மண்ணில் நிழல் பரப்பிநிற்கும் இந்த ஆச்சிரமமானது மேலும் ஓங்கி உயர்ந்து நிற்கட்டும். இதன் வளர்ச்சிக்காக உழைத்த, உழைத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் கடவுளின் கருணைக்குப் பாத்திரமானவர்கள்.

எனது மனப்பூர்வமான நல்லாசிகளை ஆச்சிரமத்திற்கும் பொன்விழா சிறப்பு மலருக்கும் சமர்ப்பிக்கிறேன்.

அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிக்கட்டும்.

*இவ்வண்ணம்*

**சிவஸ்ரீ. மு. சண்முகம் ஐயர்**

*கிரான்* **இந்து ஆலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொன் விழா மலர் 1958 — 2008

## முன்னுரை

கிரான், கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்நாளில், இதன் சிறப்புக்களைப் பற்றி எடுத்தியம்பும் ஒரு சிறப்பு மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ். ஆச்சிரமத்தின் அன்பை ருசிபார்த்த வடமாகாண மக்களைப் போலக் கிழக்கு மாகாண மக்களும் காணவேண்டுமென்ற வாஞ்சை, பெரியண்ணனை ஆட்கொள்ளவே, தகுந்த வேளையில், சின்னண்ணனை மட்டக்களப்புக்கு அனுப்பிவைத்தார். ஆச்சிரம வாழ்வின் மூலம் எங்கள் அன்புப் பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் ஆற்றிய அரும்பணிகளுக்காக இறைமகன் இயேசுவின் பாதம் பணிந்து போற்றுவோம்.

ஆச்சிரமம் 'ஒரு பாலைவனச்சோலை', தற்கால சீவியத்தின் வேகத்தாலும், நெருக்கடிகளாலும், இளைத்து நொந்திருப்போர் வந்து தங்கி, அமைதியாயிருந்து, மனச்சாந்தியும் ஆறுதலும் பெற்றுச் செல்லத்தக்க இடமாகவும் அமைந்துள்ளது. அத்துடன் முறையாகச் சபைகளில் கலந்து சீவிக்க முடியாத பலருக்கு, ஆச்சிரமம் ஒரு நடுநிலைத்தளமாகவும் காணப்படுகின்றது. பல திருச்சபை மக்களும் ஒன்று கூடி வழிபடுவதனால், கிறிஸ்தவ ஐக்கியத்தைப் பேணி வளர்க்கும் ஒரு பொதுத்தலமாகவும் காணப்படுகின்றது. ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ் வேளையில், எமது ஆச்சிரமத்தின் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் அனைவரும் ஆச்சிரமத்தின் விதிகளைக் கடைப்பிடித்து அதன் பாரம்பரியங்கள் சிதைந்து விடாதவாறு பாதுகாப்பதன் மூலம் ஆச்சிரமத்தின் எதிர்காலப் பணிகளுக்கு உதவ முடியும் என்பது திண்ணம்.

இப்பணிகளுக்கூடாக, அனேகருக்கு கடவுளின் அன்பை வழங்கியதோடு, கடவுளுக்காக அரும்பணி ஆற்றும் வாய்ப்புகளையும் ஆச்சிரமம் களமமைத்துக் கொடுத்துள்ளது. இப்பணிகளில் இதுவரைக்கும் யார் யார் உழைத்தார்கள்? யார் யார் பலனடைந்தார்கள்? என்பதையெல்லாம் இறைவன் அறிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமம் ஒரு பெருங்கடல். இதன் பொன் விழா இதழைத் தொகுத்து வெளியிட நான் தகுதியுள்ளவனா? என அங்கலாய்த்து ஜெபித்தபோது, ஏசாயா 30:8 இன் வசனம் புதுத் தென்பைத் தந்தது.

**'இப்பொழுது நீ சென்று, அவர்கள்முன் பலகையில் பதித்து வை.**
**ஏட்டுச் சுருள் ஒன்றில் எழுதிவை.**
**வருங்காலத்திற்கென என்றுமுள்ள சான்றாக அது விளங்கும்'**

மலர் வெளியிடும் செய்தி கேட்டுப் பலர் உதவ முன்வந்தனர். அவர்களுள் ஆச்சிரம முன்னாள் அறங்காவலர்களான திரு.பாலன் பொஜே அவர்களும், திரு.எஸ். சுகுணதாஸ் அவர்களும் சில வரலாற்று ஆவணங்களைத் தந்துதவினர். அத்தோடு, தற்போதுள்ள ஆச்சிரம அறங்காவலர் அருட்திரு.சந்திரன் கிறிஸ்பஸ் அவர்கள், தகுந்த ஆலோசனைகளையும் வழங்கினார். திரு.கே.ஜி.அருளானந்தம் அவர்கள், ஆச்சிரம வெளியீடுகளிலிருந்து சில வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்து வழங்கினார். திருமதி.அரியமலர் ஜெயராஜ் அவர்களிடமிருந்து, அரிய சில ஆச்சிரம ஆரம்பகாலப் புகைப்படங்களையும், முன்னாள் ஆச்சிரமப் பரிபாலனச் சபைச் செயலாளரான காலஞ்சென்ற திரு.ரி.ஜீ.ஜெயராஜ் அவர்களின் சேகரிப்பிலிருந்த பத்திரிகைப் பிரசுங்களையும் தந்துதவினார். தற்போது யாழ். ஆச்சிரமத்தைப் பராமரித்துக் கொண்டிக்கும் திரு. சில்வா அவர்களும் அங்கிருந்து சில குறிப்புக்களையும் தனது ஆசிகளையும் அனுப்பிவைத்தார். வாழைச்சேனை, மெதடிஸ்த சேகர முகாமைக்குரு. அருட்திரு.ஞா.அன்ரனி சதீஸ் அவர்கள், தங்கள் சமூகசேவை அலுவலகத்தின் செல்வி.சௌமியா தேவராஜா மற்றும் திரு. ஜெரோம் ரம்மியகாந்த் தயாளகுணசீலன் ஆகியோர் மூலம் ஆக்கங்களைக் கணனித் தட்டச்சில் மாற்ற உதவினார். இச்சிறப்பிதழ் வடிவமைப்பு நெறிப்படுத்தலின் புலமைத்துவ ஆலோசனைகளைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திரு. தீசன் ஜெயராஜ் வழங்கியிருந்தார். சிறப்பாக, இவ்விதழ் வெளியீட்டிற்கான நிதி உதவியை, இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் பேரருட்திரு. டபிளியு.பீ. எபநேசர் ஜோசப் அவர்களும், அவர்தம் உவெஸ்லி அச்சகத்தாரும் பெருமனதுடன் வழங்கியிருந்தார்கள். அத்தனை பேருக்கும் எம் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மலர் வெளியிட்டுக் குழுவினரின் பல அர்ப்பணிப்புகளுடனும், இவைகளைத் தொகுத்து உங்கள் கரங்களில் வைக்கின்றோம். ஆச்சிரம அண்ணர்மாரின் எதிர்காலத் தரிசனங்களனைத்தும் கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவர் மூலமும் நிறைவேறவேண்டும். இதுவே எம் அவா.

**"கடவுள் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'**


**N.W. அருள்சீலன்**
மலர் வெளியீட்டுக்குழு ஒருங்கிணைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சிரமத்தாய் அன்புக் கலம்பகம்






## காப்பு விருத்தம்

அன்பைப் பொழியும் ஆச்சிரமக் கதை
அது இனிதிலும் இனிதே!
ஆதலினிங்கே அடியவன் பாட
அமைந்ததுவும் பெரிதே!
அன்னையினன்பை ஊட்டி வளர்த்த
ஆச்சிரமத்தாயை,
அரிதினும் அரிதாம் அண்ணன் மார்களின்
அன்பின் அருள் நிதியை
எண்ணித் துணிந்தேன் இங்கிவன் பாட
இயேசுவை முன்வைத்தே
இறைமகனே என் உளமுற வாரும்
இன்னருள் பெரிதென்றே
பண்ணுறு பாவும் அசையும் தொனியும்
பாவியீ தொன்றறியேன்
பரனே பரம் பொருளமுதே உன்னருள்
வரமது பொழி நின்றே

செந்நெல்லும் வரகும் தேனும்
தெவிட்டாத தயிர் பால் நெய்யும்
கன்னலும் கதலி வாழை
கற்கண்டாய் விளையும் பூமி!
நன்னயமாகப் பேசி
நளினம் செய் தன்பு காட்டும்
பொன் மனம் படைத்த மாந்தர்
பொதுமையாய் வாழுமூராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை கலை மாட்சி தங்க
இன்பமாம் பாட்டும் கூத்தும்
அசை தொனி அழகு மாறா
அற்புதம் செய் நல்லூராம்
திசை வழி தப்பாதிங்கே
செந்தமிழ்க் குடியும் மரபும்
வசைவிலா துயர்ந்து நிற்கும்
வளநிலம் படைத்த வூராம்!

வானுறு மழையும் பச்சை
வயல் வெளி வண்ணச் சேறும்
கானுறு மயிலும் காளை
கவிந்து மெய் குளிரும் ஊற்றும்,
ஊனுடல் ஆவி பொங்க
உழைத்திடும் உழவர் கூட்டம்
மானுறை சோலை போலே
மலர்ந்ததோர் கிரானூர் தன்னில்,

அன்னையாய் அமுதாய் அன்பின்
அளவிலா இன்ப ஊற்றாய்
பொன்னகர்ப் பதியாய் உள்ளம்
பூரிக்க கால் பதித்து
பொன் விழாக் கோலம் கண்டு
போற்றினோம் போற்றியம்மா
அன்னையே கிறிஸ்த சேவ
ஆச்சிரமத் தாயே வாழி!

**வேறு**

ஆச்சிரமத் தாயே உன் அரிய நாமம்
அன்று தொட்டு இன்றுவரை அன்பு என்ற
பாத்திரமே நேத்திரம் போல் வளர நின்றாய்
பசித்தவர்க்கு பான்மையுற அமுதூட்டினாய்
மாத்திரை போல் நோய் பிணிக்கு மருந்தூட்டினாய்
மன்னு புகழ் இயேசுவின்பால் நேசம் வைத்தே
காத்திரமாய் நீ வளர்ந்த கால மந்தோ
கர்த்தனிட்ட திரு வரமே வாழ்க நின்றே!

நின்றெழுந்த சுடர்போல கிழக்கு மண்ணில்
நீ படர்ந்து மகுடமென மன்னர்க்கெல்லாம்
மன்னரென மாட்சியுற பவனி வந்தாய்
மங்கையென மலர் மொட்டு அரும்பி நிற்க
தென்னவளே நீ செழுமைத் தமிழ் மணக்க
சித்திரம் போல் முத்திரை நீ பதித்த காலம்
தென்றலிலும் மென்மையம்மா கிரானூர் மண்ணில்
தேனருவி போல் மலர்ந்த காலமந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமிலா இறைவன் தன் அன்பு தன்னை
ஆச்சிரமப் பால் ஈர்த்து அடியவர்கள்,
நொந்து மனம் புண்பட்ட இதயமுள்ளோர்
நோன்பிருந்து உன் முற்றம் களித்திருக்க
வந்தவர்கள் துயரமெல்லாம் மறைந்து போக
வனிதையென நீயிருந்து வரம் கொடுத்தாய்
சொந்தமென வுனைத் தேடி வருவோருள்ளம்
துக்கமற தூய்மையுற நின்றாயம்மா!

அம்மா உன் வருகையில் நாம் பேறுபெற்றோம்
ஆதரவாய் இந்த மண்ணின் பெருமக்களாம்
நம்பிதாக்கள்! முன்னோர்கள்! கிறிஸ்து மார்க்கம்
நம் மண்ணில் அரும்புதற்கு வித்தாய் நின்றோர்
உம்பர்களைப் போலே நற்பெருமை சூழ
ஒப்பரும் சீர் மெதடிஸ்த திருச்சபை சால்
தம்பதிகள் குஞ்சுக்குட்டி குரவரன்பால்
சக்தியுறும் இத்தலத்தில் பெருமை கண்டாய்

கண்கண்ட காட்சியெல்லாம் களங்கமில்லா
கடவுளின் பால் அன்புருக வாழ்ந்த தாசர்
சின்னண்ணன் பெரியண்ணன் சாம் அண்ணனாம்
சிற்சபையின் இதயங்கள் பலருமிங்கே
மண் மகிழ கீழ்த்திசையின் கலையும் மாண்பும்
மற்றவர் பால் ஈர்த்து நிற்க மனம் நெகிழ்ந்து
பண்ணிசையும் பா விருத்தம் பாடியெம்மை
பரவசத் தேர் ஏற்றியந்தோ வழிநடந்தாய்!

நடந்த வழி மார்க்கமெல்லாம் நலமே கண்டாய்
நல்ல தமிழ் மரபு வழி மலர நின்றாய்
கடந்து வந்த பாதையிலே கிறிஸ்து மார்க்கம்
கப்பலேற்றி வந்த பொதி என்போர் தாமும்
இடம் தெரிந்து ஆச்சிரமத் தண்டை சூழ
இனியவளே இயேசுவின் சீர் முற்றமானாய்
தடம்பதித்து உன்னகவை ஐம்பதாண்டில்
தான் நிமிர்ந்து நிற்பதுமோர் பெருமையன்றோ

அன்றலர்ந்த பொன்மலர் போல் உனது ஜோதி
அழகு மலர்த் தாமரை மேல் சிலுவை தன்னை
வண்ணமுறத் தாங்கி நிற்கும் வடிவம் கூட
வண்டமிழர் தம் மரபின் மாட்சியன்றோ!
கன்னமுறும் இதயங்களும் கனிந்து போக
கருணை முக ஜோதியுடன் இல்லம் தேடி
இன்முகத்தில் புன்னகைப் பூ உதிர்ந்து நிற்க
இனிமையுற வாழ்ந்தவர்தாம் பெரியண்ணனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியண்ணன் ஓர் யோகி இயேசுவின் பால்
பித்தரையும் பக்தியுற வைத்த ஞானி!
அரிய பல சிந்தனைகள் அவரைத் தேடி
அற்புதமாய்ச் சிலை வடிக்க ஏங்கி நிற்கும்
விரிந்த மனச் சிந்தனைதான் சுவாமியாகி
விந்தையுற ஆச்சிரம வேந்தனானான்!
சுந்தரஞ்சேர் சிலைவடித்தான் மேனி தங்க
சுடர் பரப்பும் காவியுடை தரித்து நின்றான்!

நின்றது போல் நின்றாலும் ஒற்றைக் காலில்!
நிமிர்ந்த முகம் சரிந்து நிற்கும், முகமலர்ச்சி
மன்றலிலே கருணை நிழல் குடியிருக்கும்
மற்றவர்க்கு தொண்டு செய்யும் குறியே நோக்கு!
அன்னவனோ ஆண்டவரின் கைக் கோல் பிள்ளை
அவன் செபித்த காரியங்கள் நிவர்த்தியாகும்
பின்னவனைப் பற்றியோர்கள் பெரியோர் பல்லோர்
பேதமில்லாத் தாசனெங்கள் சின்னண்ணனாம்!

சின்னண்ணன் பெருமைக்கு யாருமில்லை
சிறுவர்களின் இதயந்தான் அவரின் உள்ளம்
சின்னண்ணன் திருச்சபையில் திளைத்த மேலோன்
தெய்வீகப் பாதையிலே சிறந்த ஞானி
முன்னவனாம் பெரியண்ணன் துறவறத்தின்
முடிசூடா நிகர் கொண்ட வழியின் தோன்றல்
அண்ணலவன் பெருமையெல்லாம் அளப்பதென்றால்
அது பகலுக் கொளி காட்டும் விந்தையன்றோ

அன்றவனின் வாழ்க்கையெல்லாம் சந்நியாசம்
அப்பப்பா அவன் தூங்கும் நேரமென்று
இன்றுவரை நாமறிந்த வரலாறில்லை
இயன்றவரை இறைவனுடன் சஞ்சரித்தோன்
மன்று வளர் ஆச்சிரமச் சோலை யன்று
மரகதப் பூந்த தருக்களென மாட்சி தங்க
சின்னண்ணன் வாழ்ந்த கதை மறப்பதென்கோ
சித்தமுறும் அவன் பதியே வாழ்க நன்றே!

நன்றே இத்தலத்திலெல்லாம் நன்றே ஆயின்
நம் பெருமை தமிழுணர்வு தளைத்து நிற்க
சொன்னது போல் ஒரு முனிவன் வந்தானந்தோ
'சாம் அண்ணன்' அவன் சினந்தால் நாங்களெங்கே?
சின்னஞ்சிறு பிழைகளையும் சிந்தியாதான்
சின்னத் தனம் கண்டாலோ மன்னிப்பில்லை
வண்ணமுகம் வரிதொடுத்த காவியோடு
வந்துநின்றால் பரவசித்து நிற்போம் முன்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே அவன் முன்னடந்தால் முடிசூழ் வேந்தன்
முப்பரனாம் இயேசுவே முன் வந்து நிற்பார்!
கண்ணே போல் ஆச்சிரமம் பார்த்த யோகி
கண் திறந்தால் கதிர் வனப்பும் குளிர்ச்சியாகும்
அண்ணலென்று நாமவரை சிரமேற் கொண்டோம்
ஆசையுற இயேசையன் அருள் சுரக்க
திண்ணமுறப் புனரமைத்தான் ஆசிரமத்தை
திறமையுற எழுந்து நிற்கும் வடிவும் கண்டோம்!

கண்டு மனம் களித்திடுமோர் இந்த நாளில்
கன்மனதும் உருகுமிந்த பொற்றலத்தை
எண்டிசையும் புகழ் பாடி சான்றோர் கூட்டம்
ஏறெடுத்துப் போற்றி நின்ற பொற்காலத்தை
இன்றெமது உள்ளத்தில் பதித்து நிற்போம்
ஈந்துதவி நின்றாரை வாழ்த்திநிற்போம்
ஆண்டு பல கடந்திங்கே ஆச்சிரமமும்
ஆண்டவரின் திருக்கரத்தில் வாழ்க நின்றே

**வேறு**

ஆனவை யாவும் செய்து முடித்தனன்
அண்ணலெம் சின்னண்ணன்
அடியவர் நாமும் வாழ மகிழ்ந்தனன்
ஆருயிர்ப் பெரியண்ணன்
போன காலம் போயின போன பின்
பொன்மகன் சின்னண்ணண்
போதரும் யாழூர் ஆச்சிரமம் தனில்
பிரதம சேவக்காய்
ஞானத் திருவடியான் பெரியண்ணன்
கிரான் தனைப் பொறுப்பேற்க
நல்லடியார்கள் இருவருமாங்கே
நற்பணி யேற்றனரே
வானத்து நிலவும் பரிதியும் போலே
வரப்பிரசாதமதாம்
வள்ளலெம் பெரியண்ணன் திரு வரவும்
வானவன் திருவரமாம்

ஆச்சிரமத்தின் கட்டளையும் இது
வா மென வறிந்தோமே
அண்ணன் மார்கள் எங்கிருந்தாலும்
அவரவர் பொறுப்பேற்று
ஆச்சிரமத்தின் பிரதம சேவக்
காய் அவர் பரிமாற்றம்
ஆதவனும் தண் வெண்மதிபோலே
அதுவும் பாக்கியமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றுறு தீவின் வெண்மணல் போலே
வேதரு நிழல் போலே
பற்றறு வேந்தன் பண்ணுறு தாசன்
பன்னரும் பெரியண்ணன்
இத்தலம் போற்ற முத்திரை தந்தான்
ஆண்டறுபத் தெட்டில்

எத்தகு தீயோர் இங்கு வந்தாலும்
இடர்பட நாமறியோம்
பத்திரமாக அங்கவர் தம்மை
பாத்திடுவான் கண்ணே!
சத்திய வேந்தன் இயேசுவினம்பை
சன்னதம் பாராட்டி
உத்தரவாதம் உணர்ந்தவர் போற்ற
உழைத்தவர் பெரியண்ணன்!

தெங்கு மரநிழல் சோலை நம் பூமி!
தென்னை மரங்களை நாம்
இங்கெமரிய பெரியண்ணன் தன்
பொன்னரும் கையாலே
தங்கு வளநிலம் பொங்கி வளர்ந்திட
தான் நடுகும் வரையும்
இங்கெவரும் நாம் தென்னை மரங்களே
இல்லாதிருந்தோமே

பார் பெரியண்ணன் செய்த இத்தொண்டு
பாங்குறு ஆச்சிரமம்
நீர்வளம் தன்னில் நிலவளமோடு
நிமிர்ந்து நடைபோட
பாத்திரமாக உழைத்தவனன்பால்
பாங்குற வாழ்கின்றோம்!
வாய்த்த எம் அண்ணல் பெரியண்ணன் பதி
வாழிய பல்லாண்டே

# வாழி!

**விண்ணுலகினுக் கிரியை இத்தலத்தில் வாழி!**
**வியந்து சபை போற்று மதி ஆச்சிரமம் வாழி!**
**அண்ணலென வந்துதித்த அத்தனெனும்வோர்**
**அடிதொட்டு வாழ்த்துகின்றோம் அடியோன் மீர் வாழி!**
**விண்தொட வித்தகத்தை விதைத்திட்ட மேலோன்**
**விமலனாம் பெரியண்ணன் வியன் குருமார் வாழி!**
**சின்னண்ணனுடன் அன்பு சாம் அண்ணன் வாழி!**
**சிந்தைமிகு ஆச்சிரமத் தாய் வாழிவா ழியவே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமம் ஐம்பது ஆண்டுகள்

கிரான் ஆச்சிரமத்தின் ஐம்பது வருடங்கள் நிறைவு பெறுவதைச் சிந்திக்கும்போது, கடவுளுடைய அளவற்ற கிருபையும், அவரின் நிறைவான அன்பும் எவ்வளவு தூரம் நம்மை ஆண்டு வழிநடத்தவல்லது என்பதை நாம் உணர்ந்து, நம் ஆண்டவருக்கு முதல் நன்றியையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துவோமாக. எம் நேசமீட்பர் அருளிய அடியவர்களாய், ஆச்சிரமத்துக்காய் அர்ப்பணிப்போடு உழைத்த பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் ஆகியோரை, இந்நாளில் நன்றியுடன் நினைவு கூருவது மக அவசியமானதாகும்.

கிரான், கிறிஸ்த சேவ ஆச்சிரமானது, கடவுளின் கைங்கரியம், இயேசுவின் அற்புதம், அல்லலபட்டு வருகின்றவர்களை ஆதரித்து அரவணைத்து ஆசீர்வதிக்கும் உன்னதபீடம். இப்பேர்ப்பட்ட ஓர் ஆச்சிரமம் இங்கு வந்தமையானது மிகப் பெரும் பாக்கியம் எனலாம்.

1958ம் ஆண்டு, பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த ஆதீனம், இன்று வரை, தனது இளமை மங்காது, இனிமை குன்றாது இறைவனின் சித்தத்தை நிறைவேற்றும் திருப்பள்ளியாக இருக்கின்றதென்றால், அது அத்தனையும் ஆண்டவர் இயேசுவின் திருவருளைத் தவிர வேறில்லை. இதனை உளப்பூர்வமாக உணர்ந்த சின்னண்ணன் *'அத்தனையும் நின்னருளே அடியான் இத்தினத்தில் உன்னை இசைந்திங்கே பாடுவது'* என்று இனிமையாகப் பாடியுள்ளார். கிரான், ஆச்சிரமப் பத்தாண்டு நினைவு மலரிலே, சின்னண்ணன் அவர்கள் *"பத்து வருடங்கள் பத்து நிமிடங்கள் போல சென்றுவிட்டன. எனினும் பத்தாண்டுகளாக இறைவன் செய்த அருட்பெருஞ் செயல்களை, பத்தாயிரம் கோடி நாக்கொண்டு பகரினும் எளிதன்று. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என சங்கீதகாரரோடு சேர்ந்து நாமும் துதிப்போமாக."* என்று மனமகிழ்ந்து குறிப்பிட்டதை நினைவுகூருவோம். மேலும் அவர் அவ்விதழில் குறிப்பிடுகையில், *"அன்று தன்னிடமிருந்த எல்லாவற்றையும் சேர்த்து, நூற்றியிருபது ரூபாய் தந்தார் பெரியண்ணன். மாலை ஆறுமணியிருக்கும், ஆச்சிரமத் தொண்டர்களுடன் மருதனார்மடம் புகையிரத நிலையத்துக்கு வந்தோம். செல்வி புக் வால்ரர் அம்மையாரும், மேரி அக்கா, திருமதி றிச்சேட் அவர்களும் சில அனாதைப் பிள்ளைகளும் அங்கே நின்றார்கள். எங்கள் புகையிரதம் வந்ததும் நாங்கள் எங்கள் 3ம் வகுப்புப் பெட்டியில் ஏறிக் கொண்டோம். காப்பார், உனைக்காப்பார். காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல் காத்திடுவார், கண்டுனை அழைத்தவர் கரமதைப்பார், அவர் கைவிடாதிருப்பார், ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை எண்ணிப்பார், என்ற கீதத்தை மேடையில் நின்ற பிள்ளைகள் அருள் வழியப் பாடினார்கள். எங்கள் கண்கள் கலங்க வண்டியும் புறப்பட்டது. கர்த்தர் பெரியவர், அவர் நல்லவர், அவர் என்ன செய்தார் என்பதை வாசித்துப் பாருங்கள்"* என ஆரம்ப நாட்களை ஆவணப்படுத்தியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரின் கிருபையும், அன்பும் அவர் தம் தாசர்களோடு எப்படி அருள் பாலித்தது என்பதை நினைக்கும்போது எமது அகமெல்லாம் புல்லரிக்கிறது.

**'கடவுளிடமிருந்து பெருங்காரியங்களை எதிர்பார். கடவுளுக்காகப் பெருங்காரியங்களை எத்தனி'.** இறைவனுடைய அருட்பெரும் செயல்களை நினைப்பவர்கள் எதிர்காலத்தில் இறைவனுக்காகப் பெருஞ்செயல்களைச் செய்யத் துணிவர் என்பதே அம் மகுட வாசகத்தின் பொருளாகவுள்ளது.

ஆச்சிரம முறைமையின் முழு அர்த்தத்தோடே நமது இரட்சகராகிய கிறிஸ்து பெருமானும், அன்புச் சீடர்கள் பன்னிருவரும் நாடெங்கிலும் சுற்றி நல்லுபதேசமும், நன்மையும் செய்து, குருநாதர் மரித்து, உயிர்த்து பரலோகத்துக்கெழுந்தருளிப்போகும்போது, தமது சீடர்களுக்குக் கொடுத்த அன்புக்கட்டளைக்கமைந்து, முதல் நூற்றாண்டிலேயே, புனித தோமா இந்தியாவுக்கு கிறிஸ்துநாதரின் இன்ப சுவிஷேசத்தைக் கொண்டு வந்துவிட்டார் என்பதை வரலாறு கூறும். இருபது நூற்றாண்டுகளாக இந்தியாவில் கிறிஸ்தவ சமயம் மேல்நாட்டாராலும் சுதேசிகளாலும் பிரசங்கிக்கப்பட்டும், அனுசரிக்கப்பட்டும் வந்தாலும் கிறிஸ்தவ ஆச்சிரமங்கள் தோன்றியது 20ம் நூற்றாண்டிலேயே ஆகும்.


ஏற்கனவே 1939, ஆகஸ்ட் 21ம் திகதி திங்கட்கிழமையன்று, முறையாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட யாழ்ப்பாணம், மருதனார்மட ஆச்சிரமத்தைப் பொறுத்தமட்டில், அதன் நோக்கங்களுள் ஒன்று - கிழக்கு மாகாணத்திலுள்ள காடுகளில் வசிக்கும் பாமர மக்கள் மத்தியில் சுவிஷேசப்பணியோடு, வைத்தியப் பணியும் செய்யவேண்டுமென்பதாகும். இந்த ஊழியத்தைப்பற்றி, மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபையோடும், இலங்கைத் திருச்சபையோடும், பலமுறை கலந்தாலோசிக்கப்பட்ட பின், 1953ம் ஆண்டு சித்திரை மாதம், களுவன்கேணியிலிருந்து இவ்வூழியம் ஆரம்பிக்கப்பட்டது.

பல வருடங்கள் ஆச்சிரமத் தொண்டனாகவும், அப்போது களுவன்கேணி மெதடிஸ்த திருச்சபை ஊழியனாகவுமிருந்த எஸ். எஸ். கார்த்திகேசுவும், இந்த ஊழியத்திற்கு உதவி செய்யும்படி அப்போதைய மெதடிஸ்த சேனட் சங்கத்தால் அனுமதிக்கப்பட்டு, இவரது ஒத்தாசையுடன், களுவன்கேணியிலிருந்து சுமார் இருபது மைலுக்கப்பாலுள்ள கானந்தனை, முறுந்தனை, காயாங்கேணி, மாங்கேணி போன்ற கிராமங்களைச் சந்தித்து, ஊழியஞ் செய்து வந்தனர். நிருவாக சபையின் அனுமதியோடு 1944ம் ஆண்டு, புரட்டாதி மாதம் வண. ஐ. ரீ. இயேசுசகாயம் சின்னண்ணனும் எஸ். அரியரெத்தினமும் இவ்வூழியத்திற்காகப் பிரத்தியேகப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டு, கானந்தனை, முறுத்தானை ஆகிய கிராமங்களுக்குச் சமீபத்திலுள்ள **வட்டிபோட்டமடு** எனுமிடத்தில், அரசாங்கத்திடம் பெற்ற எட்டு ஏக்கர் பூமியில் ஊழியத்தை ஆரம்பித்தனர். அப்போதிருந்த உதவி மாகாண அதிபர் திருவாளர் தேவராஜன், C.T.R. சிங்கம், டாக்டர் குணம் லூதர், திருவாளர் K.E. சௌந்தரராஜா, K.R. இரத்தினசிங்கம் ஆகியோரோடு, அக்கிராமத்தைச் சேர்ந்த காசுபதி போடியார், நாகமணி போடியார், மாணிக்கப்போடியார், ஆகியோர் பெரும் உதவியாக இருந்தனர். இரண்டு மாதங்களாக அங்கிருந்த ஒரு சிறு கொட்டிலில் வசித்து வந்தனர். பற்றைக்காடு சூழ்ந்து, விஷப்பாம்புகளும் இன்னும் பல விஷஜந்துக்களின் குடியிருப்பாக இருந்தாலும், நம் அருமை இரட்சகருடைய பெரிதான அடைக்கலத்துக்குள் ஆச்சரியமாகக் காக்கப்பட்டனர். அந்நாட்களில் திரு C. அருமைநாயகம், தவராஜா, போல் செல்வநாதன், சுந்தர்ராஜ், ஜீவகாந்தி, ஆத்தர் நியூட்டன் இன்னும் பலர் அங்கே காலத்துக்கு காலம் தங்கியிருந்து உதவிகள் புரிந்தார்கள். பின்பு ஒரு கிணறும், ஜோதிவாசம் என்னும் ஒரு குடிசையும் கட்டப்பட்டு, 1953ம் ஆண்டு, ஐப்பசி மாதம், முப்பத்தியோராந்திகதி, மெதடிஸ்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை அக்கிராசனர் பேரருட்திரு ஜோர்ஜ் மெண்டிஸ் அவர்களால் பிரதிட்சை செய்யப்பட்டது. சகோதரி எலிசபெத் பேக்கர் அம்மையார் தீபம் ஏற்றி ஜோதிவாசம் என்னும் குடிசையினைத் திறந்து வைத்தார்



ஜோதி நிலையத்தின் முன் சின்னண்ணனும் ஏனைய தொண்டர்களும் நிற்பதை முதற்படத்திலும், ஜோதி நிலையம் பிரதிஷ்டை செய்யப்படுகையில் குழுமியருந்தோரை இரண்டாவது படத்திலும் காண்க.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்தும் அயற்கிராமங்களில் இருந்தும், ஏராளமான மக்கள் சமூகமளித்தனர். சில மாதங்களுக்குள் அரசாங்கம் அளித்த சிறு நன்கொடையைக் கொண்டு "சகாயர் வாசம்" எனும் வீடு கட்டப்பட்டது. சகோதரர் களான ஹரல்ட் குட்சைல்ட், கதிரேசு செபரெத்தினம், பசில் றெபேறா என்பவர்களும் வேறு பல சகோதரர்களும் காலத்துக்குக் காலம் இந்த ஊழியத்தில் மிகவும் உதவியாக இருந்தனர்.



ஹரல்ட் குட்சைல்ட்



கதிரேசு செபரெத்தினம்



பசில் றெபேரா

காட்டில் வசிப்பவர்கள் இரண்டு மூன்று குடும்பங்களாக பற்பல இடங்களில் பரந்திருந் தமையினால், அவர்கள் வசிக்கும் இடங்களுக்குப் போய்ச் சேருவது சற்றுச் சிரமமான காரியமாகக் காணப்பட்டிருப்பினும், அவ்வவ்விடங்களுக்குச் சென்று, படக்காட்சிகள், பாட்டுகள், பிரசங்கங்கள் மூலம் சுவிசேஷப் பணிகள் செய்து வந்தனர். வைத்திய உதவியற்ற இடங்களாக இருந்தமையினால் வியாதியஸ்தருக்கு வைத்திய சிகிச்சையும் காயப்பட்டவர்களுக்கு முதலுதவியும் செய்து வந்தனர். ஏழை மக்களிடம் காணப்பட்ட உள்ளம் நிறைந்த விசுவாசமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நிறைவான கிருபையும் பலருக்கு ஆச்சரியமாகபூர்வமாக ஆரோக்கியமளிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்திற்குண்டான வயலைக் கடவுளின் தாசர்களே பண்படுத்தியும், தங்களால் செய்ய முடியாத வேலைகளைக் கூலியாட்களைக் கொண்டும் செய்து வந்தனர். இவ்வேலையில் கோவில்பிள்ளை சாமுவேல் பெரும் உதவியாக இருந்தார். சில வருடங்களில் வயல்களில் நஷ்டம் ஏற்பட்டபோதும், பொதுவாக வயல் வருமானம் பொருளாதார நிலைமையினைச் சீர்ப்படுத்த பெரும் உதவியாக இருந்தது.

இலங்கைத் திருச்சபைக் குருவும், ஆச்சிரம நண்பனுமாகவிருந்த காலஞ்சென்ற அருட்திரு உவல் கு. பிறட்சினல் அவர்களின் அன்பு நினைவாக நிறுவப்பட்ட ஒரு சிறிய அழகிய ஜெபவீடானது, 1955ம் ஆண்டு, ஆனி மாதம், கொழும்பு அத்தியட்சர் மகாகனம் கிரஹம்பெல் அவர்களால் அத்திவாரக்கல் நாட்டப்பட்டு, ஆவணி மாதம், 28ம் திகதி, தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகர் மகா கனம் சபாபதி குலேந்திரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது சுற்றுக் கிராமங்களிலிருந்தும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்கள். கிறிஸ்து குல ஆச்சிரம பெரியண்ணன் டாக்டர் இயேசுதாசன், பிரதம விருந்தினராகவும், டாக்டர். ஈ. பேற்றன் அவர்கள் விசேட பேச்சாளராகவும், டாக்டர் மேசன் ஒல்கோட் என்பவர் விசேட விருந்தினராகவும், செல்வி ஆ. ஹக்கின்ஸ் அம்மையார் பிரதம பேச்சாளராகவும் சமூகமளித்துச் சிறப்பித்தனர்.



திருப்பத்துார் கிறிஸ்துகுல ஆச்சிரம பெரியண்ணன் டாக்டர் சவரிதாசன் இயேசுதாசன்



டாக்டர் ஏர்னஸ்ட் பொரெஸ்டர் பேற்றன்


1956ம் ஆண்டு, மே மாதம், சேவக் இயேசுசகாயம் சின்னண்ணன் அவர்கள் இந்தியாவுக்குப் புறப்பட்டார். அங்கு திருப்பத்துார் கிறிஸ்து குல ஆச்சிரமத்திலும், பின்னர் பாலக்காட்டிலுள்ள கிறிஸ்து தாச ஆச்சிரமத்திலும், ஐந்து மாதங்கள் தங்கினார். கிழக்கு மாகாணத்தில், தான் ஊழியம் புரிந்து வரும் பழங்குடிமக்களுக்கு உதவுவதற்காக ஹோமியோபதி வைத்திய முறைமையின் இரகசியங்களையும் பயின்றார். சின்னண்ணன் அவர்கள் இந்தியாவிலிருந்தாலும், கிழக்கு மாகாணத்து ஊழியம் நடைபெறாது விடப்படவில்லை. ஜோதி நிலையத்தில் மூன்று வாரங்கள் சுவிசேஷக் கூட்டங்கள் 1956, செப்ரெம்பர் மாதம், 8ம் திகதி தொடங்கி நடாத்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வண G.A. .வின்ஸ்லோ, திருமதி A.C. தம்பிராஜா, ஆனந்தநாயகம் தம்பதிகள் ஆகியோரும், மட்டக்களப்பிலிருந்து சகோதரி மலர் சின்னையா, செல்வி தாசன், செல்வி அற்கின்ஸ் அவர்களும், வேறு சில உதவியாளர்களும் சமூகமளித்தனர். அக்டோபர் மாதத்தில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் ஜோதி நிலையத்தில் ஞான ஒடுக்கத்தை நடாத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**....கேக்ாஞூ ஊணாகே**


கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பான்மையான கிறிஸ்தவர்களும், ஆச்சிரம ஊழியர்களும் கிழக்கு மாகாணத்தில் போக்குவரத்து வசதியான இடத்தில் ஓர் ஆச்சிரமம் அமைப்பது, கிறிஸ்தவ மக்களின் ஆத்மீக ஜீவியத்திற்கு உதவியாக இருக்குமெனப் பலமாக உணர்ந்ததாலும், மட்டக்களப்பில் பல இடங்களைப் பார்வையிட்டு, கிரான் வாழ் அன்பர்கள் சிலருடைய வேண்டுகோளுக்கிணங்கவும், இறைவனுடைய திருவுளம் இதுவேயென நம்பி, கிரான் **'பாதிரியார் தோட்டம்'** என்றழைக்கப்படும் பதினேழரை ஏக்கர் பூமி வாங்கப்பட்டு, 1957ம் ஆண்டு, புரட்டாதி மாதம், ஜோதி நிலைய வருடாந்த விழாவுக்குப் பிரதம அதிதியாக அழைக்கப்பட்ட அன்புக்குரிய திருப்பத்தூர் ஆச்சிரமப் பெரியண்ணன் டாக்டர் சவரிதாசன் இயேசுதாசன் அவர்களால், கிறிஸ்தவ மக்கள் சூழ்ந்திருக்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1957ம் ஆண்டு ஆச்சிரமம் கிழக்கு மாகாணத்தில் செய்து வந்த ஊழியம் புதிய நிலையை அடைந்தது. மட்டக்களப்புப் பட்டணத்திலிருந்து வடக்கே 17 மைல் தொலைவிலுள்ள, கிரான் எனுமிடத்தில் எதுவித கட்டிடங்களும் இல்லாத நிலையில், ஒரு விசாலமான முந்திரிகை மர நிழலில் ஆச்சிரமப்பணி ஆரம்பிக்கப்பட்டு, முதலாவது நற்கருணை வழிபாடும், இம்மரநிழலின் கீழ் நடத்தப்பட்டது. புரட்டாதி மாதம் கனம் சேவக் சு. செல்வரெத்தினம் பெரியண்ணன் அவர்கள், கிரானில் உள்ள கிணற்றுக்கு அத்திபாரக்கல் வைத்தார். கிரானிலுள்ள சில கிறிஸ்தவ குடும்பங்கள் சமூகமளித்திருந்தனர் அன்று நான்கு அடி உயரமான கொட்டு கட்டப்பட்டது. அடுத்த நாட்காலை வந்து பார்த்தபோது, அத்தனையும் தகர்க்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டார்கள். மறுபடியும் புதிதாகக் கட்டிக் காவல் காத்து, அந்தக் கிணற்றைக் கட்டி முடித்தனர். இந்தக் கிணறு, கல்லாறு மெதடிஸ்த திருச்சபையின் அன்பளிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அதேவருடம் ஆகஸ்ட் மாதம் 30ந்திகதி, இந்தியா திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆச்சிரம பெரியண்ணன் டாக்டர் வண. இயேசுதாசன் அவர்கள் செப ஆராதனை நடாத்தினார். இப்புதிய நிலையத்தில், 1958ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் வண. ஜேம்ஸ் S. மேதர் அவர்கள் பிரதிஷ்டை ஆராதனை நடாத்தினார். இந்த நாளிலேயே இங்கு ஆச்சிரம ஊழியம் முறையாக நடைபெறத் தொடங்கியது. கிணறு உடைக்கப்பட்ட அன்று போடப்பட்ட சிறு காவல் கொட்டிலே வண சேவக் சின்னண்ணன், வண சாம் அண்ணன் ஆகியோருக்கு அந்த நாட்களிலே மழைக்கும் வெள்ளத்திற்கும் தங்குவதற்கு ஆதாரமாய் அமைந்தது.




கிரானில், மரமுந்திரிகை நிழலின் கீழே
முதலில் ஆரம்பிக்கப்பட்டு,
பின் கூடார வடிவில் நிறுவப்பட்டிருந்த
கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின்
முதலாவது ஜெபாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வட்டிபோட்டமடு, ஜோதி நிலைய ஜெபபீடத்தையும், 1958, ஆவணி, 30ம் திகதி நீதிபதி அரசு உவால்டன் அத்திபாரகமகல் நாட்டி, 1959ல் கட்டி முடிக்கப்பட்டு, கொழும்பு அத்தியட்சகர் மகாகனம் கிரஹம்பெல் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட செங்கல்லிலான கட்டிட அமைப்புடன்கூடிய கிரான் கிறிஸ்த சேவ ஆச்சரமத்தின் முதலாவது ஜெபாலயத்தையும் காணர்க



கிரான் கிறிஸ்த சேவ ஆச்சரம
முதலாவது ஜெபாலயப் பிரதிஷ்டை
ஆராதனையின் முன்னர். அடியார்கள்
பவனியாக வருகின்ற காட்சி இது.
இங்கு யாழ்ப்பாணத்திலிருந்து
வருகை தந்திருந்த ஆச்சிரம
அன்பனும்
வயலின் இசை விற்பன்னனுமான
திரு.அருமைநாயகம்
முன்னால் வயலின் இசை மீட்டுவர,
செல்வன் கேசவமேனன்
சிலுவையைக் கரங்களில் தூக்கிவர,
அருகில்
செல்வன் சிவகுரு ஈஸ்பரநாதன்
மலர்க்கொத்தைக்
கொண்டுவருவதையும் கீழுள்ள
படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கல கிரி


1958 ஆம் ஆண்டு இங்கு லூயிஸ் மாமா என அன்பாக அழைக்கப்பட்டவரின் நினைவாக அடைக்கலகிரி எனும் இல்லம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்குடிசைக்குக் கிரான் கிறிஸ்தவரான திரு சாமுவேல் குஞ்சுக்குட்டி உபாத்தியாயரும், அவரது மனைவி திருமதி கிறேஸ் நாகமுத்து குஞ்சுக்குட்டி அம்மையாரும் அத்திபாரக்கல் நாட்டினர். இவர்களே இந்த கிராமத்தின் முதலாவது கிறிஸ்தவத் தம்பதிகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.





லூயிஸ் மாமாவை முதற்படத்திலும், திரு. சாமுவேல் குஞ்சுக்குட்டி உபாத்தியாயர், அடைக்கலகிரி இல்லத்திற்கான அடிக்கல் நாட்டுவதை இரண்டாவது படத்திலும் காண்க

இக்குடிசையானது, 1958 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 8ஆம் திகதி கனம் இராமநாதன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது மட். வின்சன் மகளிர் பாடசாலை அதிபர் செல்வி ஏ. பத்மன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது வசிக்க இல்லிடமற்றவர்களாய் அவதியுற்ற நாற்பது, ஐம்பது பேர் இக்குடிசையில் அடைக்கலம் புகுந்து ஆறுதல் பெற்றமையால் இக்குடிசைக்கு 'அடைக்கலகிரி' எனும் பெயர் புனையப்பட்டது. அவ்வருடம் வைகாசி மாதம் இலங்கை முழுவதிலும் ஏற்பட்ட இனக்கலகம், கவலைக்கிடமான பல சம்பவங்களை ஏற்படுத்தியது. இப்பகுதிக் கிராம மக்கள் நகரக் காவலர்களாலும் இராணுவத்தினராலும் பலமாகத் தாக்கப்பட்டனர்.



அன்று லூயிஸ் மாமாவின் நினைவாக கட்டப்பட்ட அடைக்கலகிரியின் தற்போதைய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் காலை மூன்று மணியளவில் கிரான் ஆச்சிரமத்தை நோக்கி சுமார் அறுபது முறை சுட்டார்கள். சகோதரர் ஹரல்ட் குட்சைல்ட், கதிரேசு சுந்தர்ராஜ் ஆகியோர் அக்குடிசைக்குள் அருமை இரட்சகரின் அன்புக் கரங்களுக்குள் அடைக்கலப்படுத் தப்பட்டனர். கிராம மக்கள் தங்கள் வீடுகளை விட்டு ஓடி ஒழித்துக்கொண்டனர். காலையில் அவர்கள் வந்து சுட்ட இடங்களைப் பார்த்து, இவர்கள் இருவரும் தப்பிப் பிழைத்தது தம்பிரான் செயல் என்று அதிசயப்பட்டனர். மெய்யாகவே இந்தக்குடிசை எங்களுக்கு அடைக்கலகிரியாகவே அமைந்துள்ளது.

நீதிபதி அரசு உவால்டன் அவர்கள் அவ்வருடம் ஆவணிமாதம் 30 ஆம் திகதி கிரான் ஆச்சிரம ஜெபாலயத்திற்கு அத்திபாரக்கல் நாட்டினார். அந்த நேரத்தில் அவர் கூறிய கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது "*சின்னண்ணன் வண. சேவக் இயேசுசகாயம் அவர்கள் என்னிடம் வந்து இந்த ஜெபாலயத்திற்கு அத்திபாரக்கல் நாட்டவேண்டும் என்று என்னைககேட்டபொழுது நான் அதற்குத் தகுதியுள்ளவனோ என்று யோசித்து மறுத்துவிட்டேன். அன்றிரவு நான் சற்றுநேரம் யோசித்து உங்கள் அழைப்புக்கு அமைந்து நீங்கள் கட்டவிருக்கும் ஜெபாலயத்திற்கு அத்திபாரக்கல் நடுவேன் என்று எழுதினேன் சென்ற வைகாசி மாதம் இக்கிராமத்தில் நடைபெற்ற ஒரு கொலை சம்பந்தமாக உண்மையை அறிய இங்கே வந்து இரவு 11 மணியளவில் மன அமைதியற்றவனாய் என்னோடு வந்த நண்பர் ஒருவருடன் இவ்வழியாக நடந்துகொண்டு போகையில், இக்கொட்டிலில் எரிந்து கொண்டிருந்த தீபத்தைக்கண்டு, இதுதான் புதிதாக ஆரம்பித் திருக்கும் ஒரு கிறிஸ்தவ ஆச்சிரமம் என்றார் எனது நண்பர். உடனே நான் உள்ளே வந்து சிறிது நேரம் அமைதியாக இருந்து ஜெபித்து மனச்சாந்தியும் உற்சாகமும் அடைந்தேன். எனவே மனக்கவலையும் துன்பமும் தொல்லையும் உடையவர்களாய் அல்லல்படும் மக்கள் கிறிஸ்து இயேசு அருளும் மெய்ச் சமாதானத்தையும் பேரருளையும் பெற்றுக்கொள்ளும் புனித ஸ்தலமாக இருக்குமென்று நம்பி இந்த ஆலயத்திற்கு அத்திபாரக்கல் நாட்ட முன்வந்தேன்*' என்று கூறினார். இந்த ஜெபாலயம் கடவுளுடைய பேரருளால் 1959ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பூர்த்தியாக்கப்பட்டு கொழும்பு அத்தியட்சர் மகா கனம் கிரஹம்பெல் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இங்கே வாழைச்சேனை, கல்குடா, முறக்கொட்டஞ்சேனை, கிண்ணயடி, காகிதத் தொழிற்சாலை முதலிய



ஆச்சிரம ஜெபாலயத்திற்கும், உள்வீதிக்குமிடையே மரநடுகை நிகழ்வொன்றைச் சின்னண்ணன் ஏற்பாடு செய்தபோது, திருமதி. பரிமளம் பூபாலப்பிள்ளை அவர்கள் மாமரம் ஒன்றை நடுவதையும், சின்னண்ணன் மற்றும் கிரான் வாழ் அன்பர்கள் அருகில் நிற்பதையும் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிரானின் முதல் கிறிஸ்தவ தம்பதிகளான திரு.திருமதி சாமுவேல் குஞ்சுக்குட்டி அவர்கள் வைரவிழா வழிபாட்டின்போது....

இடங்களிலுள்ள கிறிஸ்தவர்களும் சூழவிருந்த கிராம கிறிஸ்தவ குடும்பங்களும் ஞாயிறு தோறும், ஏனைய பண்டிகை நாட்களிலும் கூடி வணங்குவர். இவர்களில் பெரும்பாலானோர் மெதடிஸ்த திருச்சபை அங்கத்தவர்களாக இருந்தனர். 1959ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற ஒரு கல் நாட்டு வைபவத்தில் பியுவெல் அம்மையார் எங்கள் சமையல் வீட்டிற்கும் திருமதி பொன்னம்மா கார்த்திகேசு ஆசிரியர் ஏ. ஆறுமுகம் ஆசிரியர், ஏ. தம்பிராஜா என்போர் சாது சுந்தரசிங் மடத்திற்கும் அத்திபாரக்கல் நாட்டினர்.

1960ஆம் ஆண்டு பழம்பெரும் கிரான் பதியின் முதல் கிறிஸ்தவ குடும்பமான திரு. திருமதி. சாமுவேல் குஞ்சுக்குட்டி அவர்கள் திருமணமான 60ஆண்டு நிறைவு வைரவிழாக் கொண்டாட்டம் ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டு, ஓர் ஆசீர்வாத வழிபாடு நடைபெற்றது. சிண்ணன்னனால் முன்னின்று நடத்தப்பட்ட இவ்வாராதனையில் கலந்து கொண்டவர்களில் அதிகமானவர்கள் இந்துக்களாகவே காணப்பட்டனர்.

## பத்தாவது ஆண்டு விழாவும், நினைவுமண்டபமும்

1968 ஆம் ஆண்டு கனம் சேவக் எஸ். செல்வரெத்தினம் பெரியண்ணன், கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்க, கிரான் ஆச்சிரம ஸ்தாபகரான சின்னண்ணன், யாழ் ஆச்சிரமப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். சின்னண்ணனின் ஆச்சிரமப் பணிகளால் கவரப்பட்ட அன்பர்களால் சின்னண்ணனுக்கு ஒரு பிரிவு உபசாரமாகவும், பெரியண்ணனை வரவேற்கும் ஒரு நிகழ்வாகவும் நன்றி செலுத்தும் வழிபாடு ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டது. இந்த வழிபாட்டில் திருமதி ஜெயமணி சிவகுரு அவர்களின் பாராட்டுரையும் செல்வி சுசிலா நவரெத்திணம் அவர்களால் பாடிய அகவல் பாவும் அனைவரையும் கவர்ந்த நிகழ்வாகும்.

இக்காலகட்டத்தில் ஆச்சிரமத்தின் பெரும் தேவையாக இருந்த மண்டபம் ஒன்றை கிழக்கு மாகாண கிறிஸ்தவர்கள் தங்கள் அன்பளிப்பாக அமைக்க வேண்டும் என்று தீவிர முயற்சியில் ஈடுபட்டு உழைத்தனர். திரு பி. ஜீ. ஜெயராஜ், திரு வைரவப்பிள்ளை ஆசிரியர், திரு து.ஏ. மூத்ததம்பி ஆசிரியர் து.மு. ராசமாணிக்கம் இன்னும் பலர் முன்னின்று உழைத்தனர். இவ்வாண்டு ஆனி மாதம் தென்னிந்திய திருச்சபை கன்னியாகுமாரி அத்தியட்சகர் மகாகனம் ஞானதாசன் அவர்கள் முதற்குழி வெட்ட கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை சுவாமி செல்வராஜா அவர்கள் பிரார்த்தனை செய்து ஆரம்பித்து வைத்தனர். 1968 ஆம் ஆண்டு ஆடி மாதம் 12 ஆம் திகதி இலங்கையின் மெதடிஸ்த சபா சங்கத் தலைவர் கனம் வண. வில்பிரட் சில்வா அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று வேலை துரிதமாக நடைபெற்று பூர்த்தியாக்கப்பட்டது.

மண்டபத்தின் மேடையமைப்பு காலஞ்சென்ற திரு. உவோல்டர் உலகசேகரம் அவர்களின் நினைவாகவும், ஒரு அறை காலஞ்சென்ற திரு. விக்ரர் சௌந்தரநாயகத்தின் நினைவாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய அறை, கல்லாறு வி.குழந்தைவேல் ஆசிரியர் நினைவாகவும் அமைந்திருந்தது. இதுவே தற்போது சின்னண்ணன் ஞாபகார்த்த மண்டபமாக பெயர் சூட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தை மெதடிஸ்த சபைத் தலைவர் மகாகனம் பேரருட்திரு. டி.ரி. நைல்ஸ் அவர்கள் பிரதிஷ்டை செய்து திறந்து வைத்தார். அத்துடன் "சாரோன்" எனும் ஒரு அழகிய கட்டடமும் பூர்த்தி செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இச் சாரோன் மண்டபம் முன்னாள் வின்சன் பாடசாலை அதிபர் செல்வி ஏ. பத்மன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவர் கேரளா தேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

ஆண்டு விழாவிற்கு முன் நிகழ்வாக அருள் விழா எனும் கலை நிகழ்ச்சிகள் அடங்கிய நிகழ்வை ஆண்டு விழாவின் முன் நிகழ்வாக நடத்திய பெருமை சின்னண்ணனுக்கே உரியது. அருள் விழாவின்போது, சின்னண்ணனின் நகைச்சுவை தழும்பும் கதாப் பிரசங்கத்தினைக் கேட்க, ஆவலாய் காத்திருப்பர். இரவு 10மணி வரையும் அருள் விழா நடைபெறும். பினனர் வந்திருக்கும் அனைவருக்கும் புளிச்சாதம் வழங்கப்படும். இவ்வுணவு வருபவர்களுக்குப் புதுச்சுவையைக் கொடுப்பதாகவும், விரும்பிச் சுவைக்கக் கூடியதாகவும் அமைந்திருக்கும். ஆச்சிரமத்தின் முக்கிய நோக்கமாகிய எளிமை, எப்போதும் கையாளப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அன்றைய நாட்களில் காலைக்கஞ்சி யாவருக்கும் நன்கு சீவப்பட்ட சிறட்டைகளில் வழங்கப்படுவது வழக்கம். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமில்லாது, அனைவரும் வாங்கிப் பருகுவர். மதிய உணவு வாழையிலையில் பரிமாறப்படும். ஏதோ இவ்வுணவில் சுவை உண்டு என அங்கலாய்த்தவாகள் பலர் உள்ளனர். கிழக்கு மாகாண மக்களின் பிரிய உணவாகிய தயிரும் சீனியும் இங்கு வழங்கப்படும். இதைச் சுவைத்துச் சாப்பிடுவதில் ஒரு தனி இரசனையே.


கிரான் ஆச்சிரமத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்தும், மட்டக்களப்பு, பொத்துவில் தொடக்கம் வாழைச்சேனை வரையிலுமுள்ள அனைத்துத் திருச்சபை மக்களும் கலந்து கொண்டனர். அத்தோடு கிரான் வட்டிபோட்டமடு, பூலாக்காடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த பல சைவ மக்களும் திரளாகக் கூடி, அருள் விழா நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர் இக்கிராமமே விழாக்கோலம் போல காட்சியளித்தது.

பல மெதடிஸ்த திருச்சபைகளிலிருந்தும் சிறந்த பல கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின மட்டக்களப்பு, திரு. மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் *பக்தன் யோபு* என்ற வில்லுப்பாட்டும், கிரான் ஜீவனால் இயற்றிப் பாடப்பட்ட *ஐயிரண்டு ஆண்டு அரும்பணி தன் மெய்யிரெண்டு கரம் கொண்டு காத்தவளாம்.. ஆச்சிரமத்தாயம்மா* என்ற பாடலும் பலரின் உள்ளத்தைத் தொட்ட நிகழ்வாகும். அத்துடன் ஜே.எச்.சந்திரசேகரம் குழுவினரின் மெல்லிசைப் பாடல்களும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். திரு எஸ்.ஜி. சௌந்தரராஜா அவர்கள் இயற்றி இசையமைத்த *சந்தோசம் என்னை ஏவுதே, சங்கீத மலர்கள் தூவுதே, ஆலயம் ஒரு துறவு, அது ஆதிபனின் தரவு* என்ற பாடல்களை செல்வராணி, தேவமலர், எஸ்.கே. சௌந்தராஜா ஆகியோர் பாடினர். திரு. பி. அற்புதராஜா அவர்களின் தபேலா இசையும் சந்திரசேகரம் எக்கோடியன் இசைத்த நளினமும் மறக்க முடியாதவையாகும். அனைத்திற தும் மகுடமாகச் சின்னண்ணனால் எழுதி வெளியிடப்பட்ட ஒரு வரலாற்று சிறப்பு மலரும் சிறப்பம்சமாகும். எல்லாவற்றிக்கும் மேலாக பெரியண்ணன் சேவக் செல்வரெத்தினம் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிடும் போது ***நீங்கள் இன்று சந்தோசப்படுகின்றீர்கள். ஆனால் நான் துக்கப்படுகின்றேன். ஏன் என்றால் இப்பேற்பட்ட ஆச்சிரமம், பின்னால் யார் கையில் இருக்கப்போகிறது என்பதுதான்!*** ஆத்ம யோகி பெரியண்ணன் அப்போதே இந்த ஆச்சிரமத்தின் நிலைமைகளைப் பற்றிக் கவலை கொண்டவராகவே இருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 ஆண்டு மே மாதம், பெரியண்ணன் யாழ் ஆச்சிரம் செல்ல, சாம் அண்ணன் சேவக் சாம் தேவரெத்தினம் அல்பிரட் அவர்கள், கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டார். சாம் அண்ணன் கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்று நடாத்திக்கொண்டிருக்கும் பொழுது காத்திராப்பிரகாரம் எங்கள் அன்புச் சின்னண்ணன் 1970 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் திகதி காலமானார். சின்னண்ணனின் மறைவு ஆச்சிரம அன்பர்கள் அனைவரின் உள்ளங்களிலும் விடிவில்லாத இருளாகச் சூழ்ந்து கொண்டது எனலாம். கிரானிலிருந்தும் பலர் யாழ்ப்பாணம் சென்று சின்னண்ணனின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டனர்.



சின்னண்ணனது வாழ்வின்
பதிவுகளிலிருந்து
கிடைக்கப்பெற்ற படங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னண்ணன் - இம்மையிலிருந்து, மறுமைக்கு....



சின்னண்ணன் தன் உலக வாழ்வின் நிரந்தர ஓய்வின்போது.....




இறுதி யாத்திரையின்போது, சின்னண்ணனின் சகோதரன் அருட்திரு. ஐசாக் செல்வரட்ணம் அவர்கள் சிலுவையுடன் முன்னே..



சின்னண்ணனின் அருமைத் தாயார் சோகமே உருவான நிலையில்...






பெரியண்ணனும், சாம் அண்ணனும் சோகத்துடன் இருப்பதை முதற்படத்திலும், மரண ஆராதனை வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெறுவதை இரண்டாவது படத்திலும் காண்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரானில் நடைபெற்ற சின்னண்ணனின் நினைவு ஆராதனையில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சின்னண்ணன் இயற்றி இசையமைத்த *உம்மைப்போல யாரே உலகிலே என்னை நேசித்தாரோ* என்ற பாடலை பெரியண்ணன் முழங்காலில் நின்று, இரண்டு கண்களிலும் நீர் வழியப் பாடியது எல்லோரது உள்ளங்களையும் உருக வைத்தது. அந்நாட்களில் சேவக் ஹரல்ட் குட்சைல்ட் (கரல்ட் அண்ணன்) அவர்கள் சாம் அண்ணனுக்கு உதவியாகக் கிரான் ஆச்சிரமம் வந்து சேர்ந்தார்.

1973 ஆம் ஆண்டு பெரியண்ணன் சேவக் எஸ் செல்வரெத்தினம் அவர்கள் யாழ்ப்பாண ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும்போது, மார்ச் மாதம் 25 ஆம் திகதி, சடுதியாக நோய் வாய்ப்பட்டு, மானிப்பாய் கிறின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 29 ஆம் திகதி மறுமைக்குள் பிரவேசித்தார்.







பெரியண்ணனின் வெளிநாட்டுப் பயணமொன்றின்போது எடுக்கப்பட்ட படங்களை இடதுபுறத்திலும் வலதுபக்க மேல்மூலையிலும் காண்க.
வலதுபுறம் கீழுள்ள படத்தில் டாக்டர் கிளென் கிளார்க், டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ், வண.றோலண்ட் பிறவுண், வண. டாக்டர் டி.ரீ.நைல்ஸ் ஆகியோருடன் பெரியண்ணன் நிற்பதைக் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியண்ணன் வாழ்வின் இறுதி ஊர்வலம்





மூவராய் இணைந்து
நடாத்திய
ஆச்சிரமப் பயணத்தில்
தன்னந்தனியனாய்
பெரியண்ணனின் இறுதி
யாத்திரையில்
சாம் அண்ணன்
ஏனைய அடியார்களுடன்
சோகத்துடன்
முன்னே போகையில்....

சின்னண்ணனுடைய இழப்பு, அதனைத் தொடர்ந்து பெரியண்ணனுடைய பிரிவு, இவை எல்லாம் உலகம் வாழ் கிறிஸ்தவ நெஞ்சங்களுக்குப் பெரும் வேதனைகளைத் தந்த நிகழ்ச்சிகளாகும். மட்டக்களப்பு, யாழ்ப்பாணக் கிறிஸ்தவ மக்கள் தாயைப் பிரிந்த சேயைப் போலவும், தன்னிழல் அற்ற தந்தையைப் போலவும் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தனர்.

இந்தத் துக்ககரமான சங்கதிகள் நடந்தபொழுது, சேவக் ஹரல்ட் குட்சைல்ட் (ஹரல்ட் அண்ணன்) கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்க, சாம் அண்ணன் அவர்கள் யாழ். ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்றார். இக்காலத்தில் கிரான் அடைக்கலகிரி புதுப்பிக்கப்பட்டு, அக்கட்டிடம், காலஞ்சென்ற திருமதி ஜானகி பூபாலப்பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன்பின் ஹரல்ட் அண்ணன் தனது சுய அபிப்பிராயத்தின்பேரில் கொழும்புக்குச் செல்ல, பி.ஜெ. சூரியகுமார் அவர்கள்; கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்றார். சூரியண்ணனின் பின் திரு.ஜெ. சின்னத்துரை (பொலிஸ் ஐயா) அவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். யாழ். நவாலியைச் சேர்ந்த இவர், ஆச்சிரமப் பணிகளில் மிகவும் வாஞ்சையுள்ளவராகவும் இறைபக்தி மிகுந்தவராகவும் காணப்பட்டார்.

## சூறாவளி-1978 நவம்பர் 21

பொலிஸ் ஐயாவின் காலத்திலே, கிழக்கு மாகாணத்தைப் பலி கொண்ட பெரும் சூறாவளி வீசியது. சூறாவளியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு, யாழ்-சுன்னாகத்தை சேர்ந்த மில்க்வைற் கம்பனியினரால், கிரான் ஆச்சிரமத்தில் வைத்து, நிவாரண உதவிகள் வழங்கப்பட்டதும், ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அப்போது கிரான் ஆச்சிரமம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. சகல கட்டிடங்களும் தரைமட்டமாகியது. இருந்தபோதும் ஆண்டவர் இயேசுவின் அளப்பெருங்கருணையால், சாம் அண்ணன் பல நண்பர்களின் உதவியுடன் எல்லாக்கட்டிடங்களையும் புனரமைக்கக்கூடியதாக இருந்தது. திரு பாலன் பொணே அவர்கள், ஆச்சிரமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு, முழு உதவியையும் புரிந்தார். அத்துடன் கோயிலுக்கு முன்னாலுள்ள மெழுகுதிரி வெளிச்சக் கோபுரம், காலஞ்சென்ற திரு. இராமச்சந்திரன் நினைவாக திருமதி திரவியம் இராமச்சந்திரன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டது. சூறாவளியினாலே முற்றாகத் தகர்க்கப்பட்டு, நிலை குலைந்துபோன மணிக்கோபுரத்தை, காலஞ்சென்ற திரு. மோசஸ் பிள்ளை அவர்களின் குடும்பத்தினரே திரும்பவும் இரண்டாம் தரமாக மீளமைத்துத்தந்தனர்.


மெழுகுவர்த்தி வெளிச்சக் கோபுரம்


மணிக்கோபுரம்

1983 ஆம் ஆண்டு இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட தென்பகுதிக் கிறிஸ்தவ குடும்பத்தினர் பலர் கிரான் ஆச்சிரமத்திற்கு வந்து சேர்ந்தனர். இவர்களை இங்கு அழைத்து வந்தவர், மெதடிஸ்த சபைக் குருவான அருட்சகோதரி மலர் சின்னையா அவர்களாவார். இக்குடும்பங்கள் ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்தனர். தொடர்ந்தும் இவர்கள் இங்கு தங்குவது, ஆச்சிரம விதிகளுக்குப் பொருத்தமற்றது. எனவே சாம் அண்ணனும், அருட்சகோதரி மலர் சின்னையாவும் இணைந்து இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தீர்மானித்தனர். சாம் அண்ணன் ஆச்சிரமக் காணியை இலவசமாக வழங்கினார். மெதடிஸ்த சபையின் நிதியுதவியுடன் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டது. 1986ம் ஆண்டு சாம் அண்ணன் வேண்டிக்கொண்டதற்கிணங்க, திரு.சி. பிலிப்குமார் கிரான் ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்று நடாத்தினார்

1988 ஆம் ஆண்டு சாம் அண்ணனால், கிரான் ஆச்சிரமத்தில் *பெரியண்ணன் கலா மன்றம்* உருவாக்கப்பட்டது. அதற்கு, அப்போது ஆச்சிரமத்தில் தங்கியிருந்த திரு.யோ.செல்வராஜா மட்டக்களப்பு பிரதம நூலகர் அவர்களே தலைமை வகித்தார். திரு.கே. தாமோதரம் அதிபர் அவர்களால் இயற்றப்பட்ட *வருகையின் தூதன* என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்தும் அரங்கேற்றப்பட்டது. டாக்டர் வின்சன்ட் இவற்றிற்கு முழு அனுசரணையாக இருந்துள்ளார். மேலும் திருமதி திரவியம் இராமச்சந்திரனின் தயாரிப்பில், தீசன் ஜெயராஜ் பிரதான தாவீது பாகமேற்று நடித்த *கோலியாத்தை வென்ற குமரன்* நாட்டுக்கூத்தும் பலரது பாராட்டையும் அப்பொழுது பெற்றிருந்தது. மட்டுமன்றி ரூத், போவாஸ், போன்ற வடமோடி நாட்டுக்கூத்துக்கள் இயற்றி மேடையேற்றப்பட்டு, நமது பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்துக்கலையும் இங்கு வளர்க்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.



பெரியண்ணன் கலாமன்றத்தின் அப்போதைய தலைமைப் பொறுப்பிலிருந்த மட்டக்களப்பு, பிரதம நூலகர் திரு. யோ. செல்வராஜா (முதலாவதாக நிற்பவர்) அவர்களுடன் நாட்டுக்கூத்துத் தயாரிப்பாளர் திரு. தாமோதரம், வருகையின் தூதன் நாட்டுக்கூத்தில் பிரதான பாகமேற்ற அருள்சீலன் மற்றும் அண்ணாவியார்

1989.ஆம் ஆண்டு, தென்னிந்தியத் திருச்சபையின் பணிகள், மட்டக்களப்பில் வியாபிக்கத் தொடங்கியது. அந்த நேரத்தில் சாம் அண்ணன் அவர்களை வண. ஏழ் சொலமன்ஸ் அவர்கள் சந்தித்து உரையாடியபோது, சாம் அண்ணன் அவர்கள், *கிரான் பகுதியில் ஆச்சிரமமானது, ஆத்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதனால் மற்றைய திருச்சபைகள், இப்பகுதியில் செபாலயங்கள் கட்டுவதோ, ஆலயங்கள் அமைக்க முயற்சிப்பதோ தேவையற்ற விடயம்* என்று சொன்ன வார்த்தைகள் இங்கே குறிப்பிடத்தக்கது.

பல அனர்த்தங்களின் விளைவுகளைச் சுமந்து வந்த ஆச்சிரமம், இந்தப் பிரதேசம் எங்கும் மக்கள் இடம் பெயர்ந்து ஓடி உயிருக்காகப் பயந்து அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தவேளையில் 1990ஆம் ஆண்டு ஆச்சிரமத்தை விட்டு வெளியேறி, உடமைக்கும் உயிருக்கும் உத்தரவாதமற்றவர்களாய் இடம் பெயர்ந்து பாதுகாப்புத் தேடி, நகர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த வேளையில் ஆண்டவர் இயேசுவின் அருள் பொங்கும் திருமகனாக சாம் அண்ணன் அவர்கள் கிரான் ஆச்சிரமத்தில் இருந்தமை ஆண்டவரின் பெரிய ஆசீர்வாதம் என்றே கூற வேண்டும். சாம் அண்ணன் அவர்கள் ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்டவர்களுடன் இடம்பெயர நேரிட்டது. அன்றிரவு முறக்கொட்டான்சேனையில் உள்ள திருமதி. சொர்ணமணி விக்டர் சௌந்தரநாயகம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். அவர்களும் தாராள பெருமனதுடன் அடைக்கலம் தந்து, அத்தனைபேருக்கும் உணவும் தந்து உபசரித்தார்கள். அடுத்தநாள் அவ்விடத்தி லிருந்து இடம்பெயர்ந்து வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம் சென்றனர். அங்கு சில நாட்கள் தங்கி இருந்தனர். அங்கு அவர்கள் இருக்கும் போதே பல இளைஞர்கள் முதியோர்களைக்கூட அரசாங்கப் படைகள் வந்து வாகனத்தில் அழைத்துச் சென்றனர். அவர்கள் அனைவரும் இன்றுவரை காணாமல் போனவர்கள் பட்டியலில் உள்ளமை பெரும் துக்கரமானதாகும். ஒரு வாரம் கடந்த பின்னர், சாம் அண்ணனும் அவருடன் அடங்கியவர்களும் இராணுவ அதிகாரியின் அனுமதியுடன் கிரான் ஆச்சிரமத்திற்கு திரும்பி வரத் தீர்மானித்தார்கள். வரும் வழிகளில் அவர்கள் பார்த்த அனர்த்தங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகளை விபரிக்க முடியாதவாறு இருந்தது. சாலையோரங்களில் இருந்த வீடு, கடைகள் எல்லாம் எரிக்கப்பட்டுச் சூறையாடப்பட்டிருந்தது. இடையிடையே சடலங்கள் எரிக்கப்பட்ட நிலையிலும் இருந்தன. அரச படைகள் பல இளைஞர்களைப் பிடித்துத் துன்புறுத்திக் கொண்டு நின்றனர்.

கிரானை அவர்கள் வந்தடைந்ததும், இரவு 7.00 மணி இருக்கும், கிரான் சந்தியில் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டனர். ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுப் பெரும் நிர்ப்பந்தமும், பயங்கரமுமான நிலையில் துன்புறுத்தப் பட்டனர். கண்களை மூடும்படி எல்லோருக்கும் கட்டளை இடப்பட்டது. இவைகளுக்கெல் லாம் மத்தியில் *சுவாமி* என்ற ரீதியில், சாம் அண்ணன் அவர்கள் தனிமையாக இருத்தப்பட்டார். ஆயினும், எங்கள் சாம் அண்ணன் கண்ணீர் வழிய, ஆண்டவரை நோக்கி மன்றாட்டமாக செபித்துக் கொண்டு நின்றார். அந்தவேளை படைப்பிரிவின் பெரிய அதிகாரி வந்ததும், சாம் அண்ணனுடன் நேரடியாகப் பேசி அனைவரையும் போகும்படி அனுமதி வழங்கப்பட்டது அது ஆண்டவனின் பெரும் அற்புதச் செயலாகவே காணப்பட்டது. ஆச்சிரமத்தில் வந்து பார்வையிட்டபோது ஆச்சிரம வளாகமே பெரும் அல்லோலகல்லோலபட்டுக் கிடந்தது. ஆச்சிரமத்தின் குறிப்பிடத்தக்க பல பொருட்கள் நெடுஞ்சாலையில் சிதறிக் கிடந்தன. ஆச்சிரமக் கோயில் கதவு உடைக்கப்பட்டுக் கிடந்தது. எல்லாக் கட்டிடங்களிலுமிருந்த பொருட்கள், உடைமைகள் யாவும் சூறையாடப்பட்டும், வெளியே அங்கும் இங்கும் சிதறியும் கிடந்தன. கிரானில் மனித வாடையே இல்லாதிருந்தது. இந்நிலையில், படிப்படியாகக் கிரான் மக்கள் பலர் ஆச்சிரமத்தில் தஞ்சம் புகுந்தார்கள். இவர்களுக்கு முதன்முதலாக நிவாரண உதவிகளை மட்டக்களப்பு இந்துமாமன்றம் வழங்கியது. தொடர்ந்து மெதடிஸ்த திருச்சபையினதும் வேறு நிறுவனங்களினதும் உதவிகள் கிடைத்தன. சாம் அண்ணன் அவர்களே இடம்பெயர்ந்து வந்த மக்களின் தேவைகளைக் கண்டறிந்து முன்னின்றுழைத்தார். இந்நிலையில் 1991 ஆம் ஆண்டு இரண்டு மாதங்கள் மட். கிரான் மகா வித்தியாலயம் பாடசாலை ஆச்சிரமத்திலேயே நடைபெற்றது. எங்கள் ஆச்சிரமம் பல வகைகளிலும் துன்பப்பட்டு வருவோரைத் தேற்றும் ஒரு புனித தலமாக இயங்கி வந்துள்ளமை ஆண்ட வரின் இனிய அருட்கொடையே.

1990 ஆம் ஆண்டு நிகழ்வின் போது உடைக்கப்பட்ட ஆச்சிரமத்தின் கதவு கூரைகள் என்று பலவும் நண்பர்களின் உதவியால் திருத்தி அமைக்கப்பட்டன. அப்போது மட்டக்களப்பு-யாழ்ப்பாணத் தொடர்புகள் இல்லாது இருந்தது. இந்த நிலையில் சாம் அண்ணன் கிரானில் இருந்தது பெரும் பாக்கியம் ஆகும்.

*ஆச்சிரமத்தைப் பொறுத்தளவில் வெளிநாடுகளில் உள்ள ஆச்சிரம நண்பர்களின் சிரத்தையும், கரிசனையும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது* என்று சாம் அண்ணன் அவர்கள் கூறினார். சாம் அண்ணனுக்கு வெளிநாடுகளில் இருந்து பல அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. ஆனால் எமது ஆச்சிரம நிலைமைகள் காரணமாக அவைகளைப் பெரிதும் பொருட்படுத்தவில்லை. ஆனாலும் மீண்டும் மீண்டும் வெளிநாடுகளிலுள்ள ஆச்சிரம நண்பர்களின் அன்புத் தொல்லைகளின் நிமித்தம், 1994 ஆம் ஆண்டு சாம் அண்ணன் வெளிநாடு சென்றார். கனடா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து, அங்குள்ள ஆச்சிரம நண்பர்கள் பலரைச் சந்தித்ததோடு, அங்குள்ள ஆலயங்களில் ஆராதனைகளையும் நடாத்தினார். சாம் அண்ணன் அவர்கள் 1995 ஆம் ஆண்டு, வெளிநாட்டிலிருந்து கிரானுக்குத் திரும்பினார். இங்கிருந்த வண்ணமே, அவரது சிந்தனைகள், கிரான் ஆச்சிர புனரமைப்பு பற்றியதாகவேயிருந்தது. இதன் காரணமாக 1996 ஆம் ஆண்டு சாம் அண்ணன் அவர்கள் கிரான் ஆச்சிரம சாது சுந்தரசிங் மடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாம் அண்ணன் அவர்கள் அவுஸ்திரேலியா சென்றிருந்தபோது, லைட்னிங் றிட்ஜ் இலுள்ள கங்காரு ஹில் லுக்கு விஜயம் செய்தபோது, கங்காரு குட்டியுடனுள்ள அன்பருடன் உரையாடுகையில் எடுக்கப்பட்ட படம்

பதினைந்து நாட்கள் உபவாசமிருந்தார். அதன் பின் ஆச்சிரம ஜெபாலயம், மண்டபம் முதலியவற்றைப் புனரமைக்கக் கால்கோளெடுத்தார்.

ஜெபாலயமும் பெரிதாக அமைக்கப்பட்டது. இதற்கான பொறியியல் வடிவமைப்பையும் மேற்பார்வையையும் திரு.P.E.துரைராஜா அவர்களே செய்துதவினார்., முதலில் 1997 ஆம் ஆண்டு, மண்டபம் புனரமைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட மண்டபத்திற்குச் சாம் அண்ணன் அவர்கள் ***சின்னண்ணன் ஞாபகார்த்த மண்டபம்*** என்று பெயர் சூட்டினார். இதன் பின்னர் ஆச்சிரம ஜெபாலயத்திற்கான திருத்த வேலைகள் முற்றாக மேற்கொள்ளப பட்டது. முன்பிருந்ததிலும்விட மிகவும் பெரிதான அளவில் ஆலய மண்டபம் நிர்மாணிக் கப்பட்டது. ஞானஸ்நானத் தொட்டியும் பெரிதாக்கப்பட்டது. அத்தோடு ஆலயத்திற்கு முன்னாலுள்ள சிலுவையும் தூர அமைக்கப்பட்டது. சந்தியா மேடையும் அதனருகே இரண்டு தாமரைத் தொட்டிகளும் புதிதாக அமைக்கப்பட்டன. இக்காலங்களில் ஆராதனைகள் மண்டபத்திலேயே நடாத்தப்பட்டுவந்தது.






ஆச்சிரமக் கட்டிடங்களின் மீள் புனருத்தாரணப் பணிகளின்போது, திரு.பி.ஈ.துரைராஜா, திரு.எஸ்.ஜே.தங்கராஜா மற்றும் தொண்டர்களுடன் சாம் அண்ணன் நடாத்திய புனருத்தாரணத் திட்டமிடல் கலந்துரையாடல்களின்போது எடுககப்பட்ட படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீள் புனருத்தாரண நிறைவில் சாம் அண்ணனால்
**'சின்னண்ணன் நினைவு மண்டபம்'** எனப் பெயரிடப்பட்ட மண்டபம்

1996, செப்டம்பர், 07 ஆம் திகதி புதிதாகப் புனரமைக்கப்பட்ட இவ்வாலயம், யாழ். மாவட்ட இலங்கைத் திருச்சபைத் தலைமைக்குரு. அதிவண. ஜோசப் சர்வானந்தன் அவர்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டது. பெருந்தொகையான மக்கள் இவ்வைபவத்தில் சமூகமளித்தனர். புதிதாகப் புனரமைக்கப்பட்ட *சின்னண்ணன் நினைவு மண்டபம* இவ் ஆச்சிரம ஆளுகைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு.எஸ்.ஜே. தங்கராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.




மீள்புனரமைக்கப்பட்ட கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் பிரதிஷ்டை விழாவின்போது
வீதிப் பவனியில் நடனக்குழு முன்னால் நடனமாடிச் செல்ல
தொடருகின்ற சாம் அண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீள்புனருத்தாரணம் செய்யப்பட்ட கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமப் பிரதிஷ்டை விழாவின்போது, வீதிப்பவனியில் குருமார் அணியினரோடு சாம் அண்ணன்



வீதிப்பவனியில் ஆச்சிரம அடியார்கள் அணியின்முன் சிறிய கை ஒலிபெருக்கி மூலம் பவனியை வழிநடத்திச் செல்லும் சாம் அண்ணன்




வீதிப்பவனியானது ஆச்சிரமப் பிரதான வாசலால் உள்ளே நுழைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வண. ஜோசப் சர்வானந்தன் நாடா வெட்டி ஜெபாலயத்தை திறந்து வைக்கும் காட்சி. அருகில் சாம் அண்ணன் காணப்படுகிறார்





மீள்புனருத்தாரணம் செய்யப்பட்ட கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமப் பிரதிஷ்டை வழிபாட்டில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினர்






பிரதிஷ்டை வழிபாட்டு நிறைவில் சாம் அண்ணனின் தலைமையில் ஞானஸ்நானத் தொட்டி நோக்கி வரும் குருமார் அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக அமைக்கப்பட்ட திருமுழுக்குக்குரிய தண்ணீர்த்தொட்டி வண. கலாநிதி. எஸ் ஜெயநேசன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அன்று ஆராதனை அருட்திரு தயாநிதி அவர்களால் நடாத்தப்பட்டது. வண எஸ்.ஜெ. கதிரேசப்பிள்ளை அவர்கள் அருளுரையாற்றினார். செங்கலடி மெதடிஸ்த திருச்சபையினர் நன்றி செலுத்தும் வழிபாட்டை நடாத்தினர். அருட்சகோதரி ஆர். ஜெயக்குமாரி அருளுரையாற்றினார். அன்று பிற்பகல் நடைபெற்ற பகிரங்கக்கூட்டம், ஆச்சிரம ஆளுகைக்குழுவின் தலைவர் திரு பாலன் பொணே அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கல்லாறு மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஏ.ஓ.ஜெயானந்தன் சொற்பொழிவாற்றினார். வண. எஸ். ஜெயநேசன் அவர்கள் புதிதாக இரட்சிக்கப்பட்ட, முப்பத்தேழு பேருக்கு வளர்ந்தோர் திருமுழுக்கு நடாத்தினார். இதைத் தொடர்ந்து அருள் விழா நிகழ்வுகளும் சிறப்பாகவே நடந்தேறியது. அந்த ஆண்டு, விழா சிறப்பாக நடைபெறுவதற்கு ஆச்சிரம ஆளுகைக்குழுத் தலைவர் திரு. பாலன் பொணே அவர்களும் செயலாளர் திரு P.G. ஜெயராஜ் அவர்களும் உதவியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.





வண.கலாநிதி. எஸ். ஜெயநேசன் அவர்கள் திருமுழுக்குத் தண்ணீர்த்தொட்டியைப் பிரதிஷ்டை செய்வதை முதற்படத்திலும், பிரதிஷ்டை விழாவில் கலந்துகொண்ட அன்பர்களின் மற்றொரு பகுதியினரை இரண்டாவது படத்திலும், அன்று நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்தில் திரு.பாலன் பொணே அவர்கள் தலைமையுரை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம் அண்ணன் இங்கிருந்த நாட்களில், தான் யாழ்ப்பாண ஆச்சிரமம் சென்று அங்குள்ள ஆலய மணியை அடித்து, முழந்தாழில் நின்று செபித்தால்தான், தனக்கு நிம்மதியான சாவு என்று அடிக்கடி கூறுவார். யாழ்ப்பாண, மட்டக்களப்புத் தரைமார்க்கமான போக்குவரத்துத தடைப்பட்டிருந்தது. சாம் அண்ணனும் இடைக்கிடை சுகவீனமுற்றிருந்தார். இவ்வேளைகளில், திருமதி. அ. ரெட்ணம் ரீச்சர் குடும்பத்தினர் சாம் அண்ணனைக் கரிசனையுடன் கவனித்திருந்தார்கள். நமதாண்டவர் செய்யவேண்டிய சகல பணிகளையும் முறையாகவே செய்து வந்தார் என்பதற்கு இறையடியான் வண. சாம் அண்ணனின் வாழ்க்கையே எமக்கு நல்ல சான்றுகளாய் அமைந்தன.

1997 ஆம் வருடம் சாம் அண்ணனுக்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் அங்கு சென்றதும், மருதனார் மட ஜெபாலயப் புனரமைப்புப் பணிகளை இறைவனின் மகா பெலத்துடன் நிறைவேற்றினார். நிர்மாணப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே சாம் அண்ணன் அவர்கள் ஆலய பிரதீட்சை வழிபாடுகளை யார் யார் மேற்கொள்வது என நன்கு திட்டமிட்டு அனைவருக்கும் அழைப்புக்களையும் மேற்கொண்டிருந்தார். அதிகமாக உழைத்துக் களைப்படைந்த சாம் அண்ணன் அவர்கள், கடும் சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வேளை 1999 ஆம் ஆண்டு தை மாதம் 25 ஆம் திகதி அவர் திட்டமிட்டிருந்தபடி, ஆலயப் பிரதிஷ்டை விழாவும் நடந்தேறின.

ஆலய பிரதிஷ்டை விழாவில், *தான் எப்படியாயினும் கலந்து கொள்ள வேண்டும* என்ற அவாவுடனிருந்த சாம் அண்ணன் அவர்களை அழைத்துச் செல்வதற்கு மருத்துவர்களும் அனுமதி வழங்கினர். அம்பியூலன்ஸ் வண்டியின் நோயாளர் படுக்கையுடனேயே ஆச்சிரமம் அழைத்து வரப்பட்டார்.



மீள்புனருத்தாரணத்தின் பின்னர், மருதனார்மட கிறிஸ்த சேவ ஆச்சிரமப் பிரதிஷ்டை விழாவிற்கு, வைத்தியசாலையின், அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து நேரடியாக அம்பியூலன்ஸ் படுக்கையுடனேயே வருகை தந்திருந்த சாம் அண்ணன், குருமார் அணியின் முன்னால்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். ஆச்சிரம பிரதிஷ்டை வழிபாட்டின்போது பாடகர் குழுவினர் பாடல்களை வழிநடத்துகையில்....

யாழ். ஆச்சிரம பிரதிஷ்டை வழிபாட்டின்போது வழிபாட்டு நகர்வுகளை மிக ஆர்வத்துடன் அவதானிக்கும் சாம் அண்ணன். அருகில் கதிரையில் இருப்பவர் வண.டி.ஆர்.அம்பலவாணர்







யாழ். ஆச்சிரம பிரதிஷ்டை வழிபாட்டின்போது வழிபாட்டு ஒழுங்குப் பிரதியை அவதானிக்கும் சாம் அண்ணன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









யாழ். ஆச்சிரமப் பிரதிஷ்டை வழிபாட்டினைச் சிறப்பாக நடாத்திய திருச்சபைத் தலைவர்களான இலங்கைத் திருச்சபைப் பேராயர் அதிவண. கெனத் பேர்ணாண்டோ, சாம் அண்ணனுக்கு நற்கருணை அப்பம் வழங்குவதையும், இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அதிவண. டுலிப் பெர்ணாண்டோ, நற்கருணைப் பானம் வழங்குவதையும், தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதிவண. எஸ். ஜெபனேசன் இறுதியில் சாம் அண்ணனுக்காக இணைந்து ஜெபம் பண்ணுவதையும் படங்களில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாம் அண்ணன் சிறிது உரையாற்ற விருப்பம் தெரிவித்த போது ஐந்த நிமிடங்கள் மாத்திரமே பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் அரைமணிநேரம் உரையாற்றி விட்டார். தனது பணிக்காலம் தொடங்கி அன்றுவரைக்கும் நடந்த அனைத்து விடயங்களுக்கும் நன்றி செலுத்தும் ஒரு நீண்ட நன்றியுரையாகவே அது அமைந்திருந்தது. இறுதியாக பலாத்காரமாகவே அவரிடமிருந்த ஒலிவாங்கியைப் பற்றிக்கொண்டனர்.

பிரதிஷ்டை வழிபாட்டில் சாம் அண்ணன் ஜெப நிலையில் இருப்பதை மேலேயுள்ள படத்திலும், வழிபாட்டின் இறுதியில் சாம் அண்ணன் படுக்கையிலிருந்தவாறே அனைவருக்கும் நன்றியுரை நிகழ்த்துவதைக் கீழுள்ள படத்திலும் காண்க. இவ்வுரையே, சாம் அண்ணன் நிகழ்த்திய இறுதி உரை என்பது கவலையுடன் நினைவுகூரத்தக்கதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதிஷ்டை வழிபாட்டு நிறைவில் மீண்டும் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு சாம் அண்ணன் அழைத்துச் செல்லப்பட ஆயத்தமாகும்போது, நேரில் அனைவருக்கும் நன்றி தெரிவித்த காட்சி, அனைவரது உள்ளங்களையும் உடைத்தது.

சிறப்புற நடைபெற்ற ஆலயப் பிரதிஷ்டை வழிபாட்டினைத் தொடர்ந்து, சாம் அண்ணன் மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நல்ல போராட்டத்தைப் போராடினேன், நல்ல ஓட்டத்தை ஓடினேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்று முழங்கிய பவுலடியானைப் போலவே, எமது சேவக் சாம் அண்ணனின் உயிரும் பிரதிஷ்டை விழாவுக்கு மறுநாள், திருவுடலை விட்டுப் பிரிந்தது. 1999 ஆம் ஆண்டு தைமாதம் 26 ஆம் திகதி இறைவனின் சந்நிதியில் வாழப் புறப்பட்ட எமது சாம் அண்ணனின் பூதவுடலும், யாழ் ஆச்சிரம வளவிலேயே, அவரால் ஏற்கனவே குறித்துக்காட்டப்பட்ட இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

ஜெபாலயக் கட்டிடப் பணிகளை மேற்கொண்ட அதே மேசன்மார்களால், சாம் அண்ணனுக்கான கல்லறையும் கட்டப்பட்டு, பிரதிஷ்டை விழாவுக்கு வருகை வந்திருந்த குருவானவர்களாலேயே சாம் அண்ணனின் இறுதி மரண வழிபாடும் நடாத்தப்பட்டது. எல்லோரையும் ஒரு கணம் அதிரப்பண்ணியதெனலாம். ***நான் விசுவாசித்திருப்பவர் இன்னார் என்பதை அறிவேன்*** என்று இறுதிவரை தளராத விசுவாச வாழ்க்கை வாழ்ந்து காட்டிய எமது சாம் அண்ணனின் வாழ்வு புனிதமானது.

ஆச்சிரம அண்ணன்மார் மூவரையுமே தம்முடன் சேர்த்துக் கொண்ட ஆண்டவர் அற்புதமாகவே ஆச்சிரம பணிகளைத் தொடர்ந்தும் நிறைவேற்றி வருகின்றார். இறைவனின் வழிநடத்துதலுடன், ஓய்வு பெற்ற அதிபரான திரு.கே.குழந்தைவேல் அவர்கள் ஆச்சிரம பணிகளை 1999 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையும் முன்னெடுத்து வந்தார்.

# சாம் அண்ணன் மீளாத் துயில் கொள்ளுகையில்.....



சாம் அண்ணனின் திருவுடல்






அஞ்சலிக் கீதமிசைக்கும் இறையியல் கல்லூரி குருத்துவ மாணவர்களும் மலர்வளையங்களுடன் கதறியழும் பாடசாலை மாணவிகளும்



இறுதி வழிபாட்டின்போது உரையாற்றும் அதிவணக்கத்துக்குரிய எஸ் ஜெபனேசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதி வழிபாட்டின்போது உரையாற்றும் சின்னண்ணனின் சகோதரர் வண. ஐசாக் செல்வரெட்ணம்




இறையியல் கல்லூரி குருத்துவ மாணவர்கள் சாம் அண்ணனின் திருவுடலைத் தாங்கியவண்ணம் பிரேதக்குழி நோக்கி நகர்கையில்....



பிரேதக் குழியண்டையில் வண.எஸ்.எஸ். கருணைராஜ் அவர்கள் இறுதி ஒப்புக்கொடுத்தல் வழிபாட்டு ஒழுங்கை நிகழ்த்துகையில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாம் அண்ணனின் திருவுடல் குழியினுள்ளே இறக்கப்படுகையில்...

அதன் பின்னர், திரு.செ.அல்றின் இயேசு சகாயமும் அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தில் தங்கியிருந்து கல்வி கற்றவரான திரு.து.விஜயநாதன் அவர்களும், 2002 ஆம் ஆண்டு வரை ஆச்சிரமத்தைப் பராமரித்து வந்தாகள். விஜயநாதன் இறையியல் கல்வியினை மேற்கொள்ளச் சென்றபோது திரு.ஆ.பவாகரன் அவர்கள் பொறுப்பேற்று 2005 வரையும் நடாத்தி வந்தார். திரு ஆ.பவாகரன் இறையியல் கல்லூரிக்குச் சென்றபோது, ஆச்சிரமத்தில் தங்கியிருந்து கல்விகற்றுவரும் திரு.நோமன் நிரோசன் அவா.கள் இன்றுவரையும் ஆச்சிரமத்தின் பணிகளை நிறைவேற்றி வருகின்றார்.

இக்காலங்களில் திரு.என்.விஜயநாதன், திரு.ஆ.பவாகரன், திரு.க.திருச்செல்வம் ஆகியோர் இறையியல் படிப்பிற்காக சென்றமைக்கான உந்துதலானது, ஆச்சிரமத்தின் பணிகளையே சாரும். முதலாம் ஞாயிறு வழிபாடுகளையும், வெள்ளிதோறும் நடைபெறும் அமைதி, தியான வழிபாடுகளை நடாத்துவதில் திரு.கே.குழந்தைவேல் ஐயா ஆர்வமாக மேற்கொண்டு வந்தார்.

அருட்திரு. ஞானகாருணியன் போதகர் அவர்கள் தமது ஓய்வு காலங்களில் ஆச்சிரமத்திற்கு வருவதிலும், ஆச்சிரம கருமங்களில் கரிசனை மிக்கவராகவும் விளங்கி வருகின்றார். சிறப்பாக கிரான் ஆச்சிரமத்திற்கு அருகில் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தென்னிந்திய திருச்சபையின் சின்னண்ணன் சிறுமியர் இல்ல குருமனை, 1998 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மெதடிஸ்த குருமனை ஆகியவற்றில் தங்கியிருக்கும் திருச்சபை ஊழியர்கள் ஆச்சிரமத்தின் பணிகளிலும் பங்கெடுத்து, பொறுப்புடன் செயற்பட்டு வருவதனையும் இவ்வேளை குறிப்பிட்டேயாகவேண்டும்.

மெதடிஸ்த திருச்சபைக் குருவானவர் அருட்திரு. C. நைல்ஸ் ரவிசங்கர் அவர்கள் மாற்றலாகிச் சென்றபின் அருட்திரு என். அருள்நாதன் அவர்கள் ஆச்சிரம பரிபாலன சபைக்குழுவில் பொருளாளராகப் பொறுப்பேற்று, தமது திருச்சபைப் பணிகளோடு ஆச்சிரமப் பணிகளையும் கவனித்து வந்தார். 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போதும், 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த இடம்பெயர்வின்போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிக்களமாக ஆச்சிரமம் செயல்பட்டு வந்தது. அருட்திரு. G. அன்ரனி சதீஸ் போதகர் தமது திருப்பணிகளோடு ஆச்சிரம பரிபாலன சபைக்குழுவின் பொருளாளராக இருந்து, ஆச்சிரமக் காரியங்களைக் கரிசனையுடன் நிறைவேற்றி வருகின்றார். ஆச்சிரம பரிபாலன சபைத் தலைவர் அருட்திரு சந்திரன் கிறிஸ்பஸ் அவர்களும், ஆச்சிரமப் பணிகளில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருபவராக விளங்குகிறார். ஆச்சிரம வழிபாடுகளுக்கு திரு.S.J. றெஜிநோல்ட் ஓகன் இசையும், திரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பு.அருள்ராஜன் தபேலா இசை வழங்கி சிறப்பித்து வருவதோடு சிறப்பு வழிபாடுகள் ஈஸ்ரர், நத்தார் பஜனைகளுக்கு புதிய பாடல்களை இயற்றி இசையமைத்து வழங்குவதில் திரு.என்.கே.தயாளகுணசீலன் அவர்களின் பணிகளும் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆச்சிரமத்திற்குள்ளான சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், வளவுகளைப் பெருக்கிச் சுத்தம் செய்தல் போன்ற வேலைகளில் ஆச்சிரம வாலிபர்கள் வழமைபோல் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வருடம் நடைபெறும் ஆண்டுவிழா கிரான் ஆச்சிரமத்தின் பொன் விழாவாக அமைவதால் இப்பணிகள் சற்று அதிகமாகவே இருந்தன. இப்பணிகளில் பங்கெடுத்த அனைவரது கரங்களையும், ஆச்சிரமப்பணிகளில் மிகவும் கரிசனையுடன் ஈடுபட்ட, ஈடுபட்டு வருகின்ற திருச்சபைக் குருமார்களின் பணிகளையும், கடவுள் பெலப்படுத்தி வழிபடுத்தி வருகின்றார். சாம் அண்ணன் நினைவு மண்டபக் கட்டிட வேலைகளும், சாதுசுந்தரசிங் மடத் திருத்த வேலைகளும் துரிதமாக நடைபெற்று முடிந்திருக்கின்றன. பொன் விழா நிகழ்வுகளுக்காக ஆச்சிரம பரிபாலனக் குழுவினரால் பல சிறப்புக் குழுக்கள் அமைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத் திருப்பணிகளை ஆரம்பித்து பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் மூலமாக நமதாண்டவர் ஆற்றிய அரும்பணிகள் அநேகம். அவர்களோடு கைகோர்த்து உதவியவர்கள் அநேகர். இவைகளை எல்லாம் விபரிக்க இவ்வேடு எம்மாத்திரம். இப்பணிகளில் தம்மைப் பலர் இணைத்துக் கொண்டபோதிலும் இடையில் வேறு பணிகளுக்காக விட்டுச்சென்றனர். அவர்களைப் பற்றி ஒன்றும் இங்கு குறிப்பிடப்படவில்லை. ஆச்சிரமத்தின் எதிர்காலம் நமக்கு மறைக்கப்பட்டிருப்பினும் அது கடவுளுடைய கரத்திலேயே இருக்கிறது. எமது சாம் அண்ணன் கூறியபிரகாரம் *மனிதராகிய நம்மிலும் பார்க்கக் கடவுளுக்குத் தெரியும் என்ன செய்வதென்று. இத் திருப்பணியைத் தொடங்கிய என் பெருமான் இந்த ஒளியை மங்கவிடாமல் எரித்துக் கொண்டே இருப்பார்* என்பதே எமது தளதார நம்பிக்கை.



பொன் விழாக் காணும் கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் தற்போதைய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவத் துறவறம்

## இடுக்கமான வாசலுக்கான ஓர் திறவுகோல்

**ஆரம்பக் கிறிஸ்தவப் பின்புலத்தோடு பின்னிப்பிணைந்த ஓர் வரலாற்று, இறையியல் ஆய்வுக் கண்ணோட்டம்**

**தீசன் ஜெயராஜ்**
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**
*(மத்தேயு 7:14)*

### துறவறம் - அறிமுகம்

துறவற முறைமை *(Monasticism/Monachism)* எனும் சொல்லானது, 'ஒற்றையாய்' அல்லது 'தனித்த நிலையாய்', அல்லது 'தனியாக' எனப் பொருள் கொள்ளப்படக்கூடிய இலத்தீன் மொழியின் 'மொனாக்குஸ்' *(Monachus)*, பண்டைய கிரேக்கத்தின் 'மொனாக்கொஸ்' *(Monachos)*, பிற்கால கிரேக்கத்தின் 'மொனோஸ்' *(Monos)* எனும் அடிப்படைச் சொற்களிலிருந்து முகிழ்த்ததொன்றாகும். இச்சொல்லானது, லௌகீகப் பற்றறுத்து, அதினின்று நீங்குவதினூடு, மத அனுபவங்களின் உயர்நிலையொன்றை அல்லது பரிபூரணத்துவ இலட்சிய மொன்றினை அடைவதையே விரும்பித் தெரிவுசெய்துகொண்ட ஆண், பெண் தனிநபர்களினால் பொதுவுடமைக் கொள்கையுடன் அல்லது தனிமையாய் துறவு மடங்களில் பின்பற்றப்படும் வாழ்க்கை முறையைச் சுட்டிநிற்கிறது. இவ்வாறு கடவுளை மாத்திரமே மையப்படுத்தி, தனித்தநிலையினராய் அல்லது சமூகத்தி லிருந்து பெருமளவில் விலகிநிற்பவர்களாய், சமயக் காரணங்களுக்காக மணமா காத நிலையிலிருப்பவர்களாய் துறவற வாழ்வு நடாத்துபவர்கள் 'துறவிகள்' *(Monks)* என அழைக்கப்படுகின்றனர்.

### துறவற வகைகள்

கடவுளின்பால் பற்றுக்கொண்டு, உலகத்தைத் துறந்தவர்கள் ஆதியிலிருந்து இன்றுவரை கைக்கொண்டுவரும் துறவற வாழ்வின் வெவ்வேறுபட்ட நடைமுறை களுக்கேற்ப அவர்களை நான்கு வகையினராய் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. துறவுமடத்தின் மடாதிபதி ஒருவரின் தலைமைத்துவத்தின்கீழும், ஒரு சமய ஆளுகைக்குக்குக் கீழும் கடவுளுக்குச் சேவை செய்து துறவிமடத்திலேயே கூட்டுவாழ்வு வாழும் துறவிகள். ***(Cenobites)***

2. உடலும், உள்ளமும் எதிர்நோக்கும் எந்தவொரு போராட்டச் சவால் களையும் கடவுளின் பலத்த உதவியைப் பற்றிப்பிடித்துக் கொண்டு, தன்னந்தனியராய் நின்று மேற்கொள்ளவும், வேறெவரதும் ஆதரவில் லாமல் வாழவும் தயாரான நிலையில் ஆள் நடமாட்டம் மிகக் குறைந்த பாலைவனத் தளங்களில் தனித்தவராய் வாழும் துறவிகள். ***(Hermits / Anchorites)***

3. எந்தவொரு ஆளுகைக்குக் கீழோ அல்லது மடாதிபதிக்குக் கீழோ வாழாமல் கடவுளை மையப்படுத்தி அப்பொதுநோக்கிற்காகச சிறுசிறு குழுக்களாய் ஒன்றிணைந்து வாழும் துறவிகள். ***(Sarabaites)***

4. எந்தவொரு குறித்த துறவுமடத்திலும் நிரந்தரமாய்த் தங்கியிராமல், இடத்துக்கிடம் கடவுளின் பணிக்காய் சுற்றித்திரிகின்ற துறவிகள். ***(Gyrovagues)***

## திருமறைக் கண்ணோட்டம்

'துறவறம்', 'துறவி' 'துறவுமடம்' போன்ற எவ்வகைச் சொற்களும் திருமறையில் காணப்படாவிடினும், ஒவ்வொருவரதும் வாழ்வு முறைமைகளின் பின்னணியில் துறவறப் பண்புகளை நாம் அவதானிக்கமுடிகிறது. மோசே சாமுவேல், எலியா எலிசா, நாத்தான் மற்றும் இஸ்ரவேலின் ஏனைய தீர்க்கதரிசிகள் சிலரைப் போன்ற நசரேயர்களின் குழு, கிறிஸ்தவ, துறவற சிறப்புக்களின் பழைய ஏற்பாட்டு மாதிரிகளாகக் காட்டப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

'நசரேயன்' எனப்படுபவர், விசேஷித்த பிரமாணமொன்றின்கீழ், கடவுளுக்காகத் தன்னைத் தானே சமூகத்திலிருந்து பிரித்தெடுத்தவராகக் காணப்படுகிறார்.

> *'தான் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம், திராட்சைச்செடி விதை முதல் தோல் வரையிலு முள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன். அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம், சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது. அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருந்து, தன் தலைமயிரை வளரவிடக்கடவன். அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும், தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. அவன் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருப்பான்.* (எண்ணாகமம் 6:4-8)

இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளில் சிலர் தீவினைக்கு மனம்வருந்தும் செய்திகளின் நிமித்தம் கடவுளுக்காகத் தம்மைத் தாமே வேறாக்கி பிரத்தியேகப்படுத்தி யிருந்தனர். அவர்களில் மேலும் சிலர் தமது செய்திகளின் ஆழத்தன்மை யினால் தம்மைத் தனிமையாக்கி, அச்செய்தியின் பலனுக்காய் மிக அதிகமான இக்கட்டு நிலைகளுக்குள்ளும் தம்மை உட்படுத்தியிருந்தனர். மேலும் சிலர் திருமறையில் 1ம் 2ம் இராஜாக்களின் புத்தகத்தில் இடைக்கிடை காணப்படும் கல்வி புகட்டும் இடங்களின் மற்றும் சமூகங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களாக இருந் திருப்பார்கள் என்ற ஊகங்கள் காணப்படுவதோடு, இதுகுறித்து அரிதாகவே அறியமுடிகிறது.

ஆபிரகாமுக்கு முற்பட்ட தீர்க்கதரிசிகள், ஏனோக்கு, மெல்கிசெதெக் மற்றும் குறிப்பாக யூதத் தீர்க்கதரிசிகளான எலியா அவரது சீடர் எலிசா ஆகியோர் பிற்கால கிறிஸ்தவத் துறவற மரபுக்கு அத்திவாரமிட்டுச் சிறப்புச் சேர்க்கின் றவர்களாகத் திருமறை காட்டிநிற்கிறது.

பழைய ஏற்பாட்டுக்கால நசரேயனாகவும், அதேவேளை சமூகத்திலிருந்து தன்னை வேறாக்கியும் வாழ்ந்த ஒரு திருமறைக் கதாபாத்திரமாக யோவான்ஸ்நானகனை நாம் காணமுடிகிறது. இவர் கிறிஸ்துவுக்கு முன்னும் பின்னும் வாழ்ந்து, கிறிஸ்தவத் துறவற முறைமையின் பாலமாகிறார்.

*'அந்நாட்களில் யோவான்ஸ்நானகன், யூ தேயாவின் வனாந்தரத்தில் வந்து..... இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சை யைக் கட்டிக்கொண்டிருந்தான். வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது'. (மத்தேயு 3:1-4)*

துறவற வாழ்வின் பெண் மாதிரிகளாக பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய நான்கு கன்னியாஸ்திரிகளைக் குறித்து அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் காணமுடிகிறது.

*'பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியா பட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே தங்கினோம். தீர்க்கதரிசனம் சொல்லுகிற கன்னியாஸ்திரிகளாகிய நான்கு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்' (அப்போஸ்தலர் 21:8-9)*

பவுல் அப்போஸ்தலன் தடவுளுடனான பிணைப்பின் இறுக்கத்தினால் உலக வாழ்வின் கட்டுக்களிலிருந்து விடுபட்டவராயிருந்தமை அவரது துறவுமுறைமைக்குச் சான்றாகும்.

திருமறையின் நகர்வுகளொவ்வொன்றும் கடவுளின்பால் அன்புகொண்டு, தன்னிலை ஒறுத்து, மெய்ஞ்ஞானம் தேடிய துறவற வாழ்வின் அடியவர்களை இனங்காட்டி நிற்பதுடன், கடவுளுடன் மனிதனுக்கான உறவுப்பாலத்தைக் கட்டியெழுப்பும் மகோன்னத பிரயத்தனங் களை முன்னெடுக்குமொன்றாகவும் காணப்படுகின்றன.

துறவிகளைப் பொறுத்தவரை, 'இச்சை அகற்றி, உடல் வருத்தி, தன்னிலை மறுத்து, அஞ்ஞான வழியறுத்தல் மாத்திரம் முடிவான முடிவல்ல.' என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். அனைத்து மனிதரது வாழ்வின் உட்கிடக்கையானது, 'கடவுளை அன்பு செலுத்துவதற்கே'யாகும். ஆனாலும் கடவுளில் பூரண அன்பு வைப்பதற்கு எவை எவையெல்லாம் தடைக்கற்களாகக் குத்திக்கொண்டிருக்கின்றனவோ, அவையனைத்தையும் அகற்றுவதில், துறவற வாழ்வை அனுசரிப்பவர்கள் அதீத ஆர்வம் காட்டுகிறார்கள். இவற்றிற்கும் மேலாக வேதம் என்ன சொல்கின்றதோ அதன் பூரண விளக்கத்தை வரிக்குவரி நன்கு புரிந்துகொண்டு அப்படியே தமக்குள் உள்வாங்குவர்கள் 'துறவிகள் மாத்திரமே' என்றால் மிகையாகாது.

*"நீ என்னில் அன்பாயிருந்தால், என் கட்டளைகளை நிறைவேற்றுவாயாக"*

அன்பான சீடனுக்கான இந்தத் திருமறை வார்த்தைகளை, முற்றுந் துறந்த ஒரு துறவியைவிட வேறு எவரும் மிக ஆழமாக விளங்கிக்கொண்டிருக்கமுடியாது. கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட சிருஷ்டிகளெவரும் கடவுளை அன்பு செலுத்தவேண்டுமானால், அவனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவளில் "சுயம்" இல்லாதொழிதல் வேண்டும். சுயவிருப்பங்கள் கடவுளுக்குள்ளாகச் சுட்டெரிக்கப்பட்டு, அனைத்தி லும் தேவ சித்தத்தை மாத்திரமே நிறைவேற்றுதல் என்பதுதான், கடவுளில் மாயற்ற பூரணத்துவ அன்புகூர, மனிதர்மேல் விழுந்த கட்டாயமாக்கப்பட்ட ஒரே நிபந்தனையாகும்.

> *மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும், அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான் 2:15-17)*

'அனைத்தையும் வெறுத்தொதுக்கிய துறவறம;' எனும் விருட்சமானது, திருமறை யின் கட்டளைகளை சிரமேற்கொண்டு **'எளிமை, கற்புடைமை (மணமாகா நிலை), கீழ்ப்படிவு"** ஆகிய மூன்று அடிப்படைக் கிளைகளைப் பரப்பி உபவாசம், அமைதி, எதற்குமே சொந்தம் கொண்டாடாதநிலை, உடலியல் ரீதியிலான இடுக்கண், எதையும் தாங்கும் பக்குவம் ஆகிய பல இலைகளுடன் கடவுளுடனான அன்பின் பிணைப்பை மாயமற்றமுறையில் பரிபூரணமாகவே பறைசாற்றிநிகிறது.

மேற்கூறிய அனைத்து கிறிஸ்தவ துறவுமுறைமைகளதும் சாராம்சம்படுத்தப்பட்ட ஒரு பூரணத்துவ மாதிரியாக இயேசுக்கிறிஸ்து காணப்படுகிறார். சொன்னவர் சொற்களோடு மாத்திரம் நின்றுவிடாமல் சொன்னதை அவ்வாறே வாழ்ந்து காட்டிய உன்னதத் துறவியாய் மிளிர்ந்துநிற்கிறார்.

## 1. எளிமை

பரலோக இராட்சியத்தின் திறவுகோலுடன் பூலோகம் வந்த மனுமகனான கிறிஸ்து, தன் போதனையிலும் 'பற்று அறுத்தல்' பற்றியே அதிகம் பேசுகிறார். எதில் ஒருவன் பற்று வைக்கிறானோ, அவனது சிந்தனை முற்றுமுழுதாக அதன்பால் மாத்திரமே சென்றுவிடும். பரலோக இராட்சியத்தினுள் நுழைவதற்கு இவ்வுலகம் மீதான அதீத பற்றானது, பெரும் முட்டுக்கட்டையாகும். ஆகவே தற்காலிகமாக வசிப்பதற்கென மனிதருக்குத் தரப்பட்டிருக்கும் வாடகை வீடாகிய இவ்வுலகக் காரியங்களில் அதீத பற்றுக்கொண்டிராமல், இம்மை யிலும், மறுமைக்கான வாழ்வைத் தயார்ப்படுத்துவதில் பற்றுக்கொள்ள வேண்டுமென்பதே கிறிஸ்துவின் போதனையின் சாரமாகும். கடவுளுக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது? அனைத்துக்கும் இயேசுவிடம் விடைகள் இருந்தது.

இயேசுவின் ஆரம்பமே எளிமையில்தான் மேற்கிளம்புகிறது. இராஜாவாய் வர வேண்டியவர், ஏழையின் உதிரத்தில் எளிமையாய் உதித்தார்.

> *'அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளை நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்'*
> *(பிலிப்பியர் 2:4-7)*

இயேசு, தனக்கென்று எதையும் சொந்தம் கொண்டாடினவரல்ல. அவரது பிறப்போ யாருக்கோ சொந்தமான சத்திரத்தில் நடக்கிறது. *(லூக்கா 2:7),* அவர் ஏறிப் பிரசங்கம் பண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகுகள் வேறு யாருக்கோ சொந்தமானவை. *(லூக்கா 5:3)*, அவர் மரிப்பதற்கு முன்னைய வாரத்தில் அவர் எருசலேமுக்கு ஊர்வலமாய்ப் போகையில் ஏறிபோன கழுதை வேறொருவருடையது. *(மத்தேயு 21:3)* அவரது கடைசிப் பாடுகளின்போதுகூட நகருக்கு உள்யே அல்ல, வெளியேதான் பாடுபட்டார் என்றே வேதம் சொல்லுகிறது. வாழும்போதுதான் தனக்கென்று எதையும் சொந்தமாக்கவில்லை. மரித்தபின்னரும்கூட அவரது உடல் அரிமத்தியாவூர் யோசேப்புக்குச் சொந்தமான கல்லறையில்தான் அடக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு அனைத்திலும் தனக்கென்று உரிமை பாராட்டாத எளிமைத்தன்மை பரிபூரணமாக இயேசுவில் காணப்பட்டதை நாம் நோக்கமுடியும். அவர் தனக்கென ஒரு நிலத்தைத்தானும் சொந்தமாக்கவில்லை.

> *'நரிக்கு குழியுண்டு. பறவைக்குக் கூடுமுண்டு. மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமேயில்லை'*

துறவற வாழ்வில் இவ்வாறான எளிமையின் அடிமட்டநிலையை இயேசுவைவிட யாரும் இவ்வுலகவாழ்வில் அனுபவித்திருக்கமுடியாது. இயேசு 'எளிமைநிலையையே', மனிதத்துவத்தில் பூரண சற்குணனாய் இருப்பதற்கான அத்திவார மாகக் காட்டுகிறார்.

> *'பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூ ரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூ ரண சங்குணராயிருக்கக்கடவீர்கள்'* *(மத்தேயு 5:48)*

என்று கூறுகிற இயேசுவிடம், *'இவ்வாறு பூரண சற்குணராயிருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?'* என நாம் வினவுவோமேயானால், அவர் பகரும் பதில் என்னவாயிருக்கும்.

இயேசுவைச் சந்தித்து *'நித்திய ஜீவனை அடைவதற்கான வழியை'* வினவிய பணக்கார வாலிபனுக்கு/தலைவனுக்கு அவர் தந்த பதிலில் நம் அனைவருக்குமே விடை இருக்கிறது. மூன்று நற்செய்தியாளர்களும் இச்சம்பவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

> *'இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. நீ பூ ரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா.'* *(மத்தேயு 19:27, மாற்கு 10:21, லூக்கா 18:22)*

பொருட்செல்வத்தின்மீது பேராசை கொண்டவன் அருட்செல்வத்தைப் பெற்றுக் கொள்வதென்பது இயலாத காரியமாகும்.

> *'அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியினால், இந்த வார்த் தைகளைக் கேட்டபொழுது மனமடிந்து துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்'.* *(மத்தேயு 19:21, மாற்கு 10:22, லூக்கா 18:23)*

மாற்கு 10:23, லூக்கா 18:24 இல் காணப்படும் கீழ்வரும் இயேசுவின் நியாயப்படுத்தலின் வார்த்தைகளை மேற்கூறிய வாலிபனின் இறுதி முடிவிலிருந்து நாம் இலகுவில் புரிந்து கொள்ளமுடிகிறதல்லவா?

> *'ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராட்சியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது' என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.* *(மத்தேயு 19:23, மாற்கு 10:23, லூக்கா 18:24)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துவைத்துள்ள செல்வங்களல்ல, மாறாக எவனிடத்தில் இம்மையில் எளிமை காணப் படுகிறதோ, பரலோக இராட்சியம் அவனுக்குரியதாகிறது.

*'ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராட்சியம் அவர்களுடையது.'*
*(மத்தேயு 5:3)*

*'தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள். தேவனுடைய இராட்சியம் உங்களுடையது.'*
*(லூக்கா 6:20)*

*'முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிற தினால் அவனும் பயனற்றுப் போவான்.'* *(மத்தேயு 13:22)*

மொத்தத்தில் அநித்தியமான பொக்கிஷங்களைத் துறந்து விட்டுவிட்டு, நித்திய ஜீவனுக்கான அடித்தளம் இடுபவரையே இயேசு பூரண சற்குணராய் காண்கிறார்.

*'பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; ..... பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்.... உங்கள் பொக்கிஷம் எங்கே யிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.'* *(மத்தேயு 6:19-21)*

ஆதித் திருச்சபையிலும் இதன் தாக்கம் காணப்பட்டிருப்பதோடு, தமக்கென்று எதையும் சொந்தங் கொண்டாடிச் சேர்த்து வைக்காமல், 'பொது உடைமைக் கொள்கைவாத' அடிப்படையில் அனைத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.

*'விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் அனுபவித் தார்கள். காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே தரித்திருந்து வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி தேவனைத் துதித்து.....*
*(அப்போஸ்தலர் 2:44-47)*

## 2. கற்புடைமை

ஒவ்வோர் மனிதமனங்களையும் தம்பால் கட்டிப்போட்டு அவற்றின்மேல் ஆதிக் கம் செலுத்தும் உலகின் குடும்ப உறவுப்பிணைப்புக்களிலிருந்து விடுபடுவ தென்பது சாதாரணமாக இயலாத காரியமாகும். ஆனாலும்........

*'தேவனுடைய ராஜ்யத்தினிமித்தமாவும், என் நாமத்தினிமித்தமாகவும், சுவிசேஷகத்தினிமித்த மாகவும் வீட்டையாவது, சகோதரரையாவது!, சகோதரியையாவது, தகப்பனையாவது, தாயை யாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, மறுமையிலே நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வான்.'* *(மத்தேயு 19:29, மாற்கு 10:29-30, லூக்கா 18:29-30)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக உறவுக் கட்டுக்களில் அதிகமாய்ச் சிக்குண்டிருக்கும்போது கடவுளுக்கும் மனிதனுக்குக்குமான உறவு, இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படக்கூடிய ஆபத்துக் காணப்படுகிறது. தொடர்ந்து உலக சஞ்சாரங்களின் உயிரியல் ரீதியிலான கவலைகளும் பாரங்களும் நெருக்க ஆரம்பிக்கிறது. மனதின் முழு அர்ப்பணிப்பும் அவ்வுலகக்கவலை களிலிருந்து விடுபட முயற்சிப்பதிலேயே கழிந்துவிடுகிறது. இங்கு **'லோகம்'** முன்னிலைப்படுத்தப்படுவதால் **'பரலோகம்'** பற்றிய சிந்தனை குறைவடைந்துவிடுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபமொன்றில்.....

*'நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படு கிறான். விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்துக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.''* *(1 கொரிந்தியர் 7:32-33)*

*'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?'* *(மத்தேயு 16:26)*

ஆகவேதான் உலகத்திலுள்ளவைகளிலல்லாமல், கடவுளை மாத்திரமே மையப்படுத்தி அன்பு செலுத்த முனையும்போது, கடவுளின்பால் இணையும் பல உறவுகள் அதிகத் தனையாக கொடுக்கப்படும் எனத் திருமறை கூறுகிறது.

*'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். நீங்கள் வேண்டிக்கொள்வதெதுவோ அவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்*

இயேசு சிறுவயதாயிருக்கையில் தன்னைத் தேடிவந்த பெற்றோரிடம் கூறிய வார்த்தைகளை ஞாபகத்துக்குக் கொண்டுவருவோம்.

*'நான் என் பிதாவின் வீட்டில் இருக்கவேண்டுமென்று அறியீர்களா?'*

பவுல் அப்போஸ்தலன் தன் சிந்தனை செயல் யாவையும் கடவுளின் ராஜ்யத் தின்பால் மையப்படுத்தியிருந்தமையால், உலகக் குடும்ப உறவுக்கட்டுக் களிலிருந்து விடுபட்டநிலையில் துறவற வாழ்வின் பிரமச்சாரியாகவே அவரைக் காண்கிறோம்.

*'எல்லா மனுஷரும் என்னைப்போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும் அவனவனுக்குத் தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு. அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது. விவாக மில்லாதவர்களையும், கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறதென்ன வென்றால் அவர்கள் என்னைப்போலிருந்துவிட்டால் அவர்களுக்கு நலமா யிருக்கும்.'* *(1 கொரிந்தியர் 7:7-8)*

இயேசுவும்கூட இளைஞனாய் நடமாடியபோதும், மண வாழ்வின் கட்டுக்களிலிருந்து விலகியிருந்து பரலோக ராஜ்ய விருத்திக்காய் தன்னை அர்ப்பணித்த முன்மாதிரியையே துறவற வாழ்வை மேற்கொள்பவர்கள் அதிகமாய்க் கோடிட்டுக்காட்டுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் (பிரமச்சாரிகளாய்) பிறந்தவர்களும் உண்டு. மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு. பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்களும் உண்டு. இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக்கடவன்.' (மத்தேயு 19:12)*

துறவற வாழ்வின் திருமணமாகா நிலைக் கருதுகோளானது, தேவதூதரைப் போன்ற வாழ்வின் சாரமாகக் காணப்படுகிறது.

*'மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும்போது, கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலிருக்கிற தேவதூதர்களைப் போலிருப்பார்கள்.' (மாற்கு 12:25)*

## 3. கீழ்ப்படிவு

தாழ்மையின் முதற்படி **'தாமதமில்லாத கீழ்ப்படிவு'** ஆகும்.

*'அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.' (பிலிப்பியர் 2:8)*

எளிமையை அணிந்து, மணமாகா நிலைதரித்து, ஆத்துமாக்களின் பரலோக ராஜ்யப் பிரவேசத்திற்கான வழிகளை சந்தர்ப்பம் வாய்த்த அத்தனை வேளைகளிலும் ஒவ்வொன்றாகத் தெளிவாக்கியவர் நமது ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து. இறைமகனாய் இறங்கி வந்த அந்தப் பெருமகன், இறை தந்தையின் சித்தத்தை நிறைவேற்றவே வந்ததாக முழங்குகிறார்.

*'நான் என் சித்தப்படியல்ல, என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே இறங்கி வந்தேன்' என்கிறார்.*

அதுமாத்திரமல்ல, தன்னை நோக்கிவந்த - வரப்போகின்ற சவால்களையும், சோதனை களையும் மேற்கொள்ள அடிக்கடி தனிமையாகவும், சீஷருடனும் மலைகள், வனாந்தரங்கள் போய் அமைதியிலும், ஜெபத்திலும், உபவாசத் திலும் தரித்து, இறை சித்தத்திற்காயக் கீழ்ப்படிந்து காத்திருந்தார்



*'வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார்....நீங்கள் சோதனைக்குட் படாதபடி ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி... முழங்காற்படியிட்டு. இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும். ஆனாலும் என்னுடைய சித்தப் படியல்ல, உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது□ என வேண்டுகிறார்' (லூாக்கா 22:39-42)*

*'அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு ஜெபம் பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்.' (லூாக்கா 9:28)*

*'இயேசு யோவான்ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றபின்பு இயேசு யூ தேயா வனாந்தரத்தில் இரவும், பகலும் நாற்பது நாட்கள் உபவாசமிருந்து ஜெபம் பண்ணி இறைசித்தத்திற்காய் காத்திருந்ததையும் நாம் இங்கு நினைவுகூரலாம்' (மத்தேயு 4:1-2, லூாக்கா 4:1-2)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளுடன் நெருங்கி உறவாடி அவரது சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ விரும்பிய துறவற வாழ்வு பூண்டவர்கள், பிற்காலத்தில் வனாந்தரங்கள், பாலைவனங்களை நோக்கித் தம்மை நிலைநிறுத்திய வரலாற்றுக்குத் திருமறை ஆதாரங்கள் முன்னுதாரணங்களாகின்றன.

## துறவறம் : வரலாற்றுப் பதிவுகள்

துறவற நடைமுறைகள் கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகள் முன்பதாகவே, இந்தியாவில் இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. ஆகவே 'துறவற முறைமை'யானது மிகத் தொன்மையானதாகும்.

சமகாலத்தில் இந்துமதம், புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தம், மகாவீரரால் இந்தியாவில் 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமணம், கி.மு 6ஆம் நூற்றாண்டில் லாவ்-தசே என்பவரால் சீனாவில் தோற்றுவிக்கப்பட்ட தத்துவ மதமான 'தயோய்சம்' *(Taoism)*, இஸ்லாத்தின் மத உட்பிரிவுகளிலொன்றான சூபி *(Sufi)*, கிறிஸ்தவம் போன்ற மிக அதிகமாக விருத்தியடைந்துள்ள மதங்களிடையே துறவற முறைமையின் வெவ்வெறுபட்ட நடைமுறைகளை நாம் காண முடிகிறது.

## கிறிஸ்தவத் துறவறம்

மிக ஆரம்பக் கிறிஸ்தவத் துறவுமுறைமையின் **'மூலம்' *(Origin)*** பற்றிய பல வாதப்பிரதிவாதங்கள் இறையியல் அறிஞர்களிடையே இன்னும் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றன. இவ்விடத்தில், இவரால்தான் இது ஆரம்பிக்கப்பட்டதென அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையிலும், சில புலமையாளர்கள் துறவுமடத்தில் கூட்டுவாழ்வு வாழ்ந்த பண்டைய யூதக் குழுவினரிலிருந்தே கிறிஸ்தவத் துறவறம் கருக்கூட்டப்பட்டதாகக் கருதுகிறார்கள். வேறு சில புலமையாளர்கள், கடவுளின் தூதரொருவரான மனி *(Mani)* என்பவரால் கி.பி. 216-276 காலப்பகுதிகளில் தோற்றுவிக்கப்பட்ட மனிக்கேய சமய இயக்கமானது, 'உடலும், உள்ளமும் வெவ்வேறெனக் கருதும்' கோட்பாடுடையதாகும். இக்கொள்கைகளின் நெருங்கிய நடைமுறை வடிவங்களே, ஆரம்பக் கிறிஸ்தவக் குடும்பங்களில் இச்சை அகற்றி, உடல் வருத்தி மெய்ஞ்ஞானந் தேடும் அதிவேக ஆர்வத்தைக் கொடுத்ததாக ஊகிக்கிறார்கள். எது எவ்வாறிருப்பினும், ஆரம்பக் கிறிஸ்தவ உரையாசிரியர்கள், துறவற முறைமை இயக்கத்தை, உண்மையில் நற்செய்தியின் மூலத் தொடக்கமாகவே நோக்குகிறார்கள்.

ஆரம்பக் கிறிஸ்தவ யுகமானது, அக்காலத்தின் வரலாற்றுப் பின்புலத்தளத்தை வைத்து வரலாற்றாசிரியர்களினால் **'துன்புறுத்தலின் காலம்'**, **'அங்கீகரிக்கப்பட்டதன் காலம்'** என இரு பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஆராயப்படுவது வழமையாகும். ஏனெனில் கி.பி முதலாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகங்களானது, உரோமை சாம்ராஜ்யத்தின் அரசியல் அடக்குமுறைகளின் தாக்குதல்களினூடு தொடர்ந்த ஓரிரு நூற்றாண்டுகள் துன்புறுத்தப்பட்டபோது, நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொன்ஸ்ரன்ரைன் 1 (306-337) பேரரசனின் ஆட்சிக்காலத்தில் மேற்கத்தேய நாகரீக வளர்ச்சியில் ஏற்பட்ட இருபெரும் சம்பவங்களின் எதிரொலியே, அக்கிறிஸ்தவ சமூகங்களை மீண்டும் தலைநிமிர லைத்ததெனலாம்.

கி.பி. 313இல் உரோமை அரசின் உத்தியோகபூர்வ மதங்களில் ஒன்றாகக் 'கிறிஸ்தவமும்' அங்கீகரிக்கப்பட்டு, மதச் சுதந்திரத்துடனான 'மிலான் சாசனம்' பிரகடனப்படுத்தப்பட்டமையும், பின்னர், 11ஆம் திகதி மே மாதம் 330இல் (H.W.*ஜேன்சன் என்பார் எழுதிய* '*History of*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Art for young people'* எனும் நூலின் 78ஆம் பக்கத்தில் கி.பி 323 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) கொன்ஸ் ரன்ரைன் பேரரசனானவன், சாம்ராஜ்யத்தின் தலைநகரை உரோமையிலிருந்து கொன்ஸ்தாந்திநோபிள் (முன்னர் பைசன்தியம் *(Byzantium)* என்றும், தற்போது இஸ்டன்பல் *(Istanbul)* என்றும் அழைக்கப்படுகிறது) எனுமிடத்திற்கு மாற்றியமையும் மிகமுக்கிய நிகழ்வுகளுக்கு வழிகோலின.

இவ்வாறான ஆரம்பக் கிறிஸ்தவ வரலாற்றுப் பின்புலத்திலிருந்தே கிறிஸ்தவத் துறவற முறைமை ஆராயப்படல் வேண்டும்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இச்சை அகற்றி, உடல் வருத்தி மெய்ஞ்ஞானந் தேடிய யூதத் துறவறக் குழுவினர் குணமளிக்கும் கலைத்துவப் பாரம்பரியத் தளமாகக் காணப்பட்ட எகிப்தின் செங்கடலின் கரைகளிலேயே தமது நிலைகளைப் பலப்படுத்தியிருந்தார்கள். பிற்காலத்தில் 4ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையான துன்புறுத்தலின் காலத்தின்போது, எகிப்தின் பாலைவனப் பிரதேசங்கள் கடவுளோடு இணைந்து வாழ்ந்தவர்களுக்கு அடைக்கல ஞான ஒடுக்கத் தளமாக மாறியது.

கிறிஸ்தவத் துறவறத்தின் ஆரம்ப நடைமுறை வடிவமானது, தமது உடலை வருத்தி, உலகத்திலிருந்து தம்மை வேறாக்கியநிலையில் தூண்களின் உச்சிகளில் தமது காலத்தைப் பெரும்பாலும் செலவழித்த தூண்களின் புனிதர்களாலேயே விருத்தியுற்ற தெனலாம்.

## ஆரம்பக் கிறிஸ்தவத் துறவறத்தின் முதல் நிலை

முதலாவது கிறிஸ்தவத் துறவிகளென அடையாளங்காணப்பட்டவர்கள், சமூகத் திலிருந்து தனித்து, ஒதுங்கி வாழ்ந்து, கடவுளுடன் சஞ்சரித்தவர்களாகவே காணப்படுகின்றனர். கால அடிப்படையில் அனைத்துத் துறவிகளையும் ஆராய்வதென்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதன் அவசியப்பாடும் இப்போதைக்கு இல்லாமையால், மிகச் சுருக்கமான முதற்படிகளின் விருத்தி மாத்திரம் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

முதலாவது கிறிஸ்தவத் துறவி என அடிக்கடி பேசப்படும் ***புனித அந்தனி (St. Anthony) (கி.பி. 251-356)*** பற்றிய சர்ச்சைகள் இறையியல் வரலாற்றாசிரி யர்களிடம் இன்றும் காணப்படுகிறது. ஏனெனில் அந்தனி, கிறிஸ்துவில் மனந்திரும்பி கடவுளைப் பின்பற்றவென எகிப்துப் பாலைவனங்களுக்கு நகர்ந்த போது, அங்கே ஏற்கனவே துறவற வாழ்வு பூண்டிருந்த ஏராளமானோர் இருந்த தாக அவரது சுயசரிதை நூல் கூறிநிற்கிறது. ஆகவே முதலாவது கிறிஸ்தவத் துறவி யார்? என்பதைப் பகுத்து நோக்கும்போது, துன்புறுத்தலின் காலப் பகுதிக்கு மீள்திரும்பவேண்டிய தேவை உள்ளது.

துன்புறுத்தலின் 3ஆம் நூற்றாண்டுக்காலப்பகுதிகளில், கார்த்தேர்ஜ் ஆயரான சைபீரியரான ***தேப்ஸ்ஸின் பவுல் (Paul of Therbes)*** தேசியஸ் மன்னனால் ஆரம்பிக்கப்பட்ட துன்புறுத் தலைத் தவிர்ப்பதற்காக, 250ஆம் வருடம், எகிப்தியப் பாலைவனத்தின் குகையொன்றினுள் ஞான ஒடுக்கத்தை நடாத்தியிருப்பதாகவும், அதே ஆண்டு அதே காரணத்திற்காக இவர் மற்றுமொரு எல்லையான வட ஆபிரிக்கக் கரைக்கு ஒளிந்துகொள்ளச் சென்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித அந்தனி
(முதலாவது கிறிஸ்தவத் துறவி என நம்பப்படுபவர்)

கி.பி. 254இல் எகிப்தில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ***புனித அந்தனி (St. Anthony – 251-356)*** *நீ சற்குணணாயிருக்க விரும்பினால் உன்னிடத்திலுள்ளவைகளை விற்று...* எனும் வார்த்தையின் செல்வாக்கினால் ஈர்க்கப்பட்டு, சகலத்தையும் விற்றுவிட்டு, பாலைவனத்தில் கடவுளுடன் உறவாட வந்தவர். தேப்ஸ்ஸின் பவுலைப் போல துன்புறுத்தலுக்கு அடைக்கலம் தேடி இங்கு வராமல், உண்மையில் தனிமையில் கடவுளை அடைவதற்கான ஒரே தேவைக்காக வந்தபடியினால், புனித அந்தனியே, முதலாவது கிறிஸ்தவத் துறவி என அறியப்பட்டிருப்பதில் வியப்பேதுமில்லை.

புனித அந்தனியின் சமகாலப்பகுதியிலேயே வாழ்ந்த ***புனித பகோமியஸ் (St. Pachomius – 292-348)*** புதியதோர் நடைமுறையை அறிமுகப்படுத்துகிறார். புனித அந்தனி கடவுளை அடையவேண்டி, தனிமை வாழ்வை அழுத்திநிற்க, புனித பகோமியஸ், துறவுமடத்தில் ஒரு மடாதிபதியின் கீழும், ஓர் ஆழுகையின் கீழும், கூட்டு வாழ்க்கை வாழும் துறவற முறைமையை அறிமுகப்படுத்துகிறார். துறவற நடைமுறையை நிறுவனமயப்படுத்திய பெருமை புனித பகோமியஸைச் சாரும். அத்துடன் துறவற வாழ்வில் இணைந்த சகோதரிகளுக்கெனவும் துறவுமடம் கட்டினார்.



ஆரம்பகால மிகப் பழைமையான துறவு மடங்களிலொன்று வனாந்தரமொன்றில் உருவாக்கப்பட்டிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக் கிறிஸ்தவத் துறவறத்தின் இரண்டாம் நிலை

கப்பதோக்கியாவின் (தற்போதைய துருக்கி நகரின் ஒரு பிராந்தியம்) செசரியாவில் பிறந்த ***புனித பசில் (St.Basil 329-379)*** கி.பி.358இல் இச்சை அகற்றி, உடல் வருத்தி மெய்ஞ்ஞானந் தேட விளைந்து உண்மைக் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்காகப் புதிய ஏற்பாட்டின் 1542 வசனங்களினால் பிணைக்கப் பட்டதான கொள்கைகளை உள்ளடக்கி, கி.பி. 360இல் அறநெறிச் சட்டங்களைத் தொகுத்தார். புனித பசிலைப் பொறுத்தவரை, நற்செய்தியின்படி உண்மைத்துவமான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதே துறவற வாழ்வாகும்.

டொப்ரோகியின் பல்கன் பிராந்தியத்தில் (இன்றைய ரோமானியா) பிறந்த ***ஜோண் கசியன் (John Cassian 360-435)*** 382இல் பெத்லகேமிலுள்ள துறவுமடமொன்றினுள் நுழைந்தார். பின் அவரது நண்பனான ***புனித ஜேர்மனஸ் (St.Germanus)*** உடன் இணைந்து, எகிப்தில் பாலைவனத் துறவறத் தந்தையர் களைப் பார்க்க விளைந்து 399 வரை அங்கேயே தங்கியிருந்தனர். இங்கு பெற்ற அனுபவங்களிலிருந்து ஜோண் கசியன் '*உடை, ஜெபம், பணியும் எளிமையும், உணவு, கீழ்ப்படிவு, ஒழுக்கம், மனம் வருந்துதல் போன்றவற்றை உள்ளடக்கித் துறவற வாழ்வை எவ்வாறு வாழ முடியும்*' எனும்வகையில் நிறுவனமாக்கிக் காட்டினார்.

இவ்வாறு கிறிஸ்தவ யுகத்தின் ஆரம்ப காலங்களில் படிப்படியாக வேரூன்றிய கிறிஸ்தவத் துறவற முறைமையானது, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை களிலும், கிழக்குலகப் பழமைவாதக் கோட்பாட்டுத் திருச்சபைகளிலும் சமகாலத்தில் விரவிக் காணப்படுகின்றன.. ஆயினும் காலத்துக்குக் காலம் ஆற்றலும், வலிமையும் கொண்ட தனிப்பட்டவர்களால் புதுப் புது அர்த்தங்களு டனும், நடைமுறைக் காரியங்களிலிருந்து அது நிலைகொண்டுள்ள பிரதேசப் பண்பாட்டு அம்சங்களுடன் உருமாறுமொன்றாகவும் புதுப்பிக்கப்பட்டுக்கொண டிருக்கிறது.

ரோமன் கத்தோலிக்கமல்லாத புரட்டஸ்தாந்தவத்தில் 16ஆம் நூற்றாண்டுகளி லேயே இத் துறவற முறைமை நிராகரிக்கப்பட்டதொன்றாகக் காணப்படினும், அங்கிலிக்கன் திருச்சபையானது, 19ஆம் நூற்றாண்டிலிருந்து ஏராளமான துறவற நிலைகளைப் பொறுப்பேற்றது.


## கிறிஸ்த சேவ ஆச்சிரமமும் துறவறமும

69 வருடங்களைக் கடந்துவிட்ட மருதனார்மடம் ஆச்சிரமமும், 50 வருடங்களில் கால் பதித்து நிற்கும் கிரான் ஆச்சிரமமும், தன்னிலை வெறுத்து உடல் வருத்தி, அஞ்ஞானமறுத்து, மெய்ஞ்ஞானந் தேடி ***எளிமை, கற்புடைமை, கீழ்ப்படிவு*** எனும் மனக்கட்டுப்பாடுகளோடு கடவுளை மாத்திரமே மையப்படுத்தி, கடவுளுடன் சஞ்சரித்த ***மூன்று பெரும் ஞானிகளின துறவறப் பண***களின் நற்பலனால் இன்று பெருவிருட்சங்களாக அநேக ஆத்துமாக்களுக்கு நிழலாக நிமிர்ந்து நிற்கிறது.

*'அழைக்கப்பட்டவர்களோ அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்.'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் என அன்புடன் அழைக்கப்படும் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் முத்துறவிகள்

திருமறையின்பால் பற்றுவைத்து அதையொன்றே தம் மூச்சாகவும், வாழ்வா கவும் வாழ்நது காட்டி, இன்று இறைவனுடனேயே சங்கமமாகிவிட்ட, அம்மூன்று துறவற அண்ணன்மாரின் **'தரிசனம்'** நம்முன்னே தரப்பட்டிருக்கிறது. லூக்கா 10:1-3இன்படி கர்த்தர் தமக்கு முன்னாகப் போகவிட்ட பணியாட்களை நோக்கி மிகுந்த ஏக்கத்துடன் ஓர் பெருத்த எதிர்பார்ப்புடன் கூறிநிற்கும் அறைகூவலானது, அன்று திருமறையில் கூறப்பட்ட எழுபது பேருக்காக இருந்தது. ஆனால் இன்றோ, கர்த்தரின் அவ் ஏக்கப்பெருமூச்சின் அறைகூவல் எம் ஒவ்வொருவரையும் நோக்கி வருகிறது. ஆச்சிரமத்தை நேசித்து நிற்கும் நம் அனைவரதும் பதிலீடு என்ன?



*'அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்' (லூக்கா 10:2)*

**இம்மைத் துறவறத்தின் நல்லறம், அது மறுமை இறை வரத்தின் ஓர் பாத்திரம்**


உசாத்துணை


1. Janson, H.W. (1993), *History of Art for young people.* London, Oxford Press
2. Jordan Aumann. (1984), *Origins of Monasticism - Monasticism : A Historical Overview,* Still River, Mass.
3. Meyendorff, John.(1979). *Byzantine Theology : Historical Trends and Doctrinal Themes.* New York. Fordham University Press.
4. Samuel Rubenson. (2000), *Asceticism : Christian Perspectives,* Chicago. Fitzroy Dearborn.
5. Walker Willsten. (1999). *Early Monasticism before Chalcedon (AD 451),* New York. Paulist.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் உண்மையுள்ளவர்



வண. சேவக். எஸ்.எஸ்.செல்வரெட்ணம
பெரியண்ணனால் எழுதி வெளியான ஆக்கம்

நீ எப்படிச் சீவிக்கிறாய்? ***"விசுவாசத்தினால்"*** என்று நான் பதில்கூறுவதுண்டு. இதற்கு மேல், ***"உண்மையுள்ள கடவுளில் நான் வைத்திருக்கும் நம்பிக்கையால் சீவிக்கிறேன்"*** என்று நான் சேர்த்துக் கூறி இப்போ பலகாலம். ஆம், ***"கடவுள் உண்மையுள்ளவர்"*** என்ற இந்தச் செயற்படுத்தும் வார்த்தைகளே வாழ்க்கைக்கு கருத்தளிப்பவை, சீவியத்தை தொடர்ந்து செய்ய ஆர்வமளிப்பவை, எனது சீவியத்தின் கருத்தையும் திரட்டி வெளிப்படுத்துபவை. கடவுள் உண்மையுள்ளவர் என்ற உண்மையில் நம்பிக்கை வைத்துச் சீவிப்பது ஓர் அதிர்ச்சியளிக்கும் அனுபவமே.

கடவுளுடன் முன் தெரியாத வழியில் நடக்கும்படி வரும் ஓர் அழைப்பு. இந்த உன்னத அழைப்புப் பற்றியே நான் சாட்சி கூற முன்வருகிறேன். ஆச்சிரமத்தின் முந்திய நாட்களில் சமையலுக்கு உதவியாள் ஒருவரை வைத்திருந்தோம். ஏனெனில் சமையலறையில் நாங்கள் முறையெடுத்து வேலைசெய்வது யுத்தகாலத்தில் எமக்கு கிடைத்த சொற்ப படி உணவுப் பொருள்களைச் சேமிக்க உதவியாயிருக்கவில்லை. சமையலறைப் பையன் ஒருநாட் காலை என்னிடம் வந்து, அன்று என்ன சாப்பாடு என்று வினவியபொழுது, நான் அவனிடம் சமைக்க என்ன இருக்கிறது? என்று திருப்பி வினவ, அவன் மிகத் தைரியமாக ***"ஒன்றுமில்லை"*** என்று கூறினான். நான் என்னிடமிருந்த பணப்பைக்குள் இருக்கக் கூடியதெல்லாவற்றையும் எடுத்தபோது, ஒருவருக்குத் தன்னும் போதிய உணவு வாங்கப் பணமிருக்கவில்லை. ஆனால், எங்களில் பத்துப் பேரை பராமரிக்க வேண்டியதாயிற்று. என்னிடம் இருந்த பணத்தைக் கொண்டு எல்லோருக்கும் மதிய போசனத்துக்கு மரவள்ளிக் கிழங்கு வாங்கும்படி கொடுத்தேன். ***'இரவுப்போசனத்துக்கென்ன?'*** என்று அவன் மேலும் வினவியபொழுது, ***'நான் எப்படிச் செபிக்க வேண்டுமோ அவ்வாறே அவனும்போய்ச் செபிக்க வேண்டுமென'*** கூறினேன். இதற்குப் பின் இருமணி நேரத்தில், அவன் அன்றைய கடிதங்களைக் கொண்டுவந்தபொழுது, நான் பெற்ற ஆறு கடிதங்களில் ஐந்துக்குள் எங்கள் பத்துப் பேரையும் இரு வாரங்களாகத் தாபரிக்கப் போதுமான பணமிருந்தது. நான் அன்று காலை மட்டும் அறியாதிருந்த எமது நிலைபரம் பற்றி ஆண்டவர் அதற்கு முதல்நாளே அறிந்திருந்தார். அவர் தந்தார். இது போன்ற அனுபவங்கள் பலவற்றில் இது ஒன்று.

ஒருநாள் எல்லோரும் படுக்கைக்கு சென்றபின் நான் ஓரிடத்தில் இருந்து. ***"இம்மட்டும் தந்தவர் எப்போதும் தந்துகொண்டிருப்பாரா?"*** என்று திருப்பித் திருப்பி என்னையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக் கொண்டிருந்தேன். இது ஒரு பித்துப் பிடித்த கேள்வி: ஏனெனில் அவர் முன்னொருபோதும் தவறியதில்லை. இப்படியே, இருமணிநேரம் சென்றபின், எனது மடத்தனத்தை நான் உணர்ந்து, எனது நம்பிக்கையீனத்தை அறிக்கையிட்டு, மன்னிப்புக் கேட்டுப் படுக்கைக்குச் சென்றேன்.

அடுத்தநாட் காலை நான் எங்கோ போய்விட்டேன். ஒரு நண்பன் ஆச்சிரமத்திலிருந்த லூயிஸ் மாமாவிடம் வந்து பின்வரும் வரலாற்றைக்கூறினார். ***"சென்ற இரவு ஐயா. நடுச்சாமம் மட்டும் எனக்குத் தூக்கமே வரவில்லை. நான் படுக்கையிற் கிடந்து புரண்டு கொண்டிருக்கையில், 'ஆச்சிரமத்துக்குக் கொஞ்சம் பணம் கொடு'*** என்ற வார்த்தைகள் திரும்பவும் திரும்பவும் என் மனதில் அடித்துக்கொண்டே இருந்தது" இவ்வாறு கூறி, அந்த நண்பன் ஐம்பது ரூபா கொடுத்துவிட்டுச் சென்றிருந்தார். ஆண்டவர் எனது நம்பிக்கையை மாத்திரமல்ல, எனது நம்பிக்கையீனத்தையும் கவனித்து வேண்டியதைச் செய்தார். றெஸ்டாறிக் ஞாபக நிதியிலிருந்து மெதடிஸ்த சபை உதவிய தாராளமான கொடையைக் கொண்டு, நாங்கள் முதற்காணியை வாங்கி, முதல் நன்கொடையாக எனது பழைய பாடசாலை அதிபர் வண. எச். புலோ அனுப்பிய ஐந்து ரூபாவுடன் நாம் சிறிதாக ஆரம்பித்ததைக் கண்டவர்கள் கடவுளுடைய வல்ல கரத்தின் கிரியையை அறிவார்கள், காண்பார்கள். ***"எங்கே வழிநடத்துகிறாரோ அங்கே தருவார்"*** என்ற உண்மையை இது அத்தாட்சிப் படுத்தும். ஆச்சிரமத்திலுள்ள பல கட்டிடங்களும். பழங்குடியினர் மத்தியில் ஊழியம் பரந்து சென்றதும். பல தேவைகள் நிறைந்த எமது நாளாந்த வாழ்க்கையும் இதே சாட்சியைக் கூறும். ஆனால் ***"கடவுள் உண்மையுள்ளவர்"*** என்ற நம்பிக்கையிற் சீவிப்பதென்றால் நாம் வேண்டிக்கொள்வதைத் தரக் கடவுள் உடன்படுவதையும், மறுப்பதையும் ஏற்றுச் சீவிப்பதே என்றதையும் நான் உடனடியாகவே கூறிவிட வேண்டும்.

ஆச்சிரமத்தின் ஆரம்ப நாட்களில் நான் நன்குணர்ந்து கொண்ட படிப்பினையொன்றைத் தென்னிந்தியாவில் சந்தையொன்றில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் நடைபெற்ற ***"அறுப்பு பண்டிகையிற்"*** கற்றேன். பல கிராமங்களிலிருந்து கிறிஸ்தவர்கள் கூட்டம் கூட்டமாகக் கடவுள் தங்களுக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் நன்றி செலுத்தும் முகமாகத் தங்கள் நன்கொடைகளைப் படைத்தனர். இவர்கள் தங்கள் வேண்டுதல்களுடன் ஒரு காணிக்கையையும் வாக்களித்தபடியால், இக்கொடைகள் ***'நேர்ந்த கொடைகள்'*** என்றழைக்கப்பட்டன. நீண்ட வரிசையில் நின்ற பல மக்களுடைய வரலாறுகளைக் கேட்பது மிக களைப்பான வேலையாயிருந்தது. ஒரு மனிதன் தன்னுடைய பசு நோயுற்றிருந்த போது, அதற்குச் சுகம் கிடைத்தால், தான் ஐம்பது சதம் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருந்தபடியால், இப்போ அப்பணத்தைப் படைக்க வந்திருந்தான். அவ்வரிசையில் நின்ற பலருடைய வரலாறுகள் அவ்வாறேயிருந்தன. ஆனால் ஓர் இளம் வாலிபனும் அவனுடைய மனைவியும் கையில் ஒரு குழந்தையை ஏந்திக்கொண்டு முன்வந்து, மிகப்பெரிய தொகையைக் காணிக்கையாகப் படைத்தனர். நான் எனது இச்சை நிறைந்த உள்ளத்தில் ***"நல்ல காசு"*** என்று கூடச் சொல்லிவிட்டேன். நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு குழந்தைக்காக ஒரு ரூபாய், தான் வாக்குப்பண்ணியதாக வேறொரு மனிதன் கூறத் தொடங்கினான். எஞ்சிய வரலாற்றை நான் எண்ணியபடியல்ல, எனது கேள்விக்கு பின்வருமாறு அந்த மனிதன் விடையளித்து முடித்தான். ***"என்னுடைய குழந்தை இறந்து விட்டது"*** என்றான். என்முகத்தில் ஒருவகையான குழப்பத்தை அவன் கண்டு ***"ஐயா, எனது குழந்தை இறந்துவிட்டால் நான் கடவுளுக்கு எனது தோத்திரக் காணிக்கையை கொண்டுவரக்கூடாதா?"*** என்று கேட்டான். நான் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டேன். கடவுள் உண்மையுள்ளவர். கடவுள் போதுமானவர் என்ற மகிமையான விசுவாசத்தில் இவனுக்குத்தான் சீவிக்கத்தெரியும். என்று என்னுள்ளத்தில் சொல்லிக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***'கடவுளிடம் பெரிய காரியங்களை எதிர்பார். கடவுளுக்காக பெரிய காரியங்களை எத்தனி'*** என்றபடி மிசனரிப் பெரியார் வில்லியம் கேரி வைத்திருந்த குறிக்கோளையே நாங்களும் எடுத்துக்கொண்டோம். ஒரு செபாலயக் கொட்டிலுடனும், நாங்கள் சீவிக்க ஒரு குடிசையுடனும், நாங்கள் சிறிதாக தொடங்கியது பற்றி முன்குறித்துள்ளேன். ஆனால் காலப்போக்கில் இன்று எமக்குப் பல கட்டிடங்களும் வசிப்பதற்கு நியாயமான சௌகரியங் களும் இருக்கின்றன. வேறுவிதங்களிலும் அவ்வாறே 1939 மே, முதல் திகதியில் எங்களில் இருவர் மாத்திரம் ஆச்சிரமத்தில் சீவிக்க வந்தோம். ஒரு நண்பன் எங்களுடன் கூடியிருந்தார். முதலில் என்னுடன் வந்தவர் ஓர் ஆண்டில் எங்களுடன் சேர்வதற்காக தன்னை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் விட்டுச் சென்றார். ஆனால் பின்னர் வழியருகே விழுந்துவிட்டார். திரும்பி எம்மிடம் வரவில்லை. இப்பொழுது இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னிருக்கும். எங்கள் அறுவரில் நாலவர் ***வறுமை, கற்பு, கீழ்ப்படிவு*** என்று வாக்களித்து எங்களுடன் சேர்ந்துள்ளனர். ஆனால் இவ்வாண்டுகட்கூடாக பழங்குடியினர் மத்தியில் வேலையினும் கீழ் மாகாணத்தில் கிளைகள் தாபித்ததுடனும், வேலை பரந்து வளர்ந்து வரும் வழியில், கடவுளுடைய கரமே எங்களை வழிநடத்தித் தேவைகளையெல்லாம் பூர்த்தியாக்கி வந்துள்ளது. நம்மிடம் வந்த எல்லோரையும் நாங்கள் வைத்திருக்கவில்லை என்றது உண்மைதான். ஆனால், நாங்கள் உண்மையுள்ளவர்களாயிருப்பதனாலல்ல, நாங்கள் உண்மையற்றவர்களாயிருந்த போதிலும், கடவுள் நடத்தினார் என்றதுதான் உண்மை என்றதை நினைத்துக் கொள்வது அவசியம். இது இருபத்தைந்து ஆண்டுகளாக நாங்கள் உண்மையும், கீழ்ப்படிவும், உள்ளவர்களாயிருந்த வரலாறல்ல, ஒருபோதும் அதுவல்ல. எமது உண்மைக் குறைவு, கீழ்ப்படியாமைகட்கூடாகவும், கடவுள் எம்மை வழிநடத்தி, எல்லாவற்றையும் தந்துள்ளார். கடவுள் தாமே உருவாக்கிய ஆச்சிரம குழுவுக்காக அவருக்கு நன்றி செலுத்துகின்றோம். வருவதெல்லாவற்றிலும் அவரில் நம்பிக்கை வைப்போம். லூயிஸ் மாமா **'தகுந்த'** சமயத்தில் எம்முடன் வந்து சேர்ந்தது பற்றிச் சரித்திர வரலாற்றிற் கூறப்பட்டுள்ளது. அவருக்காகவும் ஆச்சிரம சீவியத்தில் அவரெடுத்த பங்குக்காகவும் நாங்கள் கடவுளைப் போதியளவு துதிக்க முடியாது. எமது அன்புக்குரிய கனம் சோமசுந்தரம் அவர்களும், தகுந்தசமயத்தில் வந்து ஒரு வருடம் எமக்குதவி புரிந்தார். **இன்னும் பலர் எமது வேலைக்குத் தேவை என்றதே எமது உள்ளங்களிலிருந்து நாளாந்தம் கிளம்பும் வேண்டுதல்.** கடவுள் நல்லவர். எமது தேவைகளை அவர் அறிவார். அவருடைய காலத்துக்கும் ஞானத்துக்கும் காத்திருக்க நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆச்சிரமத்தின் வேலை அதன் எல்லைக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளல்ல. அதன் ஊழியர், அதற்குள்ளிருப்பவர்களல்ல, ஆச்சிரமத்திலிருந்து வெளியுலகத்துக்குள், அதன் சீவியத்திற் சில வேலைகளில் மிகவுயர்ந்த இடங்களில் பங்குபற்றி, வெளியேறும் பல குணப்படுத்தப்பட்ட இளைஞர்களைப் பார்க்குமிடத்து, அவர்களைப் பயிற்றும் வேலையில் வெளியேயுள்ள பல நண்பர்கள் காட்டிய கரிசனையையும், செய்த உதவிகளையும், செய்த செபங்களையும் நாம் உணர்கிறோம். இவர்களை இங்கு பெயர் சொல்லிக் குறிக்கத்தேவையில்லை. ஆனால் ஆரம்பந்தொட்டு இவ்வித வேலையைப் பற்றிய தரிசனத்திற் பங்குபற்றி, தங்கள் செபங்களினால் ஆதரித்து நாளாந்தம் எம்மை ஊக்குவித்த சிலர் திரைக்கப்பாற் சென்றுவிட்டனர். எமது முதல் ஆளுஙகச் சங்கத்தின் உறுப்பினராயிருந்த வண. ஆர். சி. பி. உவெல்ச், திரு டபிள்யூ. டி. நயில்ஸ், திரு ஆர். எஸ். எட்வேட்ஸ், திரு எஸ். ரீ. சாமுவேல், வண. ஜே.ரீ. அருளானந்தம் ஆகியோர் அப்பாற் சென்று விட்டனர். இவர்களுக்காக நாம் கடவுளுக்குத் துதி கூறவேண்டும். அக்காலத்தில் வட இலங்கை மெதடிஸ்த சபையின் அக்கிராசனராயிருந்த வண.ஈ.என்.வீலர் அவர்கள் பெரும்பெலனாயிருந்தார். ஆச்சிரமம் நிறுவப்படவேண்டிய இடம், அதன் ஆதாரப்பிரமாணங்கள், சீவியமுறை, இன்னும் ஆச்சிரமத்தைப் பற்றிய மற்றும் விடயங்களை அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில்தான் நாங்கள் சந்தித்துப் பேசித் திட்டமிட்டோம். ஒரு சிறந்த கீதத்தின் மேல்வரும் வார்த்தைகள் அடிக்கடி என் மனதில் வந்ததுண்டு.

***"அவருடைய சேனையின் முரசு கொட்டுதலே, எமது அன்பின் உயிர்நாடித் துடிப்பாகும்"***

இவர்களுக்காகவும், இன்னும் எமக்காகச் செபிக்கும் பல நண்பர்களுக்காகவும், நாங்கள் கடவுளுக்குத் துதி செலுத்துகிறோம். இதுவும் ***"கடவுள் உண்மையுள்ளவர்"*** என்ற அனுபவத்தின் ஒரு பக்கமாகும்.

வாராந்தம் எனக்குக் கிடைக்கப்பெறும் அமைதிக் காலைநேரமும், வருடத்தில் ஐந்துமுறை, நான் அனுசரிக்கும் முழுநாள் அமைதி நேரமும், கடவுள் எனது தவறுதல்கள் மூலம் என்னைப் பராமரித்துத், தமது அன்பில் எனக்குச் செய்த எல்லாவற்றையும் பற்றி எண்ணி எண்ணி வியப்படையும் நேரங்களாகும். என்னை இன்னும் தமது சேவையில் அவர் வைத்திருப்பது ஆச்சரியமே. இருந்தும், தமது வல்ல கரங்களை என்மேல் வைத்துத், தாம் எனக்கென்று வைத்திருக்கும் வழியில் என்னை வைப்பதில் அவர் உண்மையுள்ளவர் என்றதை நான் காண்கிறேன். காலமெல்லாம் எம்மைத் தமது இரக்கமுள்ள அன்பினாலும் கிருபையினாலும் நிரப்பி, ***"என்னை ஆட்கொள்ளும் அவருடைய கரம்"*** என்று நான் சொல்லும்படி, தமது அன்பை எனக்குத் தந்து, என்னை ஏவும் அவரை நினைக்கும்பொழுது, சங்கீதகாரனுடைய வார்த்தைகள் என் மனதிற் கிளம்பும். "இரவும் பகலும் என் மேல் உம்முடைய கை பாரமாயிருந்தது, நான் திரும்பவும் வழிமீறியபோதிலும் அவர் தமது அன்பில் என்னைத் தொடர்ந்து தேடினார், தாபகர்கள் தரிசனங்களைக் காண்கிறார்கள் பின்தோன்றல்கள் கட்டடங்களைக் காண்கிறார்கள்" என்று நான் அடிக்கடி இந்தியாவில் ஆச்சிரமத் தலைவர்கள் கூட்டங்களிற் பங்குபற்றும் பொழுது எனக்குள்ளே கூறிக்கொள்வதுண்டு. இதில் நாம் ஒரு மிகக்கடினமான உண்மையைக் காண்கிறோம்.. ஆனால் இதுமுழுவதும் உண்மையல்ல. இக் கூற்றின் பிழையான பாகத்தை மனதிற் பதித்துக் கொள்ளும் அபாயத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள வேண்டும். ***தரிசனங்களை நாம் காண்பதல்ல தரிசனங்கள் நமக்குத் தரப்படுகின்றன.*** ஆனபடியால் தான் பவுல் ***"நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை"*** எனக் கூறக்கூடியதாயிருந்தது. ஆச்சிரமத்தைப்பற்றிய எனது சொந்த வரலாறு இது. எனது சீவியத்தின் ஆரம்பத்திலேயே, இவ்வெண்ணம் எனக்குள் புகுந்து கொண்டது என்று ஆச்சிரம சாத்திரக்காரன் கூறியுள்ளார். கடவுளுடைய வல்ல கரமே என்னைத் தொடர்ந்து வழிநடத்திற்று. இதை நான் அப்போ விளங்கவில்லை ஆனாற் காலம்போக விளங்கிக் கொண்டேன். அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த பெற்றாருக்கு பிறந்து, ஒரு முழு மெதடிஸ்த னாக வளர்க்கப்பட்டு, யாழ்ப்பாண மத்திய கல்லூரியிற் கல்வி கற்று, இங்குதான் டீ.ரீ.நயில்ஸ் அவர்களை நெருங்கி அறிந்தேன். ஒரு பாப்டிஸ்ட் கல்லூரியாகிய செறம்பூர்க் கல்லூரிக்கு அனுப்பப்பெற்று, இறுதியில் அப்போ கொங்கிறிகேஷனல் சபையாயிருந்த தென்னிந்திய ஐக்கியசபை, இப்போ தென்னிந்திய சபை என அழைக்கப்படும் சபையில், ஊழியம் தொடங்கி, அங்கு அபிஷேகம் பெற்று, கடவுளுடைய வல்லகரத்தினால் ஆச்சிரமத்துக்குட் புகுத்தப்பட்டேன். ***இதெல்லாம் உண்மையுள்ள கடவுளின் கிரியைகள்.*** ஏனெனில் இவ்வனுபவங்களெல்லாம் அவருடைய மகிமைக்காக இவ்வூழியத்தில் உபயோகிக்கப்பட வேண்டியிருந்தது.

ஆச்சிரமம் சுவிசேஷ வேலைக்கு 'இன்னொரு முறையான முனை மாற்றம் *(Turning Point)*' என நண்பர்களும் விரோதிகளும் பல வேளைகளிற் கூறியுள்ளார்கள். இதை நான் மிகக் கடினமாக மறுக்கிறேன். எனக்கும் ஆச்சிரம இயக்கத்திலுள்ள எல்லோர்க்கும் இது ஒரு வாழ்க்கை வழி, அன்பின் உத்தரம் மாத்திரமே. எங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கும் இடையேயுள்ள நடுச்சுவர்களைத் தகர்த்து, அவர்களுடன் இலகுவில் நெருங்கக்கூடியதாக இது ஆக்குகிறது என்றதை நாங்கள் மறக்கமுடியாது. ஆச்சிரமம் தன் வழியில் வரும் வாய்ப்புக்களைச் சுயநலம் கருதிப் பிரயோசனப்படுத்துவதில்லை, ஆழ்ந்த கரிசனைகளில் ஈடுபட்டுழைக்கவே இருக்கிறது. நாங்கள் எப்பொழுதும் கடைசிமட்டும் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாயிருக்க உங்கள் செபங்களில் எங்களை ஆதரியுங் கள்.

*"கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள், கடவுளுக்காகப் பெரிய காரியங்களை எத்தனியுங்கள்"* என்ற சிந்தனையுடன் நாங்கள் ஆரம்பித்தோம். அவர் எப்பொழுதும் உண்மையுள்ளவராகவே இருந்தார். ஆனால் நான் பல வேளைகளில் தூரமாகவே அவரைப் பின்பற்றியுள்ளேன். இதுவே என் விசனமும் அறிக்கையும். பல வேளைகளில் நாங்கள் செல்லும் பாதைக்கப்பாற் பார்த்து, சூழவிருந்த வெள்ளத்தில் அமிழ்ந்து போகக்கூடிய நிலையிலிருந்தோம். ஆனால் கடவுளுக்குத் துதி, அவரது கரம் மறுபடியும் கிட்டவிருந்து எங்களைத் தாங்கிற்று. நாங்கள் தடுமாறித் தோல்வியடைந்த வேளைகளில் கீழே அவரது நித்திய புயம், வல்லமையுடனும் போதுமானதாகவும் காணப்பட்டது.

வங்காளத்தில் 'எஸ்ராஜ்' என்ற பெயருள்ள ஒரு இசைவாத்தியம் உண்டு. இது பல நரம்புகளுள்ள ஒரு வீணை. ஆனால் இதை இசைப்பவன் ஒரு நரம்பில் மாத்திரம் வாசிப்பான். மற்ற நரம்புகள் இதற்குச் சேரும் சுரத்தில் தயாரிக்கப்படுவதனால் இந்த ஒரு நரம்பு வாசிக்கப்படும்பொழுது மற்ற நரம்புகளிலிருந்தும் மிக நேர்த்தியான இசை கிளம்பும். இதையே கவிஞர் தாகூர் பின்வரும் அடிகளை இசைத்தபொழுது கருதியிருப்பர்.

*"என் வாழ்க்கையின் நரம்புகள் யாவும் இசைந்தமையும்போதுஇ ஐயனே, நீ தொட்ட மாத்திரமே அன்பின் இசை பிறக்குமே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஆச்சிரமத்தை நிறுவி தொண்டுகள் ஆற்றிய அருட்துறவி

- பி.ஜீ.ஜெயராஜ், மட்டக்களப்பு -

பெரியண்ணனின் 27வது மறைவு ஆண்டு நினைவு நாளை நினைவுகூருமுகமாக 29.03.2000 அன்று, வீரகேசரியில் வெளியான கட்டுரை


கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தை நிறுவி
அரிய இறைசேவையை ஆற்றிய அருட் துறவி!

கிறிஸ்து பெருமானின் திருப்பணிக்கென கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தை நிறுவிய அருட்துறவியும் பெரியண்ணன் என யாவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவருமான வண.சேவக் எஸ். சாமுவேல் செல்வரத்தினம் அவர்களது 27 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

யாழ்ப்பாணம் காரைநகரில் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவராயிருந்து பின்னர் வாலிப வயதில் ஞானமுழுக்குப் பெற்று கிறிஸ்தவ வாழ்வைத் துவங்கிய திரு.சுப்பிரமணியம் என்பவருக்கும் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆன் முத்தம்மா என்ற கிறிஸ்தவப் பெண்மணிக்கும் செல்வப் புதல்வரான வண. சேவக் எஸ்.சாமுவேல் செல்வரத்தினம் 1906ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி பிறந்தார்.

ஆரம்பக்கல்வியை அடுத்து இவர் யாழ்ப்பாணம் மெதடிஸ்த மிஷன் மத்திய கல்லூரியில் சேர்க்கப்பட்டு அங்கு ஆங்கிலத்தில் கல்வியைத் தொடர்ந்தார்.

இம்மத்திய கல்லூரியில் இவர் கல்வி பயின்ற காலத்தில் இவரது உற்ற சிநேகிதனாக இருந்த கனம்.டி.ரி.நயில்ஸின் ஆலோசனையின் பேரில், 1924ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இவர் சென்னையில் நடைபெற்ற கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்.

1925இல் இவர் லண்டன் மெற்றிக்கியூலேஷன் தேர்வில் சித்தியடைந்தார். 1927ஆம் ஆண்டு இறுதியில் இவர் வடஇந்தியாவிலுள்ள செரம்பூர் இறையியல் கல்லூரியில் புலமைப் பரிசிலைப்பெற்று அதில் சேர்ந்து இறையியல் கற்கத் தொடங்கினார். 1931இல் இறையியல் படிப்பு முடிந்ததும், யாழ்ப்பாணத்திற்கு திரும்பிய இவர் வட்டுக்கோட்டைத் திருச்சபைக்கு உதவி ஊழியராக முதல் நியமனம் பெற்றார். அதே ஆண்டு நவம்பர் மாதம் அராலித் திருச்சபைக்கு பொறுப்பாளராக அமர்த்தப்பட்டார். இதனைத் தொடர்ந்து சில ஊழியத் தேவைகளினிமித்தம் பல கிறிஸ்தவ மன்றங்களை உள்ளடக்கிய பணிகளை முன்னெடுத்துச் செல்லும் நவாலித் திருச்சபைக்கு 1935ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் மாற்றஞ்செய்யப்பட்டார்.

1936ஆம் ஆண்டு இவர் வட்டுக்கோட்டை ஆலயத்தில் குரு அபிஷேகம் செய்யப்பட்டார். இதற்கென பிரதிஷ்டை பெற்று ஒருமாதத்தின் பின்பு யாழ் சபாசங்கத்தின் செயலாளராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலித் திருச்சபையில் இரண்டாண்டு காலம் பணிபுரிந்த இவர் 1937ஆம் ஆண்டில் ஏழாலை வடக்கு-தெற்குத் திருச்சபைகளின் பொறுப்பை ஏற்றார். கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தில் புதிய முறையில் இவரின் திருத்தொண்டு 1939ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாந் திகதி ஆரம்பமாகியது. 1939 ஆம் ஆண்டு மேமாதம் தம்மை திருச்சபை ஊழியத்திலிருந்து விடுவித்துக்கொண்ட இவர், அவ்விடத்தில் ஒரு சிறு குடிசையை அமைத்து அதில் வசிக்கலானார்.

மக்களுக்குப் பரந்துபட்ட சேவையைச் செய்வதற்குப் பாடுபட்ட இவருக்கு. வண.சேவக். ஐ. ரி. யேசுசகாயமும், வண.சேவக் சாம் .ரி. அல்பிரட்டும் வலக்கரமும் இடக்கரமுமாயிருந்து இவ் ஆச்சிரம விருட்சம் அதன் பணிகளில் விரிந்து படர்ந்து பலனளிக்கப் பல வழிகளிலும் ஒத்தாசையளித்தனர். இக்கூட்டமைப்பினால் இம்மூவரும் முறையே பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் என மக்களால் அன்புடன் அழைத்து போற்றப்பட்டனர்.

1945ஆம் ஆண்டு இவர் இந்தியாவுக்குச் சென்று பல இடங்களிலுமுள்ள ஆச்சிரமங்களைத் தரிசித்து அவை பாமரமக்களுக்கு ஆற்றிவரும் ஆன்மீகப் பணிகள் பற்றிய வழிமுறைகளையும் கவனித்துத் திரும்பினார்.

1949இல் ஜெனீவாவில் உள்ள பொஸ்சே கிறிஸ்தவ ஆய்வுகூடத்தின் அழைப்பின் பேரில் அங்கு சென்று சில மாதங்கள் சமயக்குரவராகப் பணியாற்றினார். மற்றும் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அருளுரைகள் ஆற்றிய இவர் கடவுளின் மனிதர் எனப் போற்றப்பட்டார்.

தனது உடல் நலத்தைக்கூட சரிவரப் பேணாது முழுமையாக இறைசேவைகளிலே தன் வாழ்வை அர்ப்பணித்த இவர், இடையிலே நோய்வாய்ப்படவும் நேர்ந்தது. 1973ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மீண்டும் வியாதியால் பீடிக்கப்பட்ட பெரியண்ணன என்ற அன்புத்தீபம் அம்மாதம் 29ம் திகதி அணைந்தது.

இவரது விடாமுயற்சியாலும் இறைவனின் அருளாலும் கிறிஸ்த சேவ ஆச்சிரமம் வளர்ந்து ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி கலங்கரை விளக்கமாக இன்றும் ஒளிவிட்டுத் திகழ்கின்றது.

அன்னார் மரித்து இருபத்தியேழு ஆண்டுகள் பூர்த்தி தினம் இன்றும் கிறிஸ்தவ மக்களால் நினைவு கூரப்படுகின்றது. இன்று மருதனார் மடம் மற்றும் கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமங்களில் நினைவு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

நன்றி வீரகேசரி 29.03.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர் விட்ட வழி
# பின் தொடர்வோம்
# (பெரியண்ணன் நினைவஞ்சலி

பெரியண்ணனின் மறைவையொட்டி,
கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தில் நடைபெற்ற
நினைவஞ்சலியின்போது,
**திருமதி. திரவியம் இராமச்சந்திரன் அவர்கள**
இயற்றி மொழிந்த கவிவழி அஞ்சலி

பெரியண்ணன் இன்றில்லை பெயர்ந்திட்டார் மேலென்று
சரியாகப் புரியாதோர் சாற்றுவதைக் கேட்கையிலே (அண்ணா உன்)
சிரித்த முகமும் செம்மொழியும் அங்கு வந்து
மரித்தாரா பெரியண்ணன் (இல்லை) வாழ்கிறார் உள்ளத்தில் என்றும்

ஆண்டி மடந்தான் ஆச்சிரமம் என்றெண்ணும்
நீண்ட வரிசை நெடுமடையர் கருத்துணர்ந்து
வேண்டும் கருமமெல்லாம் விதி முறையாய்ச் செய்து மடம்
பூண்ட அவர் நினைவைப் பொய்யாக்கி வைத்திட்டாய்.

காலத்தால் அழியாது கடுங்கனலில் வேகாது
சீலமொடு நீ உரைத்த செய்தி மறையாது □ ஏன்
ஞாலத்து நன்மறைகள் நாட்டிய பேருண்மையெல்லாம்
நீணிலத்து நின் வாழ்வில் நிதரிசனமாய்க் கண்டதினால்

ஒருவேளை உணவுக்கு வழியற்றவறியன் நீ
அருட்செல்வர் பலருக்கு ஆத்ம உணவூட்டும் செல்வன் நீ
கருதாது சுகபோகம் இபிறருக்காய் உழைத்திட்ட முதலாளி (தீமை)
புரியாத நெஞ்சொடு புவிவாழக்கடன் செய்த தொழிலாளி

விருந்திருக்க உண்ணாத வேளாளன் நீ அண்ணா
அருகிருத்தி அமுதூட்டும் அழகை மறப்போமோ
அறுசுவை இங்கில்லையென்று ஆரமுதார் ஆச்சிரமத்தில்
பெரியண்ணன் கிழங்கவிப்பார் பேரான விருந்தாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையும் பெருஞ் சிரிப்பும் கைதட்டலும் கேட்டு
இதுவா ஆச்சிரமம் என கேட்ட அன்பருண்டு (பெரியண்ணன்)
விதையூன்றும் வித்தையிது வெறுங்கனவால் வேலையிலலை
கதையாம் விதை வளாநத்து கடும் வெயிலின் நிழலாச்சு

அகில உலகு அரங்கினிலே குரல் கொடுப்பாய் அங்கொருநாள்
அடுக்களையில் அம்மியிலே அரைத்திடுவாய் சம்பல் இங்கு□ மற்றொரு நாள்
பகைவர்க்கும் முரடர்க்கும் பதில் சொல்லும் உன் மௌனம்
நகை பூத்த முகம் உன்னை நாடியவர் துயர் களையும்

அந்தரத்திற் தூதர்கணம் அருகிருத்த விளைந்திட்டார்.
வந்து இளைப்பாறென்று வான்பரனார் தூதனுப்ப
தந்தை சொற்கடவாத சுந்தரனே அன்றே நீ
வந்தேன் வந்தேன் என்று வானிடையே விரைந்தனையோ

எத்தனை ஆண்டுகள் தான் இங்கோடி மறைந்தாலும்
புத்துயிர் தந்தெம்மை புரந்த புண்ணியனே உன் நினைவு
இத்தரையின் மொழியெல்லாம் இழைந்து உரமேறி (நீ)
செத்தாலும் வாழ்கின்ற சீர்மையதை எடுத்தோதும்

இட்டமொடும் அன்பர் குழாம் இறையவனைத் தோத்தரித்தோம்
கட்டடங்கா உன் பணிக்காய்க் கரங்கூப்பி அஞ்சலித்தோம் (தேவமறை)
பெட்டகமே பெருஞ்சுனையே பெரியண்ணா உன் அன்பு
விட்டகலா நெஞ்சோடு நீ விட்ட வழி பின் தொடர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணன்மார்களுடன் வாழ்ந்த சில காலம்...

**மறக்கமுடியாத அனுபவங்களைப் பகிர்கிறார்**
**மட்டக்களப்பு, அமெரிக்கன் இலங்கை மிசன்,**
**தொழிற்பயிற்சி நிலையத்தின் அதிபர் திரு. சீ. அருமைநாயகம் அவர்கள்.**

பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் அவர்களுடன் அதிகம் பழகியவர்களுள் நானும் ஒருவன். 1953ம் ஆண்டு தொடக்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களின் எளிமையான வாழ்வு, தாழ்மை, மற்றவர்களுடன் இனிமையாக பழகும் முறை, எல்லாவற்றிற்கும் மேலாக தம்மை ஆட்கொண்ட இயேசு பெருமானிடம் கொண்ட அளவற்ற பக்தி என்னை அதிகம் கவர்ந்தது. ஒவ்வொருவருக்கும் விசேட குணங்களும் அதே சமயத்தில் வேறுபாடுகளும் இருந்தன. எனினும் வேறுபாடுகளின் மத்தியிலும் அவர்களில் காணப்பட்ட ஒற்றுமை, ஆழ்ந்த அன்பு, கீழ்ப்படிவு என்னை மேலும் கவர்ந்தன. பிரதம சேவக்காக யார் வருகிறார்களோ அவருக்கு கீழ்ப்படியவேண்டும் என்பது விதி. வயது குறைந்த சாம் அண்ணன் பிரதம சேவக்காக இருந்த காலத்தில் அவரின் தீர்மானத்திற்கு பெரியண்ணன், சின்னண்ணன் கீழ்ப்படிந்தே இருந்தனர். நாங்கள் அவர்களுடன் வாழ்ந்தோம். அவர்களிற்கிடையே இருந்த ஐக்கியத்தைக் கண்டோம். ஒவ்வொரு நாளும் படுக்கைக்கு போகும் முன்னர் அண்ணன்மார்களுடன் கூடி அளவளாவி அடுத்த நாள் செய்யவேண்டிய கருமங்களை திட்டமிட்டு ஜெபித்த பின்னர் தான் படுக்கைக்கு செல்வோம். அப்படியான ஒன்றுகூடலில் நாம் கற்ற பாடம் அதிகம். ஒருமனப்பட்டு எடுக்கும் தீர்மானங்கள் ஆச்சிரம வளர்ச்சிக்கு அதிகம் காரணமாக இருந்தன.

ஆச்சிரமத்தில் நான் வாழ்ந்த காலங்களில் அங்கு நடைபெற்ற சில சம்பவங்களை நான் என்றும் மறப்பதில்லை, மறக்கவும் முடியாது.

பெரியண்ணன் பிரதம சேவக்காக இருந்த காலத்தில் கனன் சோமசுந்தரம் போதகரும் இருந்தார். அவர் இளைப்பாறிய காலங்களில் ஆச்சிரமத்தில் தங்கியிருந்தவர். சோமசுந்தரம் போதகர் அவர்கள் மிகவும் வைராக்கியமான ஒழுக்கமுறைகளை பின்பற்றியவர். ஆண்டவர் இயேசுவிடம் உறுதியான பக்தி வைராக்கியம் கொண்டவர். வேதப்படிப்புக்களை திறம்பட நடத்தக்கூடியவர். ஒரு நாள் இரவு ஒன்றுகூடல் வேளையில் பெரியண்ணன்,"ஒவ்வொரு நாளும் 8.00 மணிக்கு சோமசுந்தரம் போதகர் அவர்கள் வேதப்படிப்பு நடத்துவார்;" எனக் கூறினார். "8.00 மணி என்றால் 8.00 மணி. ஒரு நிமிடம் பிந்தி வந்தாலும் வேதப்படிப்பிற்கு அவர் அனுமதிக்கமாட்டார் என்றும், எட்டு மணிக்கு முதலே எல்லோரும் சென்று விடவேண்டும்;" என்றும் கூறினார். ஒரு நாள் ஆச்சிரமத்திற்கு தேவையான மரக்கறி வாங்கும் பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. நான் மருதனார்மடச்சந்தைக்குச் சென்று எவ்வளவு முயற்சித்தும் போதகர் அவர்களுடைய வேதப்படிப்பிற்கு சில நிமிடம் தாமதித்துவரநேரிட்டது. நான் தாமதத்திற்குரிய காரணத்தை விளக்கிய பின்பும் போதகர் அவர்கள் "அருமை வெளியால் போம்" என கூறினார். நான் வெட்கத்துடன் வெளியேறினேன். அடுத்த கிழமை "பெரியண்ணன் வயது சென்ற மாதா ஒருவருக்கு நற்கருணை வழங்கச்சென்று எட்டு மணிக்கு சற்று தாமதித்து வந்தார். வேதப்படிப்பு தொடங்கிவிட்டது பிந்தி வந்ததற்கான காரணத்தை பெரியண்ணன் போதகர் அவர்களிடம் கூறினார். "பெரியண்ணன் வெளியால் போம்". பெரியண்ணன்.அமைதியாக மண்டபத்தில் இருந்து வெளியேறினார். எங்கள் எல்லோருக்கும் பெரிய திகைப்பு. ஆச்சிரமத்தை ஸ்தாபித்தவர், ஆச்சிரமத்தின் பிரதம சேவக அமைதியாக வெளியேறுவது என்று சொன்னால் தாழ்மையின் மகிமைதான் என்னே!


சாம் அண்ணனுடன் கட்டுரையாளர்

956ம் ஆண்டின் பிற்பகுதியில் 6 மாத காலம் ஜோதி நிலையத்தில் வாழும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. ஜோதி நிலையம் ஒரு வயல் பிரதேசத்தில் ஒரு மேட்டுப்பகுதியில் அமைக்கப்பட்டது. ஒரு சிற்றாலயம், மற்றும் இரு சிறிய வீடுகளைக் கொண்டது. மாரி காலங்களில் பாம்புகள் எல்லாம் மேட்டு நிலத்திற்கு வந்துவிடும். எனவே இப்பகுதி பாம்புகள் நிறைந்த ஒரு அபாயகரமான பகுதிகளாகும். ஜோதிநிலையத்தில் இருந்து அருகாமையிலுள்ள ஏனைய கிராமங்களுக்கு சுவிசேஷம் எடுத்துக் கூறப்பட்டது. இங்கு சந்தையோ அல்லது வேறு கடைகளோ இல்லை. எனவே பொருட்கள் வாங்குவதற்கு 12 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வாழைச்சேனைக்குத் தான் செல்லவேண்டும். கோடைக்காலங்களில் துவிச்சக்கர வண்டியில் ஜோதிநிலையம் வரை வயல்களுக்கிடையில்தான் ஓடிச்செல்ல முடியும். ஆனால் மாரிகாலங்களில் நெல்விளையும் காலங்கள், வரம்புகள் மேலாகவே துவிச்சக்கர வண்டியை உருட்டிச் செல்லவேண்டும். சாம் அண்ணனும் நானும் ஒரு குறித்த சனிக்கிழமை காலை வாழைச்சேனைக்குச் சென்று சில வீடுகளை தரிசித்து, பின்னர் அடுத்த கிழமைக்கு தேவையான அரிசி, சீனி, மா போன்றபொருட்களையும், ஏனைய பொருட்களை வாங்கி துவிச்சக்கர வண்டியின் பின்புறம் கட்டி சாம் அண்ணன் முன்புறம் இருக்க நான் ஓடி வந்தேன். கிழமைக்குரிய உணவுப்பொருட்களுடன் நீர் நிறைந்த வயலுக்குள் விழுந்துவிட்டேன். கஷ்டப்பட்டு சாம் அண்ணனும் நானும் நீருக்குள் இருந்து சைக்கிளை நிமிர்த்தி எடுத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக சிரமத்துடன் ஜோதிநிலையம் வந்து சேர்ந்தோம் எப்படிப்பட்ட கஷ்ட நிலையிலும் ஊழியத்தில் சோர்வடையவில்லை. எப்பொழுதும் உற்சாகமாகவே அண்ணன் அவர்கள் தமது ஊழியத்தைச் செய்தார்.

Arthur அண்ணன் என்று அன்பாக அழைக்கப்படும் ஒருவர் எங்களுடன் ஜோதிநிலையத்தில் இருந்தார். அவர் ஒருநாள் இரவு நித்திரையின்பின், அதிகாலை போர்வையை விலக்கி எழ முயற்சித்தபோது, அங்கு ஒரு பாம்பு போர்வையோடு சிக்கியிருப்பதை அவதானித்து அதிர்ச்சியடைந்தவராய்த்திடீரென பாய்ந்தெழுந்துஒரு மேசைமேல் ஏறி நின்று கொண்டு "பாம்பு பாம்பு" என்று அலறினார். நாங்கள் ஓடிச்சென்று ஒரு நீளமான தடி எடுத்து போர்வையை உதறிவிட ஒரு பெரிய புடையன்பாம்பு போர்வையில் இருந்து விழுந்தது. உண்மையில் ஆர்தர் அண்ணன் நித்திரையிலிருக்கையில் இப்பாம்பும் அவருடனேயே, அதுவும் அவருக்கே தெரியாமல் பலமணிநேரம் இருந்திருக்கவேண்டும். கடவுள் ஆச்சரியமாக யுசவாரச அண்ணன் அவர்களைப் பாதுகாத்தார். அந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒருவர் பாம்புக் கடியினால் இறந்துவிடுவது உண்டு. இது போன்ற பல பயங்கர சூழல் ஏற்பட்டபோதுமஆச்சிரமத்தில் வாழ்ந்தவர்களில் ஒருவருக்கும் ஒரு சேதமும் உண்டாகவில்லை. இது ஒரு பெரிய அற்புதமும், கடவுளின் ஆச்சரியமான வழிநடாத்தலுமே என்பதை உறுதியாக விசுவாசிக்கின்றோம்.


நான் 1965ம் ஆண்டு தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினேன். என் குடும்பத்தைப் பார்த்து, விசாரித்து ஜெபிப்பதற்காகசின்னண்ணன் அவர்கள் கிரான் ஆச்சிரமத்தில் இருந்து காலை 8.00 மணிக்கு புறப்பட்டு நான்கு பஸ்ஸுகள் புறப்பட்டு 110 கிலோ மீற்றர் தூரமபயணம் செய்து எம்மைச் சந்தித்து மீண்டும் பிற்பகல் ஐந்து மணிக்கு கிரானைச் சென்றடைந்த நிகழ்வை நான் அடிக்கடி நினைவு கூருவார்.ஒருவரையொருவர் விசாரிக்கவும். ஜெபிப்பதற்காகவும் அவர் பயணம் பண்ணும் தூரமும், செலவளிக்கும் நேரமும் தான் எவ்வளவு. இது ஆச்சிரம ஊழியத்தின் ஆனால் ஜோதி நிலைய பகுதிக்கு வரும்போது மிகவும் இருட்டிவிட்டது. ஜோதிநிலையம் வீதியிலிருந்து ஏறக்குறைய 400 மீற்றர் தூரத்திலுள்ள சாம் அண்ணர் சொன்னார் "நான் வரம்பில் முன்னுக்கு நடந்து போவேன் நீ எனக்குப் பின்னால் சைக்கிளை தள்ளிக்கொண்டு வா" என்று சொன்னார். இப்படியாக சொற்ப தூரம் சென்றபோது சைக்கிள் சறுக்கி நானும், அந்தஒரு முக்கிய அம்சம். நாம் ஒருவர் மீது கொண்ட அன்பு அவரோடு கழிக்கும் நேரத்துடன் தொடர்புடையது. அதிக அன்பு அதிக நேரம்.

அண்ணன்மார்கள் "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய்" இருந்தவர்கள். எனவே எக்காலத்திலும் மனரம்மியமாக இருக்க இவர்களால் முடிந்தது. "அமர்ந்திருந்து நானே தேவன்' என்று அறிந்தவர்கள். உடலுக்கு சமிபாடு எவ்வளவு முக்கியமோ, ஆத்துமாவுக்குத் தியானம் அவ்வளவு முக்கியமென ஒரு பக்தன் கூறினார். இப்படிப்பட்ட பரிசுத்தவான்களோடு நாமும் பழகினோம், வாழ்ந்தோம் என்று நினைக்கும்போது பரவசமடைகிறோம். எங்களுக்காக வாழாமல் பிறருக்காக வாழப்பழகிக் கொள்வோம், இதுதான் அண்ணன்மார்களுக்கு நாம் செய்யும் கடமை. மரியாதை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவே அத்தனையும் நின் அருளே

**'சின்னண்ணன்' வண. ஐ. ரீ. இயேசுசகாயம்**
**அவர்கள் எழுதிய ஆக்கம்**

எங்கள் ஆச்சிரமத்தின் இருபத்தைந்து வருடச் சரித்திரத்தை வாசிப்பதில் சிலருக்குக் கரிசனையும், சிலருக்கு நிர்விசாரமும் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. காட்டில் வளரும் விருட்சத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. வீட்டில் வளர்க்கும் மாட்டிற்கும் ஒரு வரலாறு. கூடி வாழும் சமுதாயத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. எனினும் இவ்வுலகத்தில் கிறிஸ்தவனின் வரலாறும், கிறிஸ்தவ திருச்சபையின் வரலாறும், கிறிஸ்தவ திருச்சபைக்குள் அமைந்திருக்கும் சிறு சிறு குழுக்களின் வரலாறு எல்லாமே, வல்ல இறைவனின் திருப்பெரும் சரித்திரத்தின் மகிமையையும், மகிழ்ச்சியையும் உடையதாயிருக்கும் மட்டுமல்ல, தனிப்பெரும் சிறப்புடையது என்பது எனது தாழ்மையான நம்பிக்கை. கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஆச்சிரமத்தோடு நெருங்கிய தொடர்பும். இருபது வருடங்களாக அவ்வூழியத்தில் ஒரு தொண்டனாகப் பணியாற்றும் பாக்கியமும் பெற்றேன். எந்தவொரு இயக்கமும், ஆரம்பத்தில் எல்லோராலும் ஆதரிக்கப்படுவதில்லை. அதே போன்று எங்கள் ஆச்சிரமத்தின் ஆரம்ப வருடங்கள் பலராலும் பல பல விதமாகக் கண்டிக்கப்பட்டது. சிலர் போற்றினார்கள், பலர் தூற்றினார்கள், கிறிஸ்து பெருமானும் தன்னருளை அளவின்றி ஊற்றினார்.

உண்பதற்குப் போதிய உணவிருக்கவில்லை: உறைவதற்கு வசதியான குடிசையுமில்லை, செலவழிக்கப் போதிய பணமுமில்லை. ஆனால் ஆனந்தமான பாடலும், இடைவிடாத செபமும், ஓயாத வேலையும், நிறைவான செல்வமுமாய் இருந்தது. வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவமாய், அடியார்களின் வாழ்க்கையில் இறைவன் அவர்களை வழிநடத்திய முறை வெவ்வேறு விதமானது. வேதாகம வரலாற்றிலும், திருச்சபை வரலாற்றிலும் இதற்கு உதாரணங்கள் ஏராளம் உண்டு. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதற்கு இது இடமல்ல.

எங்கள் ஆச்சிரமத்தின் ஸ்தாபகரான பெரியண்ணன் செல்வரத்தினத்தை இவ்வூழியத்தில் இறைவனார், எவ்வண்ணம் வழிநடத்தினார், ஆதரித்தார், காப்பாற்றினார், ஆசீர்வதித்தார் என்பதை இங்கே குறிப்பிடுவதற்கு இதுவோர் தடுக்க முடியாத சந்தர்ப்பமல்லவா? காலையில் எழுந்தவுடன் நாம் ஒவ்வொருவரும் பற்பல காரியங்களைச் செய்வதும் சிந்திப்பதும் இயல்பு. பெரியண்ணன் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, காலைக்கடன் முடித்துக் குளிர்ந்த நீரில் ஸ்நானம்பண்ணி வேதம் வாசித்துத் தியானம் செய்வார். ஐந்து மணியானதும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயமணி அடித்து, அருட்பா பாடி, ஆலய விளக்கேற்றிக் கூட்டுப் பிரார்த்தனைக்கு ஆயத்தமாயிருப்பார்.

பிராத்தனை முடிந்து, அமைதி நேரம் - ஏழு மணிக்கு முடிந்ததும், எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஓர் ஆள், சுன்னாகத்திலிருந்து வரும் தபாற்காரனே. நாம் எல்லோரும் யாரோ ஒருவரிடமிருந்து கடிதத்தை எதிர்பார்ப்பது வழக்கம். பிள்ளைகள் பெற்றோரிடம் இருந்தும், பெற்றோர் பிள்ளைகளிடம் இருந்தும், நண்பர் நண்பரிடம் இருந்தும், வியாபாரிகள் வாடிக்கைக்காரரிடம் இருந்தும் கடிதங்களை எதிர்பார்ப்பர். பெரியண்ணன் எதிர்பார்க்கும் கடிதம் யாரோ ஒரு குறிக்கப்பட்ட ஆளிடம் இருந்தல்ல என்பதைக் கண்டு கொண்டேன். கடவுளின் கிருபை கடிதங்களுக்கூடாகவே அவரிடம் வந்து சேரும். இதை வாசிக்கும் நண்பரே, கடிதம் மூலமாக வரும் பணத்தைப் பற்றி மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறேன் என்று எண்ண வேண்டாம். வீட்டில் கீழ்ப்படியாத மகனைப் பற்றி இருக்கும். பள்ளிக்கூடத்தை விட்டு ஓடியிருக்கும் மாணவனைப் பற்றி இருக்கும். சண்டையிட்டுப் பிரிந்து போன குடும்பத்தைப் பற்றியிருக்கும். யாரோ ஒரு பெண்ணை விவாகம் பண்ண விரும்புகின்ற, வாலிபனின் கடிதமாயிருக்கும். பற்பல சோதனைகளில் அகப்பட்டுத் தவித்துக்கொண் டிருப்பவரின் கடிதமாயிருக்கும். அல்லது ஒரு வியாதிஸ்தரைப் பற்றிய கடிதமாயிருக்கும். அன்றேல் பிரசங்கம் செய்வதற்கு ஓர் அழைப்பாயும் இருக்கும். பெற்ற நன்மைகளுக்காக ஒரு ஸ்தோத்திரக் காணிக்கையாயும் இருக்கும். இவற்றை எல்லாம் தன் இருதயத்தில் சுமந்து, இவற்றிற்காகச் செபித்து, இவற்றிற்குப் பரிகாரம் தேடிப் பறந்து பணி புரிவதே, அவர் புரியும் பெரும் பணியாகும்.

நீங்கள் ஓர் ஆச்சிரம நண்பரா? அப்படியானால் உங்களுக்கூடாகவும் கிறிஸ்து பெருமானின் பேரருள் எங்களுக்கு கிடைத்ததை நினைத்து, இறைவனைத் துதிக்கிறோம். அடுத்த நேர ஆகாரம் என்னவோ? என்று யோசித்தோம். பக்கத்துத் தோட்டத்திலுள்ள வயோதிபர், மரவள்ளிக் கிழங்கோடு வந்தார். மணியும் பதினொன்றாயிற்று. மத்தியான ஆகாரம் என்னவோ? என்றேங்கினோம். நவாலியிலிருந்து குதிரை வண்டியில் வந்த லோட்டன் அம்மா றொட்டிகளோடும், பழங்களோடும் வந்து சேர்ந்தார்.




வணங்க ஆலயம் வேணும் என்றோம், வசிக்கக் குடிசைவேணும் என்றோம், வருவோரை உபசரிக்க இல்லம் வேணும் என்றோம், வாசித்து அறிவு பெற நூலகம் வேணும் என்றோம், சிந்தித்து உரையாட மண்டபம் வேணும் என்றோம், வழிப் பிரயாணத்திற்கு வாகனம் வேணும் என்றோம், வியாதியாய் வந்தவர்க்கு சுகம் தரவேணும் என்றோம், சஞ்சலம் நிறைந்தவர் களுக்குச் சந்தோஷம் வேணும் என்றோம், பிரிந்த குடும்பங்களைப் பிணைத்து விடவேணும் என்றோம், பிரச்சினைகள் நிறைந்தவர்க்கு அருட்சுணையாய் வாரும் என்றோம், சமூகக் கலவரத்தில் சமரசங்கள் வேணும் என்றோம். உமது திருப்பணிக்கு ஊழியரைத் தாருமென்றோம். அடியார் செபங் கேட்டு, அத்தனையும் அளித்தார். ஏசாயாவின் இன்பக்கவி இங்கே என் நினைவிற்கு வருகிறது. *கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப் போலிருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்திற்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். (ஏசாயா 25: 4)*

கலிலேயாக் கடலில் சடுதியாய் ஏற்பட்ட புயலும், கொந்தளிப்பும், கவலையின்றிப் பிரயாணம் செய்துகொண்டிருந்த படகுகளை எல்லாம் கலங்கச் செய்ததல்லவா? இயேசுவும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புச் சீஷரும் சென்ற படகாவது அமைதியாய்ச் செல்லக்கூடாதா? அவர்களும் பதறினார்களே. "போதகரே நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா?" என்று அருமை இரட்சகரிடம் போய், ஆத்திரத்தோடு முறையிட்டார்களே. அவர்கள் செபங் கேட்கப்பட, கலிலேயாக் கடலில் மிகுந்த அமைதி உண்டாயிற்று. சீஷரின் செபத்தாலே கலிலேயாக் கடலில் பிரயாணம் செய்த எத்தனையோ பேர் உயிர் பிழைத்தார்கள். இந்தக் கடும்புயல் எவ்வாறு நின்றது என்று ஏனைய படகுக்காரர்களுக்குத் தெரியாதபடியால், அவர்கள் பலவாறு பேசிக்கொண்டிருந்திருப்பார்கள். இன்னும் சற்றுநேரம் இந்தப் புயலும் கொந்தளிப்பும் இருந்தால், நிச்சயமாகவே நாங்கள் மாண்டிருப்போம். புயல் சடுதியில் நின்றுவிட்டதால் தப்பிப்பிழைத்தோம் என்று பேசியிருப்பார்கள். ஆனால் கொந்தளிப்பு நீங்கி அமைதி ஏற்பட்டதன் உண்மை இயேசுவின் சீஷருக்கல்லவோ தெரியும். உலகில் காலத்திற்குக் காலம் ஏற்படும் பல அனுபவங்கள், அவர் நமக்கு அநுகூலமான துணையாகப் பேராதரவு தருகிறார் என்பதற்கு ஆதாரமல்லவா? எங்களுக்கு மாத்திரமல்ல, எங்கள் ஜெபத்தால் உலகுக்கே அனுகூலமுண்டு. இதை உலகமறியாவிட்டாலும் நாம் அறிவோம். கடவுளின் வாக்குத்தத்தமும் இதுவே ***"என் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடித் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்குச் சேமத்தைக் கொடுப்பேன்." 2 நாளாகமம். 7:14.*** ஆம, ஜெபிக்கும் சமுதாயத்தின் மூலம் உலகம் ஆசீர்வதிக்கப்படும்.

நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருப்பவர்களுமான சமுதாயமே. எங்கள் வாழ்க்கையில் உடலை வருத்தும் பல நோய்களைச் சந்தித்தோம். உள்ளத்தை உடைக்கும் பல சம்பவங்களைச் சந்தித்தோம். மரணத்தை விளைவிக்கும் பல ஆபத்துக்கள் நிகழ்நதன. தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் எங்கள் பிரயாணங்களில் அவர் பேரருள் எங்களைச் சூழ்ந்திருந்தது. துஷ்ட விலங்குகள் எங்களைத் துரத்தி வந்ததுமுண்டு. விஷப்பாம்புகள் இரவு முழுவதும் எங்களோடு படுத்திருந்ததுமுண்டு. யாரோ மனிதர் எங்கள் ஆகாரத்தில் நஞ்சு கலந்து எங்களைக் கொல்ல எத்தனித்ததுமுண்டு. திருடர் எங்கள் பொருளைத் திருடினதுமுண்டு. வெள்ளப்பெருக்கு எங்கள் வயலை அழித்ததுமுண்டு. இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் எங்கள் அருமை இயேசுவின் அன்புக்கரங்களே எங்களை அரவணைத்து, அதிசயமாகக் காத்தது. கடந்த இருபத்தைந்து வருடங்களாக அவர் அருளை எண்ண எண்ண என் உள்ளம் பரவசமடைகிறது. அவர் அருளைச் சொல்ல, எனக்கு ஆயிரம் நா இருந்தாலோ? என வாஞ்சிக்கிறேன். சில நாட்களுக்கு முன், என்னைச் சந்தித்த ஒரு பெரியார், *இங்கே நீங்கள் செய்யும் இந்த நல் ஊழியத்திற்கு இப்பாகத்திலிருக்கும் கிறிஸ்தவர்கள் போதிய உதவி செய்கிறார்களா?* என்று கேட்டார். உடனே *ஆம் ஐயா, தாராளமாய் உதவி செய்கிறார்கள* என்றேன். ஆனால் இந்த நாட்களில் என்னுடைய பதில் முழுவதும் உண்மை இல்லை என உணருகிறேன். எல்லோரும் உதவி செய்தாலோ என மனிதன் வாஞ்சிக்கலாம். ஆனால் கடவுளின் வழிகள் அதிலும் பெரியது. *"எலியாவின் நாட்களில் மூன்று வருடமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டுத், தேசமெங்கும் மிகுந்த பஞ்சமுண்டாகி இருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரில் இருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானே அல்லாமல், மற்றொருத்தியின் இடத்திற்கும் அனுப்பப்படவில்லை. அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலருக்குள் அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானே அல்லாமல், அவர்களில் வேறொருவரும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* என்று இயேசு சொன்னார். கடவுள் அருளின் ஈவு, அவர் விரும்பும் நேரத்தில் அவர் விரும்பும் பாத்திரங்களுக்கூடாகவே நம்மை வந்து சேரும். இது நம் ஒவ்வொருவரினதும் அனுபவமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்த்தர் நல்லவர்: அவர் கிருபை என்றுமுள்ளது.**

பல்லவி

அத்தனையும் நின் அருளோ - அடியான்
இத்தினத்தில் இங்கே
இசைந்துன்னைப் பாடுவது - அது

அனுபல்லவி

எத்தனையோ விபத்து எத்தனையோ ஆபத்து
அத்தனைக்கும் அருளை சித்தம் உவந்தளித்தாய்

சரணங்கள்

1 பெற்றோர் மறந்ததுண்டு பெரியோர் மறந்ததுண்டு
உற்றோர் மறந்ததுண்டு உடன் ஊழியர் மறந்ததுண்டு
கற்றோர் மறந்ததுண்டு கல்லார் மறந்ததுண்டு
சற்றும் எனைமறவா உற்றெனை காத்த ஏசு - அத்தனை

2 செல்வர் மறந்ததுண்டு இல்லார் மறந்ததுண்டு
நல்லோர் மறந்ததுண்டு பொல்லார் மறந்ததுண்டு
வெல்லைப்பதியில் தாழ்ந்து கொல் கொதாவில் உயர்ந்த
நல்லான் யேசுவே நீ என்னை மறக்கவில்லை.

3 பெற்றதாய் என்னோடு பெரும்பாடு பட்டதென்றார்.
கற்றுக் கொடுத்தவரும் கடும்பிரயாசமென்றார்
உற்ற நண்பர்கள் சிலர் உன்னோடு வாழோமென்றார்
சற்குரு யேசுவே என்னை நம்பி நலம் புரிந்தார்.


4 துட்டவிலங் கென்னைத் துரத்திவந்தது முண்டு
கெட்டவிஷ சர்ப்பம் என்னோடு படுத்துறங்கிய துண்டு
நிட்டூரம் செய்யவென்று நினைத்து வந்தவருண்டு
இரட்சித்தாய் இரட்சித்தாய் இரட்சகா இயேசுவே - அத்தன

**சின்னண்ணன் கனம் சேவக்.ஐ.ரீ.இயேசுசகாயம் ஆண்டவரின் வருகைக்கு எப்போதும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார் என்பதற்கு அவர் இறுதியாக இயற்றிய பாடல் ஒரு சான்றாகும்.**

நிலையில்லா வையகத்தில் அலைந்தேனையா நினைந்தென்னை அழைத்தீரே என்யேசையா
மறந்துன்னை மறுதலித் தடங்காமலே மனம்போன வழியெல்லாம் அலைந்தேனையா
மடிந்திடும் எனக்கண்டு விரைந்தீரையா அடிமைகது அருள்மாரி பொழிந்தீரையா
மலர்ந்த உம்முகங்காண விரைந்தேனையா சிலுவையில் தரிசனம் கண்டேனையா
திகிலோடு உம்சத்தம் கேட்டேனையா கொடிய என்குணம் மாற்றத் துணிந்தேனையா
இப்பாரில் இனிமேல் என்துணை நீரையா அப்பாலும் எனதுயிர் என்யேசையா
உமக்காக எனையும் நீர் தெரிந்தீரையா உமதாவி எனக்கீந்தீர் மகிழ்ந்தேனையா
உமையன்றி இப்பாரில் எனக்கார் ஐயா உமைப்பாடித் துதிப்பதே என்வாழ்வையா
உணவும் உடையும் தந்து காக்கும் ஐயா இடுக்கமாம் உயிர்வழி நடப்பேனையா
என்சாவோ எம்வருகை நாளோ ஐயா எதுமுந்தும் என ஒன்றும் அறியேனையா
எது வந்தும் எனக்கென்ன பயம்தானையா கதி தந்த உமக்குள்ளே ஜெயம் யேசையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆச்சிரமம் ஒரு உறவுப் பாலம்

அருட்பணி. டி.எஸ். மதியாபரணம்
அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை, கித்துள்

ஆச்சிரமம் வடக்கு கிழக்கு மக்களின் உறவுப்பாலம். ஆச்சிரமம் என்னும் சொல் இந்தியாவில் பழைய காலம் தொடக்கம் பிரம்மச்சாரியம், வனப்பிரஸ்தம், கிருகஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு நிலை வாழ்க்கையுடன் தொடர்பு பட்டது. ஆனால் தனிச்சொல்லாகக் கூறப்படும் போது ஒருவன் தன் ஆன்மீக ரீதியாக வாழ்வினை நடத்தும் ஓர் இடத்தைக் குறிக்கின்றது. இதனை குருகுலம் என்றும் அழைக்கலாம்.

மேல் நாட்டு மிஷனரிமாரால் கிறிஸ்தவ சமயம் இந்தியாவில் கொண்டு வரப்பட்டது. இதனால் கிறிஸ்தவ சமயம் ஓர் அந்நிய சமயம் எனக்கருதப்பட்டது. இதே நிலைதான் இலங்கையிலும். கிறிஸ்தவ சமயம் இந்தியாவில் வேரூன்ற வேண்டுமாயின் அது தன் போர்வையைக் களைய வேண்டும். இந்திய மண்ணில் புரண்டு இந்தியக் கலாசாரத்தில் மூழ்கியெழுந்து இந்திய பண்பாட்டு திருச்சபையாக மலரவேண்டும் என்பது பலரது எண்ணக்கரு. இதனால்தான் இந்தியாவில் ஆச்சிரமப் பணி உருவாக்கப்பட்டது. இப்பணியினை இந்தியாவில் திருப்பந்தூரில் அருட் கலாநிதி இயேசுதாசன் அவாகள் நடாத்தி வந்தார். இலங்கையின் மண்வாசனைக்கேற்ப ஆச்சிரமப் பணியினை உருவாக்கவேண்டும் என்று அருட் திரு எஸ் செல்வரட்ணம் (பெரியண்ணன்) அடிகளார் தன் இறையியற் கல்வியின் காலத்தில் விரும்பினார். 1924ம் ஆண்டில் அருட் கலாநிதி இயேசுதாசனைச் சந்தித்து அவரின் பணியைத் தனதாக்கிக் கொண்டு 1939ம் ஆண்டு யாழ் மருதனார்மடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தையும் 1958ம் ஆண்டு கிரான் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தையும் ஆரம்பித்தார். முதலில் களுவங்கேணியிலும், வட்டிமோட்டமடுவிலும் ஆச்சிரமப்பணிகளை ஆரம்பித்தாலும் 1958ம் ஆண்டு கிரானில் ஆச்சிரமம் தன் ஆன்மீகப் பணியைத் தொடங்கியது.

"இறைவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார் இறைவனுக்காய் பெரிய காரியங்களைச் செய்" என்ற தாரக மந்திரத்தை தன் மகுடமாகக் கொண்டு இன்றுவரை கிறிஸ்தவ சமூகத்தில் மட்டுமல்ல இன, மத மொழியென்ற பாகுபாடில்லாமல் பணியாற்றுகின்றது. இது ஓர் கிறிஸ்தவ வழிபாட்டு இடமாக இருந்தாலும் எல்லா மக்களினதும் அமைதியின் உறைவிடமாகவும் இருக்கின்றது. துன்ப துயரங்களோடு வருபவர்கள் ஆச்சிரம ஜெப ஆலயத்தில் இருந்தாலே போதுமானது, முன்பு இருந்த அண்ணன்மார்களிடம் தம் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டாலே போதுமானது என்பது பலரின் வாஞ்சையாகும். ஆனால் இன்று ஆறுதலுக்கு ஓர் அண்ணன் இல்லை என்பது பலருடைய ஆதங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மண் மணக்கும் இறையியல் என்றும் கலாச்சாரம் என்றும் பேசப்படும் இந்நாட்களில் கீழைத்தேயக் கலாச்சாரத்திற்கு ஏற்ப வழிபாட்டிடம் மரக்கறி உணவு கிறிஸ்தவ தேவாரம் கீர்த்தனைகள் கர்நாடக சங்கீத முறையில் பாடல்கள் நிலத்திலிருந்து வழிபாடு செய்தல் பாதணிகளை ஆலயத்திற்கு வெளியே கழற்றி விடுதல் பலி பீடத்தில் குத்துவிளக்கு ஏற்றுதல் என்பன இன்றும் நடைமுறையில் உள்ளன. இதனால் ஆச்சிரமத்தை கலாச்சாரத்தின் காவலன் என அழைக்கலாம்.

இளைத்தவர்களுக்கு, களைத்தவர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கு, என்றும் இன்பம் தருகின்ற இன்பச் சோலையாக காட்சி தருகின்றது. இன்றும் ஏழு பிள்ளைகள் பராமரிக்கப்படுகிறார்கள். இவர்களில் ஒரு மாணவன் (இம்முறை A/L பரீட்சை எழுதிய) ஆச்சிரமப் பரிபாலண சபையின் ஆலோசனையின் படி பணிகளை திறமையாக நடாத்தி வருகின்றார்.

ஆதரவற்றவர்கள், வீடுகளில் வைத்துப் பராமரிக்கப்பட முடியாதவர்கள், ஆச்சிரம அரவணைப்பில் பல சிறந்த சமயத்தலைவர்களாக சிறந்த கல்விமான்களாக உருவாக்கப்பட்டுள்ளார்கள். இதனால் ஆச்சிரமம் அடைக்கலகிரியாக இன்றும் தன் அன்புப் பணியை செய்கின்றது.இன ஒருமைப்பாட்டின் உருவாக்கத்தின் மையம் நாட்டில் இனக்கலவரம் ஏற்பட முன் சிங்கள பேராயர்கள், மதகுருமார்கள், இறைமக்கள் எனப் பலர் ஞான ஒடுக்கத்திற்காக தியானத்திற்காக தங்கள் விடுமுறை நாட்களை ஆச்சிரமத்தில் கழிப்பார்கள். பல காலங்கள் இன ஒருமைப்பாட்டுக்குத் தடைகள், சண்டைகள் ஏற்பட்ட போதும் தற்போது கிழக்கில் அமைதி ஏற்படுவதினால் பழைய நிலை ஏற்படும் என எண்ணுகிறோம்.

ஒரு காலத்தில் கிரான் ஆச்சிரமத்தில் ஆண்டு விழாவுக்கும் அருள் விழாவுக்கும் யாழ்பாணம் கொழும்பு, மலையகம், வெளிநாடுகளில் இருந்தும் கூட பல கிறிஸ்தவ இந்து மக்கள் என பலரும் கலந்து கொள்வார்கள். வழிபாடுகள் கலை நிகழ்சிகள் ஒரு புறமிருக்க ஆச்சிரமத்தின் இரவு உணவாகிய புளிச்சாதம் வாங்கி உண்பதற்கு மக்கள் படும் நெரிசல் இன்றும் மறக்க முடியாத கண் கொள்ளாக் காட்சியாகும். ஆச்சிரமத்தில் பகிரப்படும் உணவு அமிர்தம் என்றே மக்கள் அழைப்பார்கள். இக்கொண்டாட்டக் காலங்களில் வருகின்ற விருந்தினர்களே இவ்வுணவுகளைச் சமைத்து பரிமாறுகின்ற செயல் இன்றும் பேணப்படுவது அண்ணன்மாரின் தலைமைத்துவத்தின் சிறப்பாக இருக்கின்றது.

யுத்தம், சுனாமி, உள்ளக இடப்பெயர்வு இடைத்தங்கல் முகாம் காலங்களிலும் எல்லா மக்களையும் தன்னகத்தே வைத்துப் பராமரித்த நாட்களை மறக்க முடியாது. இவ்வாச்சிரமம் தன் பணிக்காக அல்லது தன் உணவுக்காக கை நீட்டிப் பணம் கேட்கும் பாரம்பரியம் இல்லை. ஆனால் இறைபணிக்காகவும் துயர்துடைக்கும் பணிக்காகவும் கொடுப்பவர்கள் உள்ளூரிலும் வெளியூரிலும் அனேகர் உண்டு. ஜெப ஆலயத்தில் வைக்கப்படும் தர்மப் பெட்டியில் சேரும் பணம் ஆச்சிரமத்தின் பணிகளுக்கு உதவியாக உள்ளது.

இன்று ஆச்சிரமப் பணிக்கு அண்ணன்மார் இல்லை என்பதும் இப்பணிக்காக வாலிபர்கள் தங்களை ஒப்படைப்பதில்லை என்பதும் வேதனைக்குரியதாகும். வாலிபர்களை இப்பணிகளில் உட்சாகப்படுத்த துறவிகள் இல்லை என்பதும் நாட்டில் தொடர்ந்த நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தினால் பல வாலிபர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெளிநாடுகளில் வாழ்வதும் நாட்டை விட்டு குடும்பங்களாக வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்திருப்பதும் ஆச்சிரமம் ஆரம்பித்த போது இருந்த கிறிஸ்தவ சமூகம் இன்று இல்லை என்பதும் பலர் மறுமைக்குள் சென்றுவிட்டார்கள் வேதனைக்குரிய ஒன்றாகும். இதனால் புதிய கிறிஸ்தவ சமூகத்திற்கு இப்பணிகளைக் குறித்த விளக்கமின்மையும் இன்று புதிய துறவிகள் உருவாகாமைக்ககு காரணமாக இருக்கலாம்.

இங்கு பணி செய்பவர்கள் சேவக் என அழைக்கப்படுவதும், காவி உடை அணிவதும், திருமணம் செய்யாதிருத்தலும், மாமிசம் உண்ணாதிருப்பதும் இப்பணிக் களத்தின் சிறப்பம்சம். இதனால்தான் பலர் இப்பணிவிடைக்கு தங்களை ஒப்புக்கொடுத்து பணிசெய்யாமல் பின்வாங்கிப் போன நாட்களும் உண்டு. இப் பொன்விழாக் காலங்களில் கிறிஸ்தவ சமூகம், திருச்சபைத் தலைவர்கள் அண்ணன்மாரை உருவாக்க அயராது பாடுபட அழைக்கப்படுகிறோம். ஒவ்வொரு திருச்சபையும் ஆச்சிரமப் பொன்விழாக் காலங்களில் ஒரு குருவானவரையாவது இப்பணிக்கு ஆயத்தம் செய்வோம். கிறிஸ்தவப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் ஒருவரையாவது இப்பணிக்கு ஒப்படைக்க ஆயத்தமாவோம். அப்போதுதான் ஆச்சிரமம் தன் நூற்றாண்டை பலதுறவிகளோடு நடாத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரான் ஆச்சிரமத்தில் எமது வில்லுப்பாட்டு





**கதைமாமணி, கலாபூஷணம்**
**மாஸ்டர் சிவலிங்கம**

1967 ஆம் ஆண்டு….! ஒரு நாள், மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர கல்லூரியிலே மாணவிகள் சிலருக்கு நான் **"மறதி மங்கப்பர்"** என்ற நகைச்சுவை வில்லுப்பாட்டைப் பழக்கிக்கொண்டிருந்தேன். அந்த வில்லுப்பாட்டு, இலங்கை வானொலியின் 'சிறுவர் மலர்' நிகழ்ச்சிக்காகத் தயாரிக்கப்பட்டது. திருமதி .திரவியம் இராமச்சந்திரன், திருமதி..சிவபாதசுந்தரம், திருமதி. செல்வி நாகராஜா ஆகிய மூன்று ஆசிரியைகளும் வில்லுப்பாட்டை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

திருமதி. இராமச்சந்திரன் என்னைப்பார்த்து, *"மாஸ்டர்! கிரான் ஆச்சிரமத்தைச் சேர்ந்த சின்னண்ணன், உங்களைச் சந்தித்து ஏதோ பேச விரும்புவதாகக் கூறினார். இன்றைக்கு வந்தாலும் வருவார்…"* இப்படி திருமதி. இராமச்சந்திரன் கூறிக்கொண்டிருந்த போது…..! கல்லூரி அதிபர் திருமதி. சின்னையா, கிறிஸ்தவத் துறவி ஒருவருடன் வில்லுப்பாட்டு நடைபெற்ற மண்டபத்திற்குள் வந்தார். நாங்கள் எழுந்து நின்று, அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தோம்.

*"மாஸ்டர்! இவர் எங்கள் மதிப்பிற்குரிய சின்னண்ணன். கிரான் கிறிஸ்தவ ஆச்சிரமத்தின் தலைவர். ஆச்சிரம விழா ஒன்று, அண்மையில் நடைபெற உள்ளதாம். அந்த விழாவில், உங்களுடைய வில்லுப்பாட்டும் இடம்பெற வேண்டும் என்று சின்னண்ணன் விரும்புகிறார். அது சம்பந்தமாகவே உங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்…"* என்று கூறினார் திருமதி. சின்னையா.

*"மாஸ்டர்! உங்களுடைய வில்லுப்பாட்டை, மட்டக்களப்பு நகர மண்டபத்திலே நடைபெற்ற விழா ஒன்றிலே பார்த்து ரசித்திருக்கிறேன். எங்கள் கிரான் ஆச்சிரமத்தோடு தொடர்புடைய பலர், உங்கள் வில்லுப்பாட்டு எங்கள் விழாவில் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். நானும் வெகுவாக விரும்புகிறேன். ஆகவே நீங்கள், எங்கள் ஆச்சிரம விழாவில் வில்லுப்பாட்டு நடத்தி மகிழ்விக்க வேண்டும்"* என்று எனது தோளிலே அன்போடு தட்டியபடி, புன்முறுவலுடன் கூறினார் சின்னண்ணன்.

*"நீங்கள் வந்து கேட்கும் போது என்னால் மறுக்க முடியுமா? உங்கள் விழாவில் பங்குபற்றி வில்லிசை வழங்குவேன். என்ன தலைப்பில் வில்லுப்பாட்டு அமைய வேண்டும்?"* எனக் கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் இந்து சமயத்தவராக இருந்தாலும் எல்லா மதங்களையும் மதித்து நடப்பவர் என்று திருமதி. சின்னையா என்னிடம் கூறினார். பைபிலிலே உள்ள ஒரு கதையை வில்லுப்பாட்டாக உருவாக்கி வழங்குங்கள்..." என்றார் சின்னண்ணன்.

"நீங்களே பொருத்தமான பைபிள் கதை ஒன்றைச் சுருக்கமாக எழுதித் தந்தால் உதவியாக இருக்கும்" என்று நான் கூறினேன்.

"சரி மாஸ்டர், இரண்டு நாட்களில் பைபிளில் உள்ள யோபுவின் கதையை எழுதி திருமதி. சின்னையாவுக்கு அனுப்பி வைப்பேன். அதனை அவர் உங்களிடம் சேர்த்து விடுவார். மாஸ்டர்! உங்களைச் சந்தித்துப் பேசியதில் மிகவும் சந்தோசம். மீண்டும் சந்திப்போம்" என்று கூறியபடி, எனது முதுகிலே மெதுவாகத் தட்டியபடி விடைபெற்றுச்சென் றார் சின்னண்ணன்.

காட்சிக்கு எளியவராகக் காணப்பட்ட சின்னண்ணனின் முகத்திலே, தெய்வீக ஒளி வீசியதை அவதானித்து மெய்மறந்து நின்றேன்.

சின்னண்ணன், திருமதி. சின்னையா மூலம் அனுப்பிய யோபுவின் கதைச் சுருக்கப்பிரதி இரு தினங்களில் எனக்குக் கிடைத்தது.

**"பக்தன் யோபு"** என்ற தலைப்பிலே பக்திச்சுவையும், நகைச்சுவையும் இணைந்த வில்லுப்பாட்டை உருவாக்கினேன்.

ஊர்த்ஸ் எனும் நாட்டில் யோபு என்ற உண்மையான பக்தன் ஒருவன் இருந்தான். அவன் தேவனிடத்திலே பயபக்தி உடையவன், புனித சன்மார்க்கனாக அவன் விளங்கினான். அவனுக்கு ஏழு புதல்வர்களும், மூன்று புதல்விகளும் இருந்தனர். யோபு பெரிய செல்வந்தன். அவனிடம் ஏராளமான மாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள், கழுதைகள் ஆகியன இருந்தன. அவற்றைப் பரிபாலிக்க ஊழியர்கள் பலர் இருந்தனர். நல்லுள்ளம் படைத்த யோபு, ஏழைகளுக்குத் தாராளமாக வாரி வழங்கினான். இன சன சுற்றத்தாரை அழைத்து, விருந்துபசாரம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இவற்றை அவதானித்த சாத்தான் பொறாமை கொண்டான். ஒருநாள் சாத்தான் கர்த்தர் முன் தோன்றி, "புவி எங்கும் சுற்றித்திரிந்து வருகிறேன்" என்று கூறினான். இப்படி அவன் கூறியதும், "எனது உண்மைப் பக்தன் யோபுவை நீ கண்டாயா? உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்த நல்வாழ்வு வாழ்பவன் யோபு" என்றார் கர்த்தர். "அவனுக்குப் பெருஞ்செல்வத்தை வாரி வழங்கியிருக்கிறீர்கள். ஆகவேதான் யோபு உங்களைத் தொழுகிறான். அவனுக்குக் கொடிய வறுமை ஏற்பட்டால், அவன் உங்களைத் தூஷித்துத் திரிவான்" என்றான், தீய குணம் படைத்தவனான சாத்தான். யோபுவை, சாத்தான் பல சோதனைகளுக்குட்படுத்தி, அவனை வறுமையில் வாடச் செய்தான். எவ்வளவு இன்னல்கள் ஏற்பட்ட போதும் யோபு மனந்தளராது இறைவனின் உன்னதப் பக்தனாக வாழ்ந்து, இறைவனின் பேரருளைப் பெற்றான். தோல்வி அடைந்த சாத்தான் ஆண்டவன் முன் தோன்றி தனது தோல்வியை ஒப்புக்கொண்டான். இது தான் யோபுவின் வில்லுப்பாட்டுக் கதைச் சுருக்கம்.

கிரான் ஆச்சிரம விழாவிலே பெரும் கூட்டத்தின் மத்தியிலே வில்லுப்பாட்டு நடத்திக் கொண்டிருந்தேன். சாத்தான் வரும் கட்டத்திலே ☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வந்தான் வந்தானே - சாத்தான்
வந்தான் வந்தானே - நல்ல
வடிவும் பகட்டும் நிறைந்த - பேச்சுடன்
வந்தான் வந்தானே

இப்படி நான் பாடிக்கொண்டிருந்த போது எங்கிருந்தோ ஒரு தெருநாய் தொண்டை கிழிய ஊளையிட ஆரம்பித்தது. சிலர் சத்தம் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தனர். உடனே நான்,......

*அதோ ஊளையிட்டுக் கொண்டு சாத்தான் வருகிறான். சிலர் அந்த சாத்தானை திரும்பிப் பார்க்கிறார்கள். சாத்தானைப் பின்னாலே திரும்பிப் பார்க்காமல், முன்னோக்கி ஆண்டவனைப் பாருங்கள்"* என்றேன்.

அதைக் கேட்டுக் கூட்டத்தினர் ஏற்படுத்திய கரகோஷம், அந்தப் பிரதேசத்தையே கிடுகிடுக்க வைத்தது. வில்லுப்பாட்டு முடிந்ததும், சின்னண்ணன் எமது வில்லுப்பாட்டை வெகுவாகப் பாராட்டினார். அத்தோடு நான் சமயோசிதமாக நாய் ஊளையிட்ட நிகழ்ச்சியைச் சமாளித்த விதத்தையும் விதந்து பாராட்டினார்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு பெருமானின் அன்பை அவனியில் பரப்புவதில் தன் வாழ்வை அர்ப்பணித்த வண இயேசுசகாயம் அடிகள்

## பி.ஜீ.ஜெயராஜ், மட்டக்களப்பு

**சின்னண்ணனின் 29வது மறைவு ஆண்டு நினைவு நாளை நினைவுகூருமுகமாக 30.12.1999 அன்று, வீரகேசரியில் வெளியான கட்டுரை**


இயேசு பெருமானின் அன்பை அவனியில் பரப்புவதில் தன் வாழ்வை அர்ப்பணித்த வண. யேசுசகாயம் அடிகள்

கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரம வரலாற்றில் சிறப்பான சம்பவங்களில் வணக்கத்திற்குரிய சேவக். ஐ.ரி. இயேசுசகாயம் (சின்னண்ணன்) என்னும் அடியார் கிறிஸ்த சேவ ஆச்சிரமக் குடும்பத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து சேவக் அபேட்சகனாகத் தன்னை அர்ப்பணித்தமை மறக்கமுடியாத சம்பவமாகும். இறை விசுவாசத்துடன் இசையிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர் தாளவாத்தியங்களை தானே மீட்டிக் கொண்டு புதிய மெட்டில் கிறிஸ்தவ கீதங்களை இசைப்பதில் வல்லவர்.

இவர் 1918ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணம் நவாலியூரிலுள்ள ஓர் பக்திநிறைந்த குடும்பத்தில் பிறந்தார். தனது இளமைப் பராயத்திலேயே இறைமகன் இயேசுக் கிறிஸ்துவுக்குத் தன்னை அர்ப்பணித்து யாழ்.சபாசங்கத்தின் கீழ் யாழ்ப்பாணம் - மூளாய் திருச்சபையில் ஓராண்டு காலம் திருப்பணி யாற்றினார். பின்பு யாழ்ப்பாணம் மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆச்சிரமப் பணியினைத் தொடங்கிய வண.சேவக் எஸ்.சாமுவேல் செல்வரெத்தினம்(பெரியண்ணன்) அவர்களோடிணைந்து 1944 இல் தன்னை ஆச்சிரம ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஆச்சிரமக் கோட்பாடான சேவக்மித்திரன், சேவக் அபேட்சகன், சேவக் என்ற மூன்று நிலைமைகளினூடாக கீழ்ப்படிவு, வறுமை, கற்பு எனும் மூன்று விரதங்களையும் ஏற்று அருட்செய்திக் கூட்டங்கள் நடத்தினார். இவர் ஆச்சிரமத்தில் காவி அங்கியணிந்து கிறிஸ்தவத் துறவியாக மலர்ந்த முகத்துடன் ஒரு தளம்பாத அமைவான செல்வாக்குடன் வாழ்ந்து பணியாற்றினார். இயேசுபெருமானின் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே என்று தான் சென்ற இடமெல்லாம் கிறிஸ்து பெருமானின் அன்பை அறிவித்து வந்த செம்மனச் செல்வன் இவர். இவர் முதலில் உதவிக்குருவாகவும் பின்னர் குருவாகவும் திருநிலைப்படுத்தப்பட்டு தென்இந்தியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை யாழ் பேராயத்தின் குருமாரில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். தன்னை அண்டிவரும் அன்பர்களின் அழைப்பை அசட்டை செய்யாமல் தன் குழந்தை அழுகுரல் கேட்டதும் விரைந்தோடும் தாய் போல உடனே அவர்களை அணுகி, அவர்களுக்கேற்பட்ட தாக்கங்கள், மனக்கவலைகள் ஆகிய பலவகைப் பிரச்சனைகளையும் தனது ஆன்ம சரீர ரீதியில் களைவதில் கரிசணையுடையவர். கிழக்கு மாகாணத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் மத்தியில் திருப்பணியாற்ற வேண்டும் என்ற ஆச்சிரமத்தின் நோக்கத்தினை ஏற்றுக்கொண்டு, இவர் மட்டக்களப்புக்கு வந்தார். வைத்தியப்பணி மற்றும் சமூகப்பணியுடன் கூடிய சுவிஷேகப் பணியினை 1953ஆம் ஆண்டு, சித்திரை மாதம் அவர் மட்டக்களப்பிற்கு வடக்கே பன்னிரெண்டு மைல்கள் தொலைவிலுள்ள களுவன்கேணி கிராமத்தில் ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து கானந்தனை, முறுத்தானை எனும் வயல்வெளிக் கிராமங்களிலும் காயாங்கேணி, மாங்கேணி என்னும் கடலோரக் கிராமங்களிலும் அன்னாரது பணி தொடர்ந்தது.


மட்டக்களப்பு வாழைச்சேனையிலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ளதும், கிரான் கிராமத்தை அண்மித்ததுமான வட்டிபோட்டமடு எனும் கிராமத்தை அரசினரிடமிருந்து பெற்றுக்கொண்ட எட்டு ஏக்கர் காணியில் ஆனி மாதம் 15ம் திகதி தனது ஆச்சிரமப் பணியினைத் தொடங்கினார். அந்த ஆச்சிரமம் இன்று ஜோதிநிலையம் என்னும் பெயர் வழங்கப்பட்டு நிலைத்து நிற்கின்றது. இவ்விடத்தில் சகாயர் வாசம் எனும் சிறுமனையை அமைத்து சின்னண்ணன் அவர்கள் ஆச்சிரமப்பணியை ஆற்றிவந்தார்.மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளஅனேக கிறிஸ்தவர்களும் ஆச்சிரம அன்பர்களும் போக்குவரத்துச் செய்யக்கூடிய இடத்தில் ஒரு ஆச்சிரமம் அமைப்பது கிறிஸ்தவ, கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு ஆத்மீக ஜீவியத்திற்கு உதவியாக இருக்குமென உணர்ந்ததால் கிரானில் பாதிரியார் தோட்டம் என்றழைக்கப்பட்ட பதினேழரை ஏக்கர் மேட்டு நிலத்தைப் பணங்கொடுத்து வாங்கி 1957 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமம்□ எனும் பெயர் கொண்ட ஆச்சிரமத்தையும் ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணம் மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தில் திருப்பணியாற்றும் வேளை திருச்சபைப் பணிகளில் இறுதியாக 1970ஆம் ஆண்டு, மார்கழி மாதம் 27ம் திகதி யாழ்ப்பாண கட்டைவேலித் திருச்சபையில் அருளுரையாற்றினார். இறைமகன் இயேசுவின் பூரணமான அழைப்பை ஏற்றுக்கொண்ட இவர், மறுநாள் 28ம் திகதி சடுதியாக நோய்வாய்ப்பட்டார். யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தரது கரங்களில்,1970 ஆம் ஆண்டு, மார்கழி 30 ஆம் திகதி தனது ஆவியை ஒப்வித்து இம் மண்ணுலகை நீத்தார். அன்னார் மரணித்து 29 வருடங்கள் பூர்த்திதினம் இன்று கிறிஸ்தவ மக்களால் நினைவு கூரப்படுகிறது

நன்றி வீரகேசரி 30.12.1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆச்சிரம உருவாக்கம் அண்ணன்மாரின் சிந்தனை

## - க.குழந்தைவேலு -

*'தேவனிடத்தில் அன்பு வை. உன் அயலவரிடத்திலும் அன்பு வை' (மாற்கு 12:30:31)*, அருள்நாதர் இயேசு நினைவூட்டிய பிரதான கற்பனை இது. இதைச் சிரமேற்கொண்டு வார்த்தையில் மாத்திரமல்ல, வாழ்க்கையிலும் காட்டியவர் பெரியண்ணன். இதனாற்தான் சாதாரண செல்வரெட்ணம் போதகர், பெரியஅண்ணாவாகப் பிரகாசித்தார். திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆச்சிரமத்தில் இவர் மீது விழுந்த சிறு பொறி, வளர்ந்து பெரிதாகிப் பிரகாசித்து அவரை நெருக்கி ஏவியபடியினால், ஆண்டவர் மீது, தான் வைத்திருந்த அன்பு - பக்தி, ஆண்டவரைப் பின்பற்றிய அனைவர் மீதும் எழவேண்டும் என்ற வாஞ்சையை அவருக்கு ஏற்படுத்தியது. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, மட்டக்களப்பிலும் பிரகாசிக்க வேண்டும் என விரும்பினார், செயற்பட்டார். இதன் பயனாகவே, இலங்கையில் வடக்கு, கிழக்கில் மாத்திரமல்ல, பல இடங்களிலும் ஏன் உலகத்தின் பல பகுதிகளிலும் ஆச்சிரம ஊழியத்தினால் ஆதாயப்பட்ட அநேக ஆத்துமாக்களுடன் பிரகாசிக்கின்றது. இதற்காக ஆண்டவரைத் துதிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதுமாத்திரமன்றி, இந்த அனல், இயேசு சகாயம், சாமுவேல் தேவரெட்ணம் ஆகியோர் மீதும் படர்ந்தபடியால், அவர்கள் இருவரும் கூட, பெரியண்ணனுடன் தோளோடு தோளாக இந்தப் பணியில் இறங்கினர். இதன் பெறுபேறாக நமக்கு ஒரு சின்னண்ணனும், சாம் அண்ணனும் கிடைத்தனர். இந்த அன்பைப் பெற கிரானிலும் அதன் சுற்றுவட்டத்திலும் வாழ்கின்ற நமக்குக் கிடைத்த பெரும் பேற்றினை நினைத்து ஆண்டவருக்கும், அண்ணன்மாருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் அதிகமாகக் கங்காணிமாரையே சந்தித்திருக்கின்றோம் நீ இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுபவர்களே இன்று அதிகம். ஆனால் பெரியண்ணன் இதற்கு விதிவிலக்கு. செய்யவேண்டியதைச் சொல்லாமல் செய்து காட்டுபவர். இதனாலேதான் இவர் *அண்ணன்-சகோதரன்-வழிநடத்துபவர்* என்ற பெருமையை அடைந்துள்ளார். மற்ற இரண்டு அண்ணன்மாரும் கூட, இதேபோலவே. நாம் கேட்டுச்செய்யாமல், பார்த்துச் செய்யக்கூடிய பண்பாளர்களாக விளங்கினர். ஆண்டவர்மீது கொண்ட அன்பினால் உலகப் பிரகாரமான உல்லாசங்களையும், இன்பங்களையும் நாடிச் செல்லாமல் நன்மை செய்பவர்களாகச் சுற்றித் திரிந்த பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் மூவருமே ஆண்டவருடைய பிரியமான பணிவிடைக்காரர்களாக விளங்கினர். தன்னைத் தான் வெறுத்துத் தன் சிலுவையை அனுதினமும் சுமந்து, ஆண்டவரைப் பின்பற்றிய உத்தம சீடர்களாக விளங்கினர். காணப்படுகின்றவைகளையல்ல காணப்படாத நித்தியத்தையே நாடினர். அதன் காரணமாகவே இன்றும் நம் உள்ளங்களில் வாழ்கின்றனர். ஏன் என்றுமே நித்தியமாக நம்முடன் வாழ்வர்.

அண்ணன்மார் மூவராலும் நமக்கு என்ன பயன்கிடைத்தது என்று நாம் ஒரு வினாவை எழுப்பி, சிந்திப்போமானால், அன்று ஒரு சீடன் கூறியது போல வெள்ளியும் பொன்னுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினாலே எழுந்து நட என்றதைப்போல, ஆண்டவரின் நாமத்தைத் தரித்துக்கொண்டும், எழுந்து நடக்க முடியாதவர்கள் போல வாழ்ந்து வந்த நம்மையெல்லாம், ஆச்சிரம ஊழியத்தின் மூலம் எழுந்து நடக்க மாத்திரமல்ல ஆண்டவருடைய நாமத்திற்காக எழுந்து பிரகாசிக்கவும் வழிகாட்டினர்.



சாம் அண்ணனுடன் கட்டுரையாசிரியர்

ஊழியத்தை ஊதியத்திற்காக அல்ல ஊழியத்திற்காகவே செய்த அண்ணன்மாரிடம் வெள்ளியும் பொன்னும் இல்லைதான். ஆனால் காவி ஆடை இருந்தது, சிலுவை இருந்தது, சிலுவையில் தொங்கிய ஆண்டவர் இருந்தார். ஆண்டவரின் அன்பு இருந்தது. அதன் மூலம் அநேகரிடம் அன்பு கொண்டவர்களாக ஆச்சிரமத்தினூடாக ஆண்டவரை நோக்கிப்பார்க்கவும், அநேகர் உண்மையாகவே ஆண்டவரை நோக்கிப்பார்க்கவும் விசுவாசிக்கவும் வழிநடத்தினர். அடைக்கலகிரியில் வாழ்ந்து உண்மையாகவே அநேகருக்கு அடைக்கலம் கொடுப்பவர்களாகவும் ஞானக் கண்மலையின் அடைக்கலத்தில் அநேகரைப் பிணைப்பவர்களாகவும் அவர்கள் வாழ்தனர். இது அவர்கள் அயலானிடத்தில் லைத்த அன்பு.

கிரான் ஆச்சிரமத்தின் 50வது ஆண்டினை நினைவு கூருகின்ற இந்தவேளையில ஆச்சிரமத்தையும், அண்ணன்மாரையும் ஒரு வினாடி உற்றுப்பார்க்க வேண்டும். அண்ணன்மார் விசேடமாக பெரியண்ணன் ஆச்சிரமத்தை ஏன் உருவாக்கினார்? மற்ற அண்ணன்மார் ஏன் இதற்காக உழைத்தனர்? என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆச்சிரமம் என்னுடையது என்று சிந்திப்பதைவிட, ஆச்சிரமம் உருவாக்கப்பட்ட நோக்கத்தையும் அண்ணன்மாரின் நோக்கத்தையும் சிந்திக்கவேண்டும். ஆச்சிரமம் என்ன நோக்கத்தைக்கொண்டு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திலிருந்து இம்மியும் விலகாமல் செயற்பட உறுதிகொள்ள வேண்டும். எனக்கு, உனக்கு என்று சிந்திப்பதைவிட, பவுல் அடியார் கூறியபடி "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தனையே உங்களிலும் இருக்கக்கடவது" என்றபடி, ஆச்சிரமத்தைப் பொறுத்தவரையில் "அண்ணன்மாரிலிருந்த சிந்தையே" நம்மிலும் உருவாகவேண்டும். நமது திட்டங்களல்ல, அண்ணன்மாரின் தூரநோக்குச் சிந்தனைகள் மாத்திரமே ஆச்சிரமத்தில் செயற்பட வேண்டும். இதன் முக்கிய காரணம் என்னவென்றால் பெரியண்ணனின் சுயசித்தம் அல்ல ஆண்டவரின் சித்தமே பெரியண்ணன் மூலம் உருவாகியது, நிறைவேறியது. அதற்கு எவ்விதமும் மாசு ஏற்படாது நடக்கவேண்டியது ஆச்சிரம அடியார்களின் பொறுப்பு வாய்ந்த கடமையாகும். இக் கடமையில் நாம் தவறுவோமாயின் அண்ணன்மார் மூவரையும் ஆண்டவரையும் கூடத் துக்கப்படுத்துபவர்களாக ஆவோம். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய கிறிஸ்தவ வருகையில் காலனித்துவ செல்வாக்கு

**வி.பி.தனேந்திரா**
**யாழ்ப்பாணம்**

கிறித்தவம் ஆசிய மண்ணிற்கு ஐரோப்பிய பண்பாட்டுத் தளத்தினூடாக வந்த போதிலும், குறிப்பாக இதன் வருகையால் ஆசியப் பண்பாட்டு சமூக இழைகளில் புதிய ஊடாட்டம் உருவாகத் தொடங்கியது. இயேசு மேறகாசியப்பகுதியில் பிறந்து, பணியாற்றிய போதிலும் அதீத நிறுவனப் போக்குடைய கிறித்தவத்தை, காலனித்துவ ஆட்சியின் போதே பெற்றுக்கொண்டது என்பது வரலாற்று உண்மையாகும்.

இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான தோமா, தனது பணிக்களத்தை இந்தியாவின் தென்மேற்குப் பகுதியிலும், பின்னர் மலபார் என அழைக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களில் அமைத்துக் கொண்டார் எனச் சில வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இன்னும் தோமா 'கிறித்தவர்கள்' என அழைத்துக் கொள்ளும் சிரிய மலபார், சிரிய மலங்கரா எனப்படும் இரு பூர்வீக திருச்சபைகள், இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருப்பது கண்கூடு. தமிழ் நாட்டின் தலைநகரான சென்னைப் பட்டணத்தில் தோமா வாழ்ந்த இடம் அமைந்துள்ள மலைக்குகை, அவர் ஈட்டியால் எறியப்பட்டு கொல்லப் பட்டதான குகை. மற்றும் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட கலலறை போன்ற வரலாற்றுச் சான்றுகள் காணப்படுவது எமது அவதானத்துக்குரியது.

அ. கா. பெருமாள், 'வேதசாட்சி தேவசகாயம்பிள்ளை வரலாறு' எனும் தனது நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "இங்கு கன்னியாகுமாரி மாவட்டத்துக்கும், கத்தோலிக்க சமயத்துக்குமுள்ள தொடர்பு இந்தியாவில் கிறிஸ்தவ வருகையில் காலனித்துவ செல்வாக்கு, இயேசுக்கிறிஸ்துவின் சீடரான புனித தோமஸின் திருவாங்கூர் வருகையிலிருந்து தொடங்குகிறது. புனித தோமஸ் கி.பி 52 இல் கேரளத்து கொடுங்கநல்லூருக்கு வந்த பின்பு இன்றைய குமரிக்கோட்டத்து ஊரான திருவிதாங் கோட்டில் ஓர் ஆலயத்தை நிறுவினார்" (அ.கா பெருமாள் - 2004)

## வர்த்தகத் தொடர்புகளும் கிறித்தவமும்

ஐரோப்பிய ஆசியக் கண்டங்களிடையில் வர்த்தக ரீதியான தொடர்புகள் வரலாற்று பழமையானவை. இவ்வர்த்தகக் குழுக்களின் அனுபவங்களும், இப்பகுதி மக்களின் வளர்ச்சி பற்றிய விவரணைகளும், விநோதமான தகவல்களும் ஐரோப்பிய மக்களிடையில் பலத்த கற்பனைகளை உருவாக்கியது. ஆசியக் கண்டத்தின் பல பாகங்களில் கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர், வெளிப்படையாகவே தமது மதநம்பிக்கையின் அடையாளங் களைக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தொல்லியல் சான்றுகள் தெளிவாக காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் இந்தியாவைப் பற்றிப் பல கதைகள் வழங்கி வந்தன. இந்திய தேசமானது, 'பூலோக சுவர்க்கம்' என்றும், பணம் காய்க்கும் மரங்கள் ஏராளமாக வளர்கின்றன என்றும், தேன் ஆறும், பால் ஆறும் அங்கு கரை புரண்டோடுகின்றன என்றும் பல விதமான செய்திகள் உலவி வந்தன" என மயிலை சீனி வெங்கடசாமி கூறியுள்ளார். (மயிலை சீனி வெங்கடசாமி - 2000)

## வர்த்தகக் காலனித்துவக் காலகட்டத்தில் கிறித்தவம்

ஐரோப்பாக் கண்டத்தில், குறிப்பாக இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி உருவாக்கிய, உற்பத்தி மாற்றமும், புதிய கடற்பாதைகளின் கண்டுபிடிப்பும் மற்றும் கடற்போரில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தினால் அராபிய வாணிப நலனில் உருவான வீழ்ச்சியும், தமது வர்த்தக நலன்களை விரிவுபடுத்த உதவியது. காலனித்துவ நலனின் விரிவாக்கத்தால் இப்புதிய நாடுகளின் செல்வங்கள் சூறையாடப்பட்டதோடு அடிமை வியாபாரமும், ஐரோப்பியர் கைகளிலிருந்து, ஐரோப்பிய வர்த்தகர்களின் கைகளுக்கு மாறியது. பறங்கியரின் கண்டுபிடிப்போடு ஐரோப்பிய வர்த்தக காலனித்துவமானது, ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க, அவுஸ்ரேலிய கண்டங்களுக்கு விரிவுபடத் தொடங்கியது.

## பறங்கி மார்க்கம்

வர்த்தக நலன்களின் விரிவாக்கத்தை நோக்காகக்கொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகளில் வர்த்தகர்களின் பாதுகாப்பு நலனுக்காகக் கோட்டைகள் கட்டப்பட்டு, சிறிய குடியேற்றத்தில் உள்ள மக்களின் ஆன்மீக நலன்களைப் பேணுவதற்கென, கூடவே வந்த கிறிஸ்தவ மதக்குருக்கள், கிறிஸ்தவ நம்பிக்கையைப் பரப்புவதில் ஈடுபடுத்தப்பட்டனர். தொடக்கத்தில் கடலாதிக்கத்தைப் பேணிய போர்த்துக்கேயரும் அவர்களைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்து நாட்டினரும், தல சமூகத்துடன் மண உறவில் கலந்து "பறங்கி இனம" என்ற புதிய சமூகக் குழுமத்தை உருவாக்கினார்கள். கிறிஸ்தவம் ஐரோப்பியரால் கொண்டுவரப்பட்டதால், பறங்கி மார்க்கம என அழைக்கப்பட்டது.

## காலனித்துவ ஆட்சியின் ஊடுருவல்

மூலப்பொருட்களின் தேவைக்கும், உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலுக்கும், ஆசிய, அமெரிக்க, ஆபிரிக்கக் கண்டங்களில் புதிய நாடுகளின் கண்டுபிடிப்பு வழிசெய்தது முதன்முதலில் வர்த்தக மேம்பாட்டையும் பரவலாக்கத்தையும் அடிப்படை நோக்காகக் கொண்ட ஐரோப்பிய நாடுகளின் விஸ்தரிபபானது, இறுதியில், புதிய நாடுகளின் சமூகத் தளத்தில் அரசியல், மத, பண்பாட்டு நலன்களின் ஊடுருவலுக்கு வழிவகுத்தது. தமது வர்த்தக நலன்களுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளில் நிலவிய குழப்பமிக்க அரசியல், சமூக, மத பண்பாட்டு நிலமைகள், அவர்களது ஆட்சியை வலுப்படுத்தவும், விரிவாக்கவும் சாதகமான சூழலை உருவாக்கியது. இவ்வரலாற்றுச் சூழலைப்பற்றி பேராசிரியர் ம . செ. இரபிசிங் "தமிழ் உரைநடையும், கிறிஸ்தவர் பங்களிப்பும்" என்ற தலைப்பிலான தனது நூலில் கீழ்கண்டவாறு குறிப்பிடுவதை இங்கு நோக்கலாம்.

"ஐரோப்பியர் வருகையின்போது, தமிழகத்தில் ஒரு சுமூகமான சூழலில்லை. அரசியல் குழப்பங்கள், சமயச்சண்டைகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகளின் வாயிலாக ஏற்பட்ட சுரண்டல்கள் என்று பல்வேறு வகையான சிக்கல்கள் மலிந்திருந்தன. இவை வணிகம் செய்வதற்கு வந்த ஐரோப்பியர், அரசியலில் நுழைந்து ஆட்சி செலுத்துவதற்கும், தங்கள் மதத்தைப் பரப்புவதற்கும் சாதகமான ஒரு சூழலை உருவாக்கின"

*(பேராசிரியர் ம. செ. இரபிசிங் - 2005)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலக் கல்வி பெற்ற மேட்டுக்குடி

காலனித்துவ நிறுவனங்களுக்குத் தேவையான, ஆங்கிலக்கல்வி பெற்ற, "உயர் மேட்டுக்குடியை உருவாக்கும் கல்வி முறை" அறிமுகம் செய்யப்பட்டது. யாவருக்கும் கல்வி என்ற இலட்சியத்துடன், தமது மதப் பரம்பலுக்கேற்ற கல்வியமைப்புக்களை, மறைப் பணியாளர்கள் அவ்வப்போது கட்டியெழுப்பினர். ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தாரால் மட்டும் கட்டுப்படுத்தப்பட்ட அறிவுப் புலமானது, மேற்கத்தைய கல்விமுறையான பாடசாலை அமைப்பு முறையால், புதிய அறிவுபெற்ற வகுப்பினரை உருவாக்கியது. இதனால் காலனித்துவ நாடுகளில், அரச விசுவாசமிக்கநிலையில், மேற்கத்தைய கருத்துகளையும், உற்பத்திகளையும் கண்மூடி வரவேற்கும் ஒரு புதிய சமூகக்குழாம் உருவானது "இக்காலகட்டத்தில் மிஷனறிகளின் பிரச்சாரத்தால் பாதிக்கப்பட்டவர்களும், மேலைக் கருத்துக்களின் ஆழமான பாதிப்பிற்குள்ளானவர்களும் கிறிஸ்தவத்தை தழுவி வந்தார்கள்" *(தனஞ்செய்சிர் - 2000)*

## அந்நியமான கிறிஸ்தவம்

ஐரோப்பிய இனச்சிறப்புவாதமானது, மறைமுகநோக்கையே மறைப்பணியில் உருவாக்கியது. இங்கு முதன்முதலாக வந்த பல மறைபரப்பு பணியாளர்கள் "இம்மக்கள் நாகரீகம் அற்ற காட்டுபிராண்டிகள், எனவே இவர்களை அஞ்ஞான மார்க்கத்திலிருந்து உண்மை வேதத்துக்கு மாற்றவேண்டும்" எனும் எண்ணத்தில் தமது மறையைப் பரப்பும் வேலையைத் தொடங்கினார்கள். இவர்கள் உள்ளூர் மக்களின் மொழியைக் கற்று, தமது பணியைத் தொடர விரும்பினர். உள்ளூர் மக்களைப் பற்றியும், பண்பாடு பற்றியும் சிறப்பாக, மதக் கோட்பாடுகள் பற்றியும் எதிர்மறையான கருத்தாக்கமே மேலோங்கியிருந்தது. கிறிஸ்தவம் காலனித்துவ அம்சங்களை, ஐரோப்பிய பண்பாட்டுப் பின்புலங்களை, மொழித்தன்மையைக் கொண்டிருந்ததால், மக்கள் மத்தியிலிருந்து அந்நிய மயமாக்கப்பட்டதை அவதானிக்கலாம். இதனால் கிறித்தவம் காலனித்துவ மதம் என்ற பார்வை மிதப்புப் பெற்றது.

## மறைப்பணியாளரும் ஆய்வுப் பணியும்

மக்களின் மொழிநடையை ஆழமாகக் கற்கத் தொடங்கவே, மக்களின் அறிவுப்புலம், மொழியில் இலக்கணப்பூர்வீகம், இலக்கியச்செழுமை, மெய்யியல் அறப் பாரம்பரியம், ஆகிய பல அம்சங்களும், இம்மறைப்பணியாளர்களைக் கவரத் தொடங்கியது. ஜீ.யூ.போப் என்ற பாதிரியார், குறிப்பிடத்தக்க தமிழ் அறிஞர் ஆவார். இவர் தனது கல்லறையில் தமிழ் மாணவன் என்றே பதிக்க அறிவுறுத்தினார். சிலர் தமது ஐரோப்பிய நுண்ணறிவை இங்கு பரவலாக்கினார்கள். கிறித்தவ அறிஞர்களின் இலக்கணப்பணி எனும் நூலில், முனைவர் செ.வை.சண்முகம் குறிப்பிட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

".......கிறித்தவப் பாதிரிமார்கள், மக்களிடையே, கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காகத் தாங்கள் சென்ற பகுதிகளில் வழங்கும் மொழியை முதலில் கற்றுக்கொண்டு, சமயப்பணியோடு, மொழியாராய்ச்சியிலும் ஈடுபட்டார்கள். இந்த சமயத்தில் தங்கள் நாட்டில் பழக்கப்பட்ட தொழினுட்பத்தையும் (அறிவியலையும்) பயன்படுத்தியமையால், இவர்கள் மொழிப்பணியைப் பாராட்டும்படியாக அமைந்துவிட்டது. அந்த மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது. *(முனைவர் செ.வை.சண்முகம் - 1993)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனச்சிறப்புவாதத்திலிருந்து உரையாடலுக்கு

மொழிபெயர்ப்புக்கள் ஊடாக, மேற்கத்தேய அறிவுப்புலங்கள் பெற்றுக்கொண்ட இந்திய ஞான, ஆன்மீகச் செல்வங்கள் உருவாக்கிய எதிர்வினைகள், சமயங்களுக்கிடையிலான உரையாடலை உருவாக்கியது. இதனால் பல ஐரோப்பிய, அமெரிக்கப் பல்கலைக்கழகங் களில் இந்தியவியல்துறை முனைப்புப்பெற்றது. ஏதிர்மறையான அணுகுமுறையிலிருந்து மறைப்பணியின் மாற்றமும், வரலாற்று ரீதியில் காலணித்துவ நாடுகளின் விடுதலையும் கிறித்தவத்தின் பண்பாட்டு மயமாக்கலை வலியுறுத்தியது.

1947இல் இந்தியா விடுதலையடைந்தபோது, மேற்கத்தேய மறைப்பணியாளர்களுடன் வந்த கிறித்தவர், தமது மேற்கத்தேய அம்சங்களைக் குறிப்பாக, சபைப்பிரிவுகளை இழக்கவேண்டும் என்ற கருத்து மேம்படத் தொடங்கியது. இதன் காரணமாக அங்கிலிக்கன், மெதடிஸ்த சபையினரோடும் மற்றும் பல சபைகள் 1947 இல் தென்னிந்தியத் திருச்சபையாகவும், 1970 வட இந்தியத் திருச்சபை, பாகிஸ்தான் சீர்திருத்தத் திருச்சபை எனப் பல ஒன்றிப்பு முயற்சிகள் உருவெடுத்தன. பல மறைப்பணியாளர்கள் ஐரோப்பிய இனச்சிறப்பு வாதத்திலிருந்து புதிய அணுகுமுறையான உரையாடல் போக்கின் அவசியத்தை இங்குள்ள கல்விகற்ற சமூகம் வலியுறுத்தத்தொடங்கியது.

## காலணித்துவ மதத்திலிருந்து மக்களின் மதத்துக்கு..

1875இல் அங்கிலிக்கன் மதகுருவான வங்காள தேசப் பிராமண குலத்தைச் சேர்ந்த கிருஷ்ண மோகன் பெனராஜா இரத்தப்பலி பற்றி ஏற்கனவே இந்துமக்களுக்குத் தெரியுமாதலால் இந்துமதம் கிறித்தவத்தைச் சுட்டிக்காட்டியது. எனவே இந்துமதத்தின் ஆரிய வம்சத்தினர் தமது பூர்வீகத்தை விட்டுவிடாது கிறித்தவத்தை ஏற்றுக்கொள்வதில் தடையிருக்கமாட்டாது என விவாதித்தார். ரோமாண்டோ பனிக்கர் எனும் அறிஞர் வேதகால இந்துமதத்தை, கிறித்தவத்தின் பொருத்தப்பாடுகளைக் குறித்து ஆய்வுசெய்தார். இவரது ***"இந்து சமயத்தில் அறியப்படாத கிறித்து" (Unknown Christ in Hinduism)*** என்ற ஆங்கில நூல், இக்கருத்துக்களை ஆழமாக முன்வைத்தது. இதேபோல் மைசூர் பகுதிகளில் பணியாற்றிய அபே டுபீஸ் இதே கருத்துக்களையே முன்வைத்தார்.

## மறைப்பணியாளரும் தமிழ் இந்துப் பாரம்பரியமும்

ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் மொழி ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்ட வேளையில், புதிய இலக்கிய, அறிவியல் செல்நெறிகளை அறிமுகப்படுத்தினார்கள். பழம் அருஞ்சுவடிகளை பாதுகாத்து, ஐரோப்பிய மொழிகளில் அவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில், மொழிபெயர்ப்புப் பணியிலும் ஈடுபட்டனர். இதன் பயனாக, ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் இந்தியவியல்துறை உருவாக்கப்பட்டது. இதனால் சிறப்பாக ஐரோப்பிய அறிஞர்கள் மத்தியில் காலனித்துவ மக்களின் பண்பாட்டுப் பின்னணியின் பழமை, மற்றும் செழுமை பற்றிய பார்வை உருவாகத்தொடங்கியது.

## தமிழ் வரலாற்றில் சமய ஊடாட்டங்கள்

தமிழைப் பொறுத்தவரை சமண, பௌத்த, சைவ, வைணவ, இஸ்லாமிய, கிறிஸ்தவம் என்ற வேறுபாடு கிடையாது. இச்சமயங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டுத் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தன. "பாதிரிமார்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காகவே, இந்த நாட்டுமொழியைப் பயில வேண்டிய இன்றியமையாத நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவே, அதனைத் தக்கமுறையில் கற்றனர். நூல்களை, மதக்கருத்துக்களை இந்தநாட்டு மொழியில் உரைநடையில் எழுதினர்." என ஆ.ச. பிச்சைமுத்து கருத்துத் தெரிவிக்கிறார். *(ஆ.ச.பிச்சைமுதது - 1976).* இந்த உள்வாங்கலைப், பலர் மதப் பரம்பலாகக் கருதியபோதிலும், இவ்வூடாட்டமானது, தமிழ் மொழியில் பாரிய தாக்கத்தை உருவாக் கியது. கிறித்தவ மதத்தின் வருகையால் உருவான இத்தாக்கம், தமிழ் மொழிப்பரப்பை, பண்பாட்டுத் தளங்களை செழுமைப்படுத்தியது. பல மத ஊடாட்டத்தால் தமிழ் செழுமை யுற்றதைக் காணலாம்.

## சைவ வைணவ இலக்கியங்களின் தாக்கம்

கிறித்தவ மதப் பரம்பலுக்காகவே தமிழ் மொழியைக் கற்ற போதிலும், கருத்து ஊடாட்டம் நிகழ்வுற்றதை, சமூகவியல் தன்மையோடு அவதானிக்க வேண்டும். மொழியை, வெறும் உரையாடல் தளம் எனக் கருதும் பண்பை விடுத்து, மக்களின் பண்பாட்டு அடித்தளத்தின் பூர்வீகத்தன்மையைவெளிப்படுத்துகின்றது என்பது இன்றைய மொழியியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். **மொழி வழி உலகம்** என்பது அமைப்பியல் வாதத்திற்கு உதவியது என முனைவர் முத்துமோகன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

வரலாற்று ஓட்டத்தின் பின் உருவான தமிழ் கிறித்தவ இலக்கியங்களில் இதன் தாக்கத்தைக் குறிப்பிடலாம். "சைவ வைணவப் பக்தி இலக்கியங்களில் காணப்படும் பல்வேறு மரபு இலக்கிய வகைகள், இலக்கிய மரபுகள், சொற்கள், தொடர்கள், கருத்துக்கள், உவமை, உருவகங்கள், கற்பனைகள், காட்சிகள் ஆகிய பலவும் தமிழ் கிறித்தவ இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன." *(பேராசிரியர் முனைவர் ப.ச.ஏசுதாசன்-1991).* முன்னைய இலக்கியங்களின் தாக்கத்தைப் பின்னைய இலக்கியங்களில் அவதானிக் கலாம். இதனால் உருவான கருத்துப் பரிமாற்றம், சமூகவியல் ரீதியில், பொதுப்பண்பையும், அரசியல் தளத்தில் மாற்றங்களையும், பொருளாதாரத்தில் முரண்பாடுகளுள்ள இயக்கவியல் தன்மையையும், மதப்பண்பாட்டுத் தளத்தில் உருவாக்கியது. இங்கு தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் தமிழைப் *பக்தி மொழி*யெனக் குறிப்பிட்டுள்ளதை அவதானிக்கலாம்.

## புதிய பார்வை புதிய அணுகுமுறை

இந்தியாவில் இராமக்கிருஷ்ண பரமாச்சாரியாரின், எல்லா மதங்களின் இசைவாக்கம் *(Harmony of all Religions)* என்ற போதனை, கிறிஸ்தவமானது, இந்தியாவில் புதிய *காலனித்துவ மதம* என்ற தன்மையிலிருந்து மக்கள் மத்தியில் புதிய பார்வையை பெறத் தொடங்கியது. இவ்வரலாற்றுச் சூழமைவில் மறைப்பணியை மதங்களுக்கிடையிலான உரையாடல் தன்மையாக மாற்றிக்கொண்டனர். இங்கு வாழ்ந்த மக்களினது பொதுமைப்பண்பு, உயர்வான மதக்கோட்பாடுகளின் செழிப்புமிக்க தத்துவப் பின்னணி, சிறப்புமிக்க மொழி என்பவற்றை உணர்ந்த மறைப்பணியாளர்கள், எதிர்மறைத் தன்மையான பார்வையிலிருந்து தம்மை மாற்றிக்கொண்டனர்.

பல கிறிஸ்தவ மறைப்பணியாளர்கள் மத்தியில் இந்து மதச் சடங்குகள், அமைப்புகள், ஆசாரங்கள் பற்றி எதிர்மறையான சிந்தனைப் போக்கு இருந்தபோதிலும், புதிய மேற்கத்தேய, கீழைத்தேய மதப் பண்பாட்டு ஊடாட்டங்கள் புதிய எழுச்சியை உருவாக் கியது. பல இந்து மதப் பிரிவுகள் புத்துயிர்ப்பு பெற்று பலரைக் கவரத் தொடங்கியது சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சமய உரையும், மகாத்மா காந்தியின் அகிம்மைப் போராட்டமும், பல ஐரோப்பியர்கள் மத்தியில் இந்து மதம் நோக்கியும், ஆச்சிரமங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபற்றியும் புதிய கவர்ச்சி உருவானது. இந்தியா வந்து கேரளாவில் குருசிமலை ஆச்சிரமத்தைத் தொடங்கிய, இங்கிலாந்து நாட்டின் தூய பெனடிக்ற் சபைத் துறவியான பீட் கிறிபித் அடிகள் *(Bede Griffiths) Christ in India* (இந்தியாவின் கிறித்து) என்னும் ஆங்கில நூலின் அறிமுகவுரையில் தனது மனப்பதிவைக் கீழ்கண்டவாறு கூறுகிறார். "இதற்குப் பின்பு காந்தியை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். இருப்பினும் அவரைத் தவறவிட்டது மிகவும் துயரமாகும். 1931இல் வட்டமேசை மாநாட்டுக்கு, இலண்டன் வந்தவேளை, அவரது இடத்திலிருந்து அவ்வளவு வெகு தூரமில்லாத பிரத்தல் கிறின் என்னும் இடத்தில் தங்கியிருந்தேன். அந்த நேரத்தில் மிகவும் ஆழமான, பின்னர் என்னைத் துறவி நிலைக்கு இட்டுச் சென்ற ஆன்மீக ஈடுபாட்டுக்கு உள்ளாயிருந்தேன் வாழ்வுப்பற்றிய காந்தியின் மனப்பதிவு, ஆழமான இலட்சியமாக எனது மனதில் உறுதியாக அமைந்தது. காந்தியின் வாழ்க்கையில் அடி ஆதாரமான ஆன்மீக வரையறைகளை கொண்ட தர்மபாதம், பகவத்கீதை போன்றவற்றை அறிந்து கொண்டேன். *(Bede Griffiths – 1978)*

## இந்திய கிறிஸ்தவ ஆன்மீக மரபுகளின் ஊடாட்டம்

கிறித்தவம் இந்திய மண்ணில் வேரூன்றியபோது, இரு வரலாற்று ஆன்மீக மரபுகளும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டன. ஏற்கனவே தாம் கைக்கொண்ட கிறித்தவ ஆன்மீகம் இம்மண்ணின் ஆன்மீக செல்வத்தின் எதிர்வினைகளைக் கிறித்தவ ஆன்மீக மரபில் புதிய செல்நெறியை உருவாக்கியது. ஆன்மீகத்தைத் தழுவியமைத்தலுக்குப் புதிதாகத் தோற்றம் பெற்ற கிறிஸ்தவ இலக்கியங்கள் வழிசெய்தன. ஏற்கனவே குறிப்பிட்டது போல், கிறித்தவ இலக்கியத்தில் சைவ, வைணவ, இலக்கியங்களின் தாக்கம் தமது இலக்கியங்கள் குறிப்பாக, பக்திப் பாசுரங்கள், ஆன்மீக நூல்கள், ஆன்மீகத் தழுவியமைக்கும் செல்நெறிக்கு உந்துசக்தியாக அமைந்தது. தமிழ் சமய படைப்பாளர்கள் படைப்புக்களில் சமயச் சார்புடைய சொற்கள் சொற்தொடர்கள் பலவற்றையும் பயன்படுத்தியுள்ளனர் அவை இறைநிலையைக் குறிக்கவும், மன உணர்வுகளைத் தோற்று விக்கவும் அருளப்பட்டிருக்கின்றன. சமயங்கள் அனைத்திற்கும் சொற்களும் சொற் தொடர்களும் பொதுவானவை.

## அனுபூதி - மொழி, இன, மனித வரையறைகளுக்கு அப்பாற்பட்டது.

இறை அனுபூதி தரும் எதிர்வினையை மனித வரையறைகளுக்கு உட்பட்ட மொழிகளால் வர்ணிக்கமுடியாது. எல்லா மொழிகளிலும், பக்தி இலக்கியங்களில் இந்தப்பார்வை இருந்தது. குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தில் சித்தர்களின் பாடல்களில் குறியீட்டு மொழிகளால் சொல்லப்பட்டதாக, இலக்கியப்பார்வை இருந்தது. சமயம், இனம், மொழி, சாதி, என்ற மனித வரையறைகளுக்கு அப்பால், அனுபூதி மட்டத்தில் இணைந்த பொழுது, ஆச்சிரமம் என்ற ஆன்மீகத் தளம் புதிய அர்த்தத்தைப் பெற்றது. இதனால் ஆச்சிரமங்கள் எந்த சமய நிறுவன அமைப்புகளுக்குள்ளும் கட்டுப்படாத அமைப்பாக மாறியது. ஆனால் இன்று ஆச்சிரமம் என்பது சந்நியாசியின் வழிகாட்டலில் தனிப்பட்டவர்களின் ஆன்மீக எழுச்சிக்குச் சர்வதேச மட்ட ரீதியான சமூகம் என்றே பொருள்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. *அ.கா.பெருமாள், வேதசாட்சி தேவசகாயம்பிள்ளை வரலாறு, சென்னை. 2004. ப.17.*
2. *மயிலை சீனி வெங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், சென்னை. கழக வெளியீடு. 2000. ப.3-4*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொன் விழா மலர் 2008', கிறிஸ்த சேவ ஆச்சிரமம்,
கிரான்


3. பேராசிரியர் ம.செ.இரபிசிங், தமிழ் உரைநடையும், கிறித்தவர் பங்களிப்பும், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2005, ப.5.
4. தமிழில், வெ.கோவிந்தசாமி, தனஞ்செய்கீர், மகாத்மா ஜோதிராவ் புலே இந்திய சமூகப்புரட்சியின் தந்தை, கோவை, விடியல் பதிப்பகமத், □ 2000.
5. முனைவர் செ.வை.சண்முகம், கிறித்தவ அறிஞர்களின் இலக்கணப்பணி, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - 1993.
6. ஆ.ச.பிச்சைமுத்து, படைப்பிலக்கியம், சேலம், தேன்தமிழ் பதிப்பகம், 1976, ப.40
7. பேராசிரியர் முனைவர் ப.ச.ஏசுதாசன், தமிழ் கிறித்தவ இலக்கியத்தின் சைவ வைணவ இலக்கியத் தாக்கம், திருச்சிராப்பள்ளி, ஹவுசிங் யுனிட், உறையூ ர், 1991, ப.3.
8. *Bede Giffith, Christ in India, New York, Charles Scriber's Son, 1966, p.5.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பந்தய ஓட்ட விசுவாச வீரன் சாம் அண்ணன்

செல்வி. டி. கே. ஜெயவீரரெட்ணம், கிரான்

சின்னண்ணனும், பெரியண்ணனும் உயிருடன் இருந்த காலத்தில் சாம் அண்ணன் இவர்களின் செல்லப்பிள்ளை. அவர்கள் இருவரும் இவரை **"சாம்"** என்றுதான் அழைப்பார்கள்.

சாம் அண்ணன் மிகவும் கட்டுப்பாடானவர். இவர்கள் இருவருக்குமே சாம் அண்ணன் என்றால் பயம் தான். நான் சிறுபிள்ளையாக இருந்தபோது, எனது பெற்றோர், சகோதரிகளுடன், யாழ். மருதனார்மட கிறிஸ்த சேவ ஆச்சிரமத்திற்குச் சென்றிருந்தேன். நாங்கள் அங்கு சென்ற நேரம் இரவாகிவிட்டது. பெரியண்ணனும், சின்னண்ணனும்தான் அங்கிருந்தனர். சாம் அண்ணன் அங்கிருக்கவில்லை. அவர்களுடன் சில நேரம் உரையாடிவிட்டு, பின்னர் ஆலயத்திற்குச் சென்று ஜெபம் செய்துவிட்டுப் புறப்பட்ட வேளையில், பெரியண்ணனும் சின்னண்ணனும் எங்களுக்கு ஆச்சிரமத்தைச் சுற்றிக் காட்டினார்கள். இவர்கள் மூவருக்கும் தனித் தனி இல்லங்கள் அமைக்கப்பட்டிருந் தன. அப்போது சாம் அண்ணனின் இல்லத்திற்குக் கூட்டிப் போய் சின்னண்ணன் மின்சூழ் *(Torch)* அடித்துக் காட்டினார். சின்னண்ணன் நகைச்சுவையாகக் கதைப்பவர். சின்னண்ணன் சொன்னார் "*இது தான் சாம் அண்ணனின் இல்லம். இப்போ அவர் இல்லை. எனக்கே இங்கு வந்து இருக்கப் பயம். ஒரு கதிரை கூட அசையக் கூடாது, ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். அவ்வளவு கண்டிப்பானவர் தான் சாம் அண்ணன்*". அவரது வீட்டில் அழகான ரோஜாச் செடிகளையும் காணக்கூடியதாய் இருந்தது.

சின்னண்ணன், பெரியண்ணனின் மறைவின் பின்னர், சாம் அண்ணன், யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். ஆனால் அடிக்கடி கிரானிற்கு வந்து போவார். யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டே கிரானையும் நிர்வகித்தார். இங்கு பொறுப்பாகப் பலர் முன்வந்து உதவி செய்தனர். ஆச்சிரமப் பரிபாலன சபைக் குழுவினர், மெதடிஸ்த, அங்கிலிக்கன் சபைக் குருமார், சாம் அண்ணனின் வழிகாட்டலில் கிரான் ஆச்சிரமத்தை பராமரித்து வந்தனர்.

சின்னண்ணன் பெரியண்ணனின் செல்லப்பிள்ளையாக செல்லமாக வாழ்ந்த சாம் அண்ணன், இவர்கள் இருவரது மறைவின் பின்னர், பல கஷ்டங்களையும், பொறுப்புகளையும். எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனாலும் அவர், தனது விசுவாசத்தில் தளர்ந்து விடவில்லை. தேவ பெலன் அவரை முற்றாக ஆட்கொண்டது 1980களின் பின்னர், எமது நாட்டில் இனக்கலவரங்களும், வன்முறைகளும் அதிகரித்துவிட்டன. உயிர் இழப்புகள், உடமை இழப்புகள், அகதி வாழ்வு என, இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை. சாம் அண்ணன் தயங்காது, தனது சேவையை செய்தார்.

யாழ்-மட்டுநகர் தரைப்போக்குவரத்துப் பாதை மூடப்பட்ட காலங்களில், சாம் அண்ணன் எவ்வளவோ சிரமங்களின் மத்தியில் கிரானுக்கு வந்து போவார். ஒவ்வொரு தடவை பிரயாணமும் பயங்கரமான அனுபவங்களாகவே இருந்தன. ஆனால் எந்த ஒரு தடவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம் அண்ணன் களைத்ததும் இல்லை. இனிமேல் வரமாட்டேன் என்று சொன்னதும் இல்லை. சாம் அண்ணன் ஒரு நீரழிவு நோயாளி. தனக்குத் தானே இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்வார். நீரிழிவு நோய் காரணமாக, இவருக்குக் காலில் வீக்கமும், விறைப்பும் ஏற்பட்டுவிட்டது. ஒரு தடவை கிளாலிப் பாதையால் இரவு வேளையில் வள்ளத்தில் வந்தபோது, கால் தூக்க முடியாமல் போய் விட்டதாம். கூட வந்தவர்கள் தான், தனது காலைத் தூக்கி வைத்து விட்டார்கள் என்று கூறினார்.

1990ம் ஆண்டு இனக் கலவர காலத்தில், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சில நாட்கள் இருந்துவிட்டு, ஒரு வாரத்தின்பின், பயங்கரங்களின் மத்தியிலும் மீண்டும் ஆச்சிரமம் வந்தபோது, அங்கு எதுவுமே முழுமையாக இருக்கவில்லை. நாங்கள் மீண்டு வந்து சேரும்போது இருட்டாகிவிட்டது. முதலில் ஆலய வளவில் சாம் அண்ணன் இறைவனுக்கு நன்றி கூறி ஜெபித்தார். எவருக்குமே உணவில்லாத நிலையில் நாம் தங்கியிருந்த அடைக்கலகிரி மண்டபத்திலிருந்த மேசையொன்றைப் பார்த்தபோது, அதன் மேல் ஒரு கிலோ கிராம் லக்ஸ்பிறே பால்மா பக்கட் இருக்கக் கண்டோம். அது நாங்கள் எவருமே கொண்டு வரவில்லை. எல்லோருக்கும் ஆச்சரியம். அது இறைவனின் செயல் தான் என்று அதை எடுத்து மறுநாள் காலை அனைவரும் தேநீர் அருந்தினோம்.

ஆலயத்தை சென்று பார்த்தார் சாம் அண்ணன். அங்கும் சில பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. சாம் அண்ணன் மனம் தளரவில்லை. அண்மையில் உள்ள வீடுகளுக்குச் சென்று, அங்கு என்ன நடந்தது என்று பார்த்தார். அனைவரும் அகதிகள் தான். வீடுகள் எல்லாம் உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளன. எல்லோரும் ஆச்சிரமத்தில் தான் தஞ்சமடைந்தனர். சாம் அண்ணனுக்குச் சுமை அதிகரிக்கத் தொடங்கியது. அகதிகளைக் கவனிப்பதும், அவர்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதிலுமே, அவரது நேரம் முடிந்து விடும். அந்த நேரத்தில் வாகனப் போக்குவரத்துகள் இல்லை. துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களும் மட்டும்தான் இருந்தன. ஏறத்தாள மூன்று மாதங்களின் பின்னரே, போக்குவரத்துச் சேவை பேருந்துக்கள் சேவையில் ஈடுபடத் தொடங்கின. அப்போது மட்டக்களப்பிலும், கிரானிலும்தான் மக்களைக் காணமுடியும் வழிதோறும் இராணுவச் சோதனைச் சாவடிகள் காணப்பட்டன. அந்த வேளையில், தற்போதுள்ளதுபோல், அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகளவில் இருக்கவில்லை. எனவே அகதிகளுக்கான நிவாரணப்பணிகளும் மந்தகதியிலேயே நடைபெற்றன. இந்த வேளையில் பொருட்பங்கீட்டில் மக்களிடையே ஏற்பட்ட மனக் கசப்புக்களையும், பிணக்குகளையும் தீர்ப்பதில் சாம் அண்ணன் களைத்தே விட்டார். இம்முறை சாம் அண்ணன் நீண்ட காலம் கிரானிலே தங்கிவிட்டார். சாம் அண்ணன் யாழப்பாணம் போகப்போகின்றார் என்றால் எல்லோரும் அவரிடம் சென்று, *போகவேண்டாம் இராணுவம் வந்தால் யார் கதைப்பது? நாங்கள் என்ன செய்வது* என்று கேட்டனர். எனவே சாம் அண்ணன், ஏறத்தாழ எட்டு மாதங்கள் கிரானிலேயே தங்கினார்.

1990இன் பின்னர், சாம் அண்ணன் சற்று அதிகமாக நோயாளியாகிவிட்டார். ஆனாலும் அவரது சிந்தனைகள் பல கோணங்களில் அதிகரித்தன. அதாவது "மருதனார்மடம், மற்றும் கிரான் ஆச்சிரம ஆலயங்களை புனருத்தானம் செய்வது என்பதாகும்" இதற்காக, சாம் அண்ணன் எவரிடமும் நிதி கேட்டதேயில்லை. ஆனால் அவர் தனது எண்ணத்தைக் கூறுவார். நாங்கள் *இதற்கு எவ்வளவு பணம் செலவாகும* என்று கேட்டால், அவர் அதற்கு *கடவுள் தருவார்* என்று கூறுவார். உண்மையாகவே அவரது விசுவாச வாழ்வில் ஜெபத்தின் மூலம் பல செயல்களை நிறைவேற்றி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் 1968 ஆம் செப்டம்பர் மீ 3 உ செவ்வாய்க்கிழமை

## கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்

# நோக்கமும் தொண்டும்

பேட்டி கண்டவர்:-
ஜோன் எஸ். பேரின்பநாயகம்

நான்: உங்களுடைய ஆச்சிரமத்தின் முக்கிய குறிக்கோள் யாது?

சின்னண்ணன்: எமது கிறிஸ்த சேவை ஆச்சிரமத்தின் நோக்கம், கிறிஸ்தவ வணக்கமும், சேவை, ஊழியம், இவைகளுக்காக பிரத்தியேகப் படுத்தப்பட்ட ஒரு சகோதரத்துவ கூட்டமாக வாழ்வதே யாகும்.

நான்: மட்டக்களப்பில் கிறிஸ்த சேவை ஆச்சிரமத்தை நிறுவுவதற்குக் காரணமென்ன?

சின்: மட்டக்களப்பிலே ஒரு ஆச்சிரமம் நிறுவும் நோக்கம் எங்களுக்கு இருந்ததில்லை. கிழக்குமாகாணத்திலுள்ள காடுகளில் வசிக்கும் ஏழை ஜனங்கள் மத்தியில் சுவிசேஷ பணி, வைத்தியப் பணி, சமூகப்பணி செய்யும் பொருட்டாகவே நாங்கள் சிலர் சில வருஷங்களாகக் காடுகளில் அலைந்து திரிந்தோம். சில வருடங்களின் பின் மட்டக்களப்பு பகுதியிலுள்ள கிறிஸ்தவ மக்கள் ஒரு கிறிஸ்தவ ஆச்சிரமத்தின் தேவையைப் பலமாக உணர்ந்தமையாலும் கிரானிலுள்ள கிறிஸ்தவ மக்களின் வேண்டுகோளுக்கிணங்கியே கிரானில் இந்த ஆச்சிரமத்தைத் தொடங்கினோம்.

நான்: ஆச்சிரமங்களை நடத்துவதற்கு உங்களுக்கு பண வசதி எங்கிருந்து வருகிறது?

சின்: எங்கள் ஆச்சிரமத்தின் மகுட வாக்கியம்:- "இறைவனிடமிருந்து உன்னதமானவற்றை எதிர் பார், இறைவனுக்காக உன்னதமானவற்றை எத்தனி" எங்களுக்கு எங்கிருந்தும் ஒரு குறிப்பிட்ட வருவாயில்லை. எவரிடமிருந்தும் நாங்கள் பொருளுதவி கேட்கவும் கூடாது. கடவுளுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் கடவுள் நமது தேவைகளை யாவைக் கொண்டாவது பூர்த்தி செய்வார். எங்கள் ஆச்சிரமத்திலுள்ள கட்டிடங்களோ மற்றும் நாங்கள் செய்யும் எந்தப் பணியோ, இந்த நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. அது மாத்திரமல்ல, எங்கள் ஜீவனோபாயத்திற்காக நாங்கள் வேலை செய்யவேண்டுமென்பது எங்கள் ஆச்சிரமக் கோட்பாடு. இதற்கிணங்க ஆச்சிரமத்திற்குள்ள 8 ஏக்கர் நெல் வயலை நாங்கள் செய்கைபண்ணுகின்றோம். இதிலிருந்து கிடைக்கும் தானியம் எங்கள் தேவையைப் பூர்த்தி செய்யப் போதியதாகும்.

நான்: உங்கள் ஆச்சிரம ஸ்தாபகர்களும், [illegible] அவர்களைப் பற்றிக் கூறுவீர்களா?

சின்: அவர் இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு [illegible] உலகிலே மக்[illegible] வருத்[illegible] சமய வரம்பு, ஜாதி வரம்பு, தேச வரம்பு, மொழி வரம்பு முதலியவைகளைக் கடந்து அவர் இறைவனுடைய உண்மையையும் [illegible] நிலை, அநியாயம், அறியாமை, அகங்காரம் இருந்தாலும் இறைவன் இன்னும் [illegible] நேசிக்கிறார். ஆதலின் மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தின் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே என்ற நம்பிக்கையை தம்வாழ்க்கையில் சாதித்துக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் சாதனை நெறி தவறியவர்களையும் பெற்றோராலும் மற்றோர்களாலும் சீர்கெட்டவர்கள் என்று புறக்கணிக்கப்பட்டவர்களையும் தம் அன்பினாலும், நம்பினாலும் பிரார்த்தனையினாலும் சீர்படுத்தும் சீரிய தன்மையுடையவர் "பெரியண்ணன்." அவர் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் கடவுளோத்தன் நண்பனாகவும், உதவியாளராகவும் கருதி கடமையாற்றும் ஒரு பண்புண்டு.

## வாலிபர் பங்கு

நான்: உங்கள் ஆச்சிரமத்தில் வாலிபர்களின் பங்கு எவ்விதம் உதவுகிறது.

சின்னண்ணன்: வாலிபர்கள் அநேகர் இங்கு வருகின்றனர். எங்கள் நாளாந்த கடமைகளான ஜெபதியானங்கள், வேதப்படிப்பில், பங்குகொள்கிறார்கள். இதுதவிர தோட்டவேலை, வயல்வேலை, சமையல், வளவு சுத்தம் செய்தல், வியாதியஸ்தர் பராமரிப்பு முதலிய பணிகளிலும் உற்சாகமாக பங்கு எடுக்கிறார்கள். எங்கள் ஆச்சிரம வழிபாட்டில் இசைக்கருவிகளை மீட்டுவதிலும், கீதம் பாடுவதிலும் மிகவும் உற்சாகமுடையவர்களாக இருக்கிறார்கள். வெவ்வேறு கலாசாலையில் கற்கும் வாலிபர் ஆச்சிரமத்திலே தங்கியிருந்து, ஆச்சிரம ஒழுங்குகளுக்கமைந்து சேவிக்கிறார்கள். எங்களோடு



அமைதியான சூழலில் அமைவு பெற்றிருக்கும் கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் நிறுவப்பட்டிருக்கும் மணிக்கோபுரம். காலஞ்சென்ற மட்டக்களப்பு திரு. யோசவ் பிள்ளையின் நினைவாக இக்கோபுரம் நிறுவப்பட்டுள்ளது.

இருந்து வெளியே சென்ற வாலிபர்கள் ஆச்சிரம ஊழியத்தில் அன்பும் கரிசனையும் நன்றியும் உடையவர்களாக இருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது.

நான்:- மட்டக்களப்பு ஆச்சிரம வாழ்க்கையில் ஏற்பட்ட ஏதாவது மறக்கமுடியாத சம்பவம் உண்டா?

சின்:- என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் ஏராளமுண்டு. "நன்றல்லாததை அன்றே மறப்பது நன்று" என்ற அந்த நல்ல ஆலோசனைகளை மறக்க முடியாமல் இருப்பதே என் அநுபவம். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு தீய சம்பவங்களிலிருந்தும்கூட பெரிய நன்மைகள் பிறக்க கூடுமென்பது என்னுடைய அனுபவமாகும். இவ்வாச்சிரமம் தொடங்குவதற்கு சில வருடங்களின்முன் தற்போது அமைந்துள்ள ஆச்சிரமத்திற்கு முன்னாக இருக்கும் பிரதான வீதி வழியாக எனது துவிச்சக்கரத்தில் மாலை 5 மணியளவில் சென்று கொண்டிருந்தேன். எனது இருப்பிடத்தை அடைவதற்கு இன்னும் 12 மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். அப்போது நிறை நிலையின்றி தள்ளாடிக்கொண்டிருந்த ஒரு மதுவெறி காரர் என்னை தடுத்து நிறுத்தி அடே! சைக்கிளைவிட்டு மரியாதையாய் போய்விடு என்று கர்ஜித்தார். நான் எதுவும் பேசமுடியாத நிலையில் என் மனதில் இயேசுவே! இரட்சியும் என்று ஜெபித்துக்கொண்டிருந்தேன். அவ்வழியாக வந்து கொண்டிருந்த ஒருவர் எனக்காக அவ்வெறிகாரரிடம் மிகவும் வாதாடினார். அதிக நேரத்தின்பின் என் முதுகிலே அடித்து என் துவிச்சக்கரத்தை தந்து என்னை போகவிட்டான். அன்றிரவு முழுதும் இச்சம்பவம் என் சிந்தனை அடிமைப்படுத்தியது. பலமணிநேரம் தூக்கமின்றி ஜெபித்தேன். அன்று ஆகாரமும் இருக்கவில்லை. ஆகவே பசியாகவே தூங்கிவிட்டேன். அந்த தூக்கத்தில் நான் கண்ட கனவே இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் காண கிரான் ஆச்சிரமமாக அமைந்துள்ளது. அந்த கனவானது நான் வழி மறிக்கப்பட்ட இடத்துக்கு நேரே ஒரு உயர்ந்தெழுந்த சிலுவையும் வெள்ளுடை எண்ணமுடியாத ஒரு திரள் கூட்டம் குழுமியிருக்கக் கண்டேன். அவர்கள் பாடிய இசை இன்னும் என் இதயத்தில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. சிலகாலத்திற்குப்பின் கிரான் ஊரையே தாயகமாக கொண்ட ஆசிரியரொருவர் என்னிடம் வந்து நாங்கள் சில கிறிஸ்தவர்கள் தான் இக்கிராமத்திலிருக்கின்றோம் எங்களுக்கு இங்கு தொழுதுகொள்ள ஆலயம் இல்லை.

நீங்கள் எங்களூரிலே ஒரு [illegible] அங்கே ஆச்சிரமம் அமையும்கள் என்றார். என்கனவை நினைத்தேன். இக்கனவு நனவாகும் காலம் எப்போதோ என்று வாஞ்சையுடன் எதிர்பார்த்தேன். "அடுத்த முயன்றதும் ஆகுநாளின்றி எடுத்த கருமங்கள் ஆகா." ஆகவே அந்த நாள்வரும்வரை ஞாயிறு தோறும் கிரான் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஒரு ஆராதனையையும் விசேட நாட்களில் பஜனை, படக்காட்சி முதலியன நடாத்திவந்தாலும் 1958ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி இறைவன் தந்ததரிசனம் உன்னதமான உருப்பெற்று ஆச்சிரமமாக அமைந்தது. இதுபோன்ற மறக்க முடியாத பல சம்பவங்கள் உண்டு. அதை எழுதுவதானால் ஒரு நூலாகவே வெளியிடவேண்டும்.

"நான்:- உங்கள் மூவரின் பின் இந்த ஆச்சிரம ஊழியத்துக்கு தேவையான ஊழியக்காரர்வேண்டுமே.

சின்னா:- இப்படியான கேள்வியைப் பலர் கேட்கிறார்கள். ஆச்சிரம நண்பர்களுக்கெல்லாம் ஒன்றைத்தான் சொல்லுவேன். இறைவனது திருவுளத்தை அறிந்துகொள்வது மனிதனாகிய நமக்கு இலகுவான காரியமல்ல எனினும் அந்தந்தக் காலங்களில் தமது பணிக்காக வாய்த்த தொண்டர்களை எழுப்புவார் என்பதில் சந்தேகமில்லை. பல வருடங்களாக எங்களோடு வாலிபர் சிலர் இவ்வூழியத்தில் தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் சேவக மித்திரன், சேவ அபேட்சகன், சேவகன் என்ற மூன்று நிலைமைகளில் அனுபவிக்கப்பட வேண்டும். அதற்கு நான்கு வருடங்கள் ஆகும். இவர்கள் கீழ்ப்படிவு, வறுமை, கற்பு என்றும் மூன்று விரதங்களை தங்கள் வாழ்க்கை முழுவதும் அனுஷ்டிப்போமென வாக்களிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மீ 3 ஆ செவ்வாய்க்கிழமை

# கிரான் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

# வளர்ந்த வரலாறு

"ஆச்சிரமம்" எனும் சொல் "ஆச்ரம" என்னும் வடமொழிப் பதத்திலிருந்து பிறந்த சொல்லாகும். இச்சொல்லின் பொருள் "கவனிப்பு" என்பதே. ஒரு சொல்லின் முன் "அ" என்னும் குறுகிய ஒலிவரும் போது, அச்சொல்லின் இயல்பான பொருளை அவ்வொலி மாற்றுகிறது. ஆனால் "ஆச்சிரமம்" எனும் சொல்லில், "ஆ" எனும் ஒலி நீண்டுவருவதன் ஆன்மீக முயற்சிகள், தவச் செயல்கள் என்னும் கருத்துக்கள் நன்கு வலியுறுத்தப்படுகின்றன. எனவே ஆச்சிரமம் எனும் சொல் இந்தியாவில் பண்டுதொட்டுப் பிரமச்சரியம்-வானப்பிரஸ்தம்-கிருகஸ்தம்-சந்நியாசம் எனும் வாழ்க்கையின் நான்கு நிலைகளோடு தொடர்புடைய சொல்லாகவே இயங்கி வந்துள்ளது.

"ஆச்சிரம்" எனும் பதம் இந்நான்கு நிலைகளோடு சேர்த்துக் கூறப்படும்போது அந்நிலைகளின் பொருளையே குறிக்கும். முன்னைய காலத்தில் கிறிஸ்தவ ஆச்சிரமங்களே கிறிஸ்தசமயத்தைச் சுதேசமயமாக்குவதற்கு ஏற்ற கருவிகளாய் அமையுமென நன்கு உணரப்பட்டது. கிறிஸ்தவ சமைய அமைப்புக்கள், வைபவங்கள், வழக்கங்கள் என்பனவற்றைச் சுதேசமயமாக்க வேண்டுமென மக்களைத் தூண்டிய அவ்விழிப்புணர்ச்சி, இயல்பாகவே ஆச்சிரம இயக்கத்தை தோற்றுவித்தது.

கிறிஸ்தவ ஆச்சிரம இயக்கத்தை இந்திய கிறிஸ்தவ மத்தியில் தொடங்கியவர் இந்திய வைத்தியராகிய டாக்டர்

## பிரதம சேவகர்

## வண ஐ.ரீ. யேசுசகாயம்

எஸ். இயேசுதாசன் அவர்களாகும். இவருடைய ஆச்சிரமம் 1921ம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் எனும் கிராமத்தில் கிறிஸ்துகுல ஆச்சிரமம் என்ற பெயருடன் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதைத் தொடர்ந்து 1924ம் ஆண்டு மார்கழி மாதத்தில் சென்னையில் நடைபெற்ற கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து அநேகமான தலைவர்களுள் யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலிருந்த திரு. செல்வரத்தினமும் ஒருவராவர். இவர் இந்த மகாநாட்டில் டாக்டர் இயேசுதாசனை சந்திக்க நேர்ந்தது. அவருடைய கருத்துக்



சிரித்த முகம், அன்புடன் பேசும் பண்பின் உருவம். இவர்தான் "பெரியண்ணன்" என்று கிறிஸ்தவர்களால் செல்லமாக அழைக்கப்படும் மறைத்திரு வண. செல்வரெத்தினம். ஆச்சிரம ஸ்தாபகர். குட்டிக் கதைகளை உதாரணம் காட்டி நகைச்சுவை ததும்ப போதனை செய்யும் ஆற்றலுள்ளவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் பேச்சுத் திறனுள்ளவர். தமது சுவிசேஷ வேலைகளைக் கவனிக்க ஒரு ஸ்கூட்டர் வைத்திருக்கிறார். தேவ ஊழியத்திற்காக உலகத்தைப் பல தடவை சுற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் திரு. செல்வரெத்தினத்தை மிகவும் கவர்ந்தன, 1927ம் ஆண்டு தனது படிப்பை முடித்ததும் திரு. செல்வரெத்தினம் அவர்கள் கல்கத்தா நகரிலுள்ள சிறும்பூர் இறையியற் கல்லூரியில் இறையியற் படிப்புக்காகச் சென்றிருந்தார். தனது விடுமுறை நாளில் மேல் குறிப்பிட்ட ஆச்சிரமத்தை போய்ப் பார்த்தார். இந்த நிறுவனத்தின் காட்சி தடுக்கமுடியாத வன்மையுடன் இவருடைய உள்ளத்தை வெகுவாக பதிந்தது. இவர் தன்னுடைய இறையியற் படிப்பை முடிக்கு முன்னர் தமது ஆச்சிரம வாழ்வை உடனே தொடங்கவேண்டுமென எண்ணலானார். அப்போது இவருடைய உடன் மாணவனும், கல்லூரி நண்பனுமான டாக்டர் டி. சி. நயில்ஸ் இவருக்கு புத்திகூறி இறையியல் கல்லூரிக்குத் திருப்பி அனுப்பினார்.

1927ம் ஆண்டு இவருடைய "ஆச்சிரமம் தொடங்கவேண்டுமென்ற" அவா உள்ளத்தில் நன்கு பதிவாயிற்று.


வாழ்ப்பளைத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிறிஸ்த சேவ ஆச்சிரமம் மட்டக்களப்பு கிரான் கிராமத்திலுள்ள கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தையாக, வளர்ந்து அரும் பெரும் தொண்டாற்றிவருகின்றன.

[illegible] ஆச்சிரமம் 1939ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தனது இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை [illegible] ஆவணி மாதம் (22.8.63)ல் கொண்டாடியது. மட்டக்களப்பு கிரானிலுள்ள ஆச்சிரமம் தனது பத்தாவது ஆண்டு விழாவை 5ம், 6ம் திகதிகளில் கொண்டாடுகின்றது.

இந்த ஆச்சிரமத்தில் ஊழியக்காரர்களாக, ஸ்தாபர் வண. செல்வரெத்தினம் "பெரியண்ணை" வண. சாம். ரீ. அல்பிறட் ஆகியோர் சேவக்காரர்களுடன் பணிபுரிகின்றனர்.

## வாழ்க்கை முறை

[illegible] தொடங்கிய ஆச்சிரமத்தில் ஒரு கட்டுப்பாடான ஆன்மிக வாழ்க்கை மேற்கொள்ளப்பட்டது. ஆச்சிரமத்தில் ஒரு கட்டுப்பாடான ஒரு ஆன்மிக வாழ்க்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆச்சிரமத்தின் நாளாந்தவாழ்க்கைகாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். காலை வழிபாடு செபாலயத்தில் நடைபெறும். [illegible] எல்லோரும் அரை மணி நேரம் அமைதி நிலையில் அமர்ந்திருந்தபின் தொண்டர்களில் ஒருவர் இறைவழிபாட்டை நடத்துவார். 7 மணிவரையும் எல்லோரும் அமைதியில் இருப்பர். ஆகாரத்தின்பின் ஒவ்வொருவரும் தத்தம் வேலையைச் செய்யத் தொடங்குவர். ஆச்சிரம வளவையும் கட்டடங்களையும் பெருக்கிச் சிலர் சுத்தம் செய்வர், சிலர் தோட்ட வேலை செய்வர். தொண்டர்களுக்குச் சிலர் சமையல் செய்வர். நூல்களை வாசிப்பதில் ஆர்வமுள்ள சிலர் நூலகத்தில் இருந்து ஆராய்ச்சி செய்வர். இங்கு வசிக்கும் சிறுவர் தத்தம் பாடசாலைக்கு செல்வர். மிருதியாரோ நண்பகலில், மன்றாட்டுச் செபத்தில் தரித்திருப்பர். மாலை 6.30 மணிக்கு எல்லோரும் செபாலயத்தில் நடைபெறும் மாலை வழிபாட்டில் கலந்து கொள்வர். இரவு 9 மணிக்கு நடைபெறும் குடும்ப ஜெபத்துடன் ஆச்சிரமத்தின் நாளாந்த வாழ்க்கை முடிவடைகிறது. இங்கு அமைக்கப்பட்டுள்ள பெரிய மணியின் ஓசை, ஆச்சிரமத்தில் ஒரு ஜெபச் சூழ்நிலையை உருவாக்குகிறது. இம் மணி காலை 5 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும், மாலை



ஆச்சிரமத்தில் பாட்டென்றால் "சின்னண்ணன்" அருமையுடன் காக வேண்டும். தாமைத் தியாகமே தானே மீட்டிக் கொண்டு புதிய மெட்டுகளில் கிறிஸ்தவ கீதங்களை இவர் இசைப்பதே தனி இன்பம் தரும். ஆச்சிரமத்தின் பிரதம சேவக் ஐ. சி. யோசசகாயம் இவர்கள். சிறந்த பிரசங்கி. கிறிஸ்தவ பிரசங்க ஊழியத்திற்காக இவர் அடிக்கடி தமிழகம் செல்வதுண்டு. ஆச்சிரம ஊழியத்தில் 30 ஆண்டுகளாக 'பெரியண்ணனுக்கு' உத்தாசையாகவிருக்கும் 'சின்னண்ணன்' கிரான் ஆச்சிரமத்தில் எட்டு ஆண்டுகளாக பணி புரிந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆச்சிரம வாழ்க்கை கண்டிப்பானது. ஆச்சிரமத்தில் வதியும் கிறிஸ்தவ இளைஞர்களுக்கும் இது நன்கு போதிக்கப்பட்டிருக்கிறது. இதனை மனதில் பதியவைக்கும் பணி இவரோடு சேர்ந்தது. அவர்தான் வண. சாம். சி. அபி[illegible] ஆச்சிர[illegible] நண்பர்கள் இவரை "சாம் அண்ணன்" என்றழைப்பர்.

6 மணிக்கும் ஜெபத்திற்காகவும், ஆராதனைகளுக்காகவும் ஒலிக்கும். இங்கு பரிமாறப்படும் உணவு ஆடம்பரமற்ற [illegible] உணவாகும்.

10வது நிறைவாண்டைக் கொண்டாடும் கிரான் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம் சமுதாயத்தோடு நெருங்கி செயல்படுவதால் மகிமைக்குரியதாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரான் கிறிஸ்த சேவ ஆச்சிரமம்
# பொன்விழா சிறப்புக்குழுக்கள்

**அண்ணன்மாரின் நினைவுத்தூபி**
**சாம் அண்ணன் நினைவு மண்டபம் (கட்டிடக்குழு)**

1. அருட்பணி அன்ரனி சதீஸ் (ஒருங்கிணைப்பாளர்)
2. அருட்பணி சந்திரன் கிறிஸ்பஸ்
3. அருட்பணி D.S. மதியாபரணம்
4. அருட்பணி S.S. ஞானராஜா
5. அருட்பணி E.P. சொலமன்ஸ்
6. திரு. R.G. தயாளன்
7. திரு. S.I. றெஜினோல்ட்

**நிதி சேகரிப்பு, நிதியாளுகைக்குழு**

1. அருட்பணி. அன்ரனி சதீஸ் (ஒருங்கிணைப்பாளர்)
2. திரு. E. தேவ மனோரஞ்சன்
3. திரு. R. கேசவமேனன்
4. திரு. றோய் மாணிக்கம்
5. திரு. S.G. தயாளன்

**CD வெளியீட்டுக்குழு**

1. அருட்பணி S.S. ஞானராஜா (ஒருங்கிணைப்பாளர்)
2. அருட்பணி அன்ரனி சதீஸ்
3. திருமதி தர்சினி டானியேல்
4. திரு. S.I. றெஜினோல்ட்

**சிறப்பு மலர் வெளியீட்டுக் குழு**

1. திரு. N.W. அருள்சீலன் (ஒருங்கிணைப்பாளர்)
2. அருட்பணி. ஜோன் அற்புதமணி
3. அருட்பணி. சதீஸ் டானியேல்
4. திரு. S.G. சௌந்தரராஜா
5. திரு. J.K. தாமோதரம்
6. திரு. N.K. தயாளகுணசீலன்
7. செல்வி. P.J ஜெயவீரரெட்ணம்
8. செல்வி. D.K ஜெயவீரரெட்ணம்
9. திரு. A. ஜெயஜீவன்

திரு. N. நிரோஷன் *(ஆச்சிரமப் பொறுப்பாளர்)*
மேலுள்ள அனைத்துக் குழுக்களிலும் அங்கம் வகிக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org